Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 15 செவ்வாய்க்கிழமை (27-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:154

27 APR 2004

## குருநாகலில் குண்டை வெடிக்க வைத்து தமிழ் இளைஞர் ஒருவர் தற்கொலை!

குருநாகல்,ஏப்.27

குருநாகல் பொல்வத்தபிட்டிய என்ற இடத்தில் வீதியோரத்தில் நேற்றுக் காலை 6 மணியளவில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் தமிழ் இளைஞர் என்றும் - அவரே குண்டை வெடிக்க வைத்துத் தற்கொலை செய்து கொண டார் என்றும் - கூறப்பட்டது.

உயிரிழந்தவரின் சட்டைப்பையில் கிடந்த அடையாள அட்டையின்படி அவர் மட்டக்களப்பைச் சேர்ந்த கே.துரைராஜசிங்கம் என்று அடையா ளம் காணப்பட்டார். கனகசபை என்ற பெயரிலான கடவுச்சீட்டு ஒன்றும் அவர் வசம் இருந்திருக்கின்றது.

உயிரிழந்தவருக்கு அருகில் கைத தொலைபேசி ஒன்றும் கண்டெடுக்கப பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி அவர் தொடர்புகொண்ட தொலைபேசி இலக்கங்கள் தொடர்பாக பொலீஸார் விஷேட கவனம் எடுத்து விசாரணை நடத்தி வருகின்றார்கள்.

அவருக்கு அருகில் சீனத்தயாரிப பான சிறிய ரக ரைபிள் ஒன்றும் கிடந் ததாகக் கூறப்பட்டது. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

அண்மையில் மட்டக்களப்பு மற்றும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மினிபஸ்ஸுக்கு வெளியே தலைநீட்டிய சிறுமி கம்பத்தில் தலைமோதிப் பலி!

### வடமராட்சியில் பரிதாபச் சம்பவம்

கரவெட்டி,ஏப்.27

மினிபஸ்ஸில் பயணித்துக்கொண்டி ருந்தபோது, வெளியே தலையைநீட்டி வேடிக்கைபார்த்த சிறுமி மின் கம்பத் தில் தலை மோதியதில் உயிரிழந் தார். பருத்தித்துறை ஓடக் கரைப் பகுதியில் இந்தப்பரிதாபச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் இடம்பெற்றது.

அன்ரனி வென்சன் ஜுபிற்றா (வயது 13) என்ற சிறுமியே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார். பலாலி ஆரோக்கியமாதா கோவிலடியி லிருந்து இடம்பெயர்ந்து இச்சிறுமி யின் குடும்பத்தவர் பருத்தித்துறை ஊரிஞ்சம்மன் ஆலயப்பகுதி முகாமில் வசித்துவந்தனர்.

நேற்று திருமண நிகழ்வொன்றிற் காக அவர்கள் மினிபஸ்ஸில் பயணித்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவினர் வெறியாட்டம் எனக் குற்றச்சாட்டு:

# மட்டு. ஆயித்தியமலையில் 7 புலிகள் சுட்டுக் கொலை!

## அவர்களில் நான்கு பேர் ஊனமுற்றவர்கள் வெள்ளை வானில் வந்தோர் கைவரிசை

மட்டக்களப்பு,ஏப்ரல்27

**மட்டக்களப்பு வவுணதீவுக்கு அருகே ஆயித்தியமலைப் பகுதியில் ஞாயிறு நள்ளிரவு வெள்ளை வான் ஒன்றில் வந்த கருணா குழுவைச் சேர்ந்த ஆயுததாரிகள், விடுதலைப் புலிகள் ஏழு பேரைச் சுட்டுக்கொன்று வெறியாட் டம் நடத்தியிருக்கின்றனர்.**

**முன்னரங்கக் காவல் நிலைகளில் இருந்த மூன்று போராளிகளையும் அதற்கு சில கிலோ மீற்றர் தூரம் அப்பால் ஒரு முகாமில் தங்கியிருந்த உடல் ஊனமுற்ற போராளிகள் நால்வரையும் அவர்கள் துப்பாக்கியால் சுட்டும் குண்டை வெடிக்கவைத்தும் கொன்றிருக்கின்றனர்.**

**இராணுவத்துடன் இயங்கும் கருணா குழுவினரே இந்தக் கொடூரத்தைப் புரிந்திருக்கிறார்கள் எனப் புலிகள் குற்றம் சுமத்தியிருக்கிறார்கள்.**

சாரம் அணிந்த இருவரும் மற் றைய இருவருமாக வந்த நால்வர் கொண்ட குழுவே தனது கைவரிசை யைக் காட்டியிருக்கின்றது.

மட்டக்களப்புக்கு அப்பால் வவுண தீவில் இராணுவத்தின் முகாம் உள்ளது. அதையொட்டி அதிலிருந்து 2 கிலோமீற்றர் தொலைவுக்கு அப் பால், புலிகளின் முன்னரங்கக் காவல் நிலையம் ஆயித்தியமலைப் பக் கத்தில் அமைந்திருக்கின்றது.

இருதரப்பினரதும் பயணிகள் போக்குவரத்துச் சோதனைச்சாவடி கள் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூர இடைவெளியில் அமைந்துள்ளன.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு 11.55 மணியளவில் முதலாவது சம்பவம் புலி களின் பிரதேசத்தில் உள்ள முள்ளா முனை என்ற இடத்தில் நடந்துள்ளது.

வவுணதீவு - ஆயித்தியமலை பிரதான வீதி, வவுணதீவு முகாமிலி ருந்து சுமார் 8 கிலோமீற்றர் தொலை வில் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் - முள்ளாமுனை என்ற இடத்தில் உள்ள புலிகளின் தற்காலிக முகாமிலேயே இச்சம்ப வம் இடம்பெற்றது.

யுத்த நடவடிக்கைகளில் பாதிக் கப்பட்டு இரு கண்களையும் இழந்த ஒரு போராளியும், கால் ஊனமுற்று நடக்க முடியாத இரு போராளிகளும் நரம்புப் பாதிப்பால் உடல் இயங்க

(14ஆம் பக்கம் பார்க்க)

## சு.கூட்டமைப்புக்குள் இழுபறி தீர்ந்தது; ஜே.வி.பி.அமைச்சர்கள் பதவியேற்பர்

கொழும்பு,ஏப்.27

ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்ட மைப்பின் பிரதான பங்காளிக்கட்சி யான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் நிலவிவந்த இழுபறி சுமுகமாகத் தீர்க்கப்பட்டதை யடுத்து ஜே.வி.பி.சார்பில் அமைச்சர்கள் பதவிக்கு நியமிக்கப்பட்டவர்கள் நாளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியை ஏற்றுக்கொள்வார்கள்.

ஜனாதிபதி தலைமையில் ஸ்ரீல.சு.க பிரமுகர்களும், ஜே.வி.பி.பிரமுகர்களும் நேற்றுக்கூடி இப்பிரச்சனை குறித்து விரி வாக ஆராய்ந்தனர். அதையடுத்து இப் பிரச்சினைக்குச் சுமுகத்தீர்வு ஏற்பட் டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மகாவலி அபிவிருத்தி அமைச் சைத் தங்களுக்கு வழங்குவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பை உருவாக்கும் சமயத்தில் ஒப்புக்கொண்டுவிட்டு, பின்னர் புதிய அரசு அமைத்ததும் அதைத் தர ஜனா திபதி மறுத்துவிட்டார் என்பதே ஜே.வி.பி. எழுப்பிய பிரச்சினையாகும்.

பாதுகாப்பு அமைச்சுக்கு அடுத்து அதிகளவில் ஆயுதங்களையும் இராணு

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவு திரட்ட ஜனாதிபதி திட்டம்

கொழும்பு,ஏப்.27

அரசமைப்பில் திருத்தங்களை மேற் கொள்வது தொடர்பாக ஜனாதிபதி, புதிய சபாநாயகர் மற்றும் எதிர்கட் சித்தலைவர் ஆகியோரிடையே பேச்சு நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச்சந்திப்பின் போது அரசமைப்புத திருத்தம் தொடர்பாக ஐ.தே.கட்சி கொண்டுள்ள கருத்துக்கள் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங கவிடம் உத்தியோகபூர்வமாக விளக்க வுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

ஜனாதிபதி மாளிகைத் தகவல் களின்படி தற்போதைய நாடாளுமன் றத்தை அரசமைப்புச் சபையாக மாற் றுவது தொடர்பாக சபாநாயகர் டி.ஜே. எம்.லொக்குபண்டாரவின் உதவியை ஜனாதிபதி எதிர்பார்த்திருக்கிறார் என் றும் தெரியவந்துள்ளது.

மேற்கொள்ளப்படவிருக்கும் பேச் சுக்களின் போது, அரசமைப்பு திருத் தத்துக்கு அனுசரணை வழங்க ஐ.தே. கட்சி சம்மதம் தெரிவிக்குமாயின், அர சமைப்பை நகல் சட்டமாக்கும் சட்ட வல்லுநர் சபைக்கு ஐ.தே.கட்சியின உறுப்பினர்கள் சிலரை நியமனம் செய்வதற்கான வாய்ப்பு உருவாகு மெனவும் ஜனாதிபதி மாளிகைத் தக வல்கள் மேலும் தெரிவித்துள்ளன.

சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன் பேச்சு மேற்

(14ஆம் பக்கம் பார்க்க)

## எப்படியும் நாடாளுமன்றம் செல்ல ரத்வத்த மீண்டும் பிரயத்தனமாம்

கொழும்பு,ஏப்.27

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன் னணியின் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்கு ஓர் உறுப்பின ராக நுழைவதற்கு முயன்று தோற் றுவிட்ட ஜெனரல் அனுருத்த ரத்வத்த தம்மை தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்கு நியமிக்கும்படி மீண்டும் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவிடம் கோரியிருக்கிறார் என்று தகவல்கள் கூறுகின்றன.

அரசமைப்புச்சட்டத்தில் திருத்தங் கள் கொண்டுவர உத்தேசிக்கப் பட்டிருப்பதால் இவ்விடயங்களில் விரி வான அறிவுடைய சட்டவல்லுநர் ஒரு வரை தேசியப்பட்டியல் மூலம் நாடாளு மன்றத்திற்கு நியமிப்பதற்கு ஜனா திபதி நடவடிக்கை எடுத்துவருகி றார். இந்தச்சந்தர்ப்பத்தில் ஜெனரல் ரத்வத்தயின் விண்ணப்பம் வந்தி ருப்பதாகக் கூறப்படுகிறது. அரச மைப்பு சட்ட வல்லுநர்கள் ஜயம்பதி விக்கிரமரட்ண மற்றும் விஜயதாச ராஜபக்ஷ ஆகியவர்களில் ஒருவரை தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன றத்திற்கு நியமிப்பதில் ஜனாதிபதி அக்கறை கொண்டிருக்கிறார் என்று

(14ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் ஆதரவுடனேயே கருணா குழு தாக்கியதாகப் புலிகள் கடும் குற்றச்சாட்டு

### அரசாங்கத்துக்கும் எச்சரிக்கை

கிளிநொச்சி,ஏப்.27

மட்டக்களப்பில் தமிழீழ விடுத லைப் புலிப் போராளிகள் 7 பேர் கரு ணாவின் தேசவிரோத குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் ஸ்ரீலங்கா படைத்தரப்புக்கு தொடர்பு உள்ளது என்று கடுமையாகக் குற்றஞ் சாட்டியுள்ள புலிகள், இதற்காக அர சாங்கத்தையும் வன்மையாக எச்சரித் துள்ளனர்.

இந்தச் சம்பவத்துக்கு அவர்கள் கடும் கண்டனத்தையும் தெரிவித்துள ளனர்.

இந்தத் தாக்குதலை வவுணதீவு ஸ்ரீலங்கா இராணுவ சோதனைச் சாவடியூடாக வந்த தேசவிரோதி கருணாவின் ஆதரவாளர்களே நடத் தியதாக தமிழீழ விடுதலைப் புலிகள் நம்புகின்றனர்.

இக்கொலைச் சம்பவத்தின் பின் னர் தேசவிரோதக் குழுவினர் ஸ்ரீலங்கா இராணுவ சோதனைச் சாவடி யூடாகவே திரும்பிச் சென்றுள்ளார் கள். எனவே, இராணுவத்திற்குத் தெரி யாமல் தேசவிரோதி கருணா குழு வினர், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்து தாக்குதல் நடத்திவிட்டு வெளியேறு வது சாத்தியமற்றது என்று விடுத லைப் புலிகள் நம்புகின்றனர்.

கருணா குழுவிற்கு இராணுவம் ஆதரவு வழங்குவதானது தமிழீழ விடு தலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற் கும் இடையிலான போர்நிறுத்த உடன் பாட்டை சுமுகநிலையிலிருந்து விலத் திச் செல்லும் என்றும் தமிழீழ விடுத லைப் புலிகள் வன்மையாக எச்சரித் திருக்கின்றனர்.

இந்த விடயங்களை உள்ளடக் கிய அறிக்கை ஒன்று தமிழீழ விடுத லைப் புலிகளால் இலங்கை போர் நிறுத்தத் கண்காணிப்புக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விசாரணை களைத் தாம் மேற்கொண்டு வருவ தாக இலங்கை போர்நிறுத்த கண் காணிப்புக் குழு, தமிழீழ விடுதலைப் புலிகளிடம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவம் குறித்துத் தமக்கு எதுவும் தெரியாது என்று இராணுவம் நேற்றிரவு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

(ஓ-9-12)

## இருவருக்கு வாள் வெட்டு!

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்.ஐந்து சந்திப்பகுதியிலும், இணுவிலிலும் இடம்பெற்ற இரு வெவ்வேறு வாள்வெட்டுச் சம்பவங் களில் காயமடைந்த இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற் றிரவு சிகிச்சை பெற்றனர்.

நேற்றிரவு 9.30 மணிக்கு ஐந்து சந்திப்பகுதியில் மோட்டார் சைக்கிளில்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



யாழ்.பல்கலையில் நேற்று இடம்பெற்ற தந்தை செல்வாவின் நினைவுதின நிகழ்வில் தந்தை செல்வாவுடன் இணைந்து அரசியலில் ஈடுபட்டோர் கௌரவிக்கப்படுகின்றனர்.
(படங்கள் அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# தந்தை செல்வா நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.27

தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் 27 ஆவது நினைவுதினம் நேற்று மாலை 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மங்கள விளக்கேற்றி தந்தை செல்வாவின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்தினை மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வின் வரவேற்புரையினை யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினா மாவை சேனாதிராசா நிகழ்த்தினார். அவரைத்தொடர்ந்து 'தமிழ்த் தேசியமும் தேர்தல்களும் - ஒரு பார்வை' என்ற தலைப்பில் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.

அங்கு வெளியிட்டு வைக்கப்பட்ட கவிஞர் தில்லைச்சிவன் எழுதிய 'தந்தை செல்வா காவியம்' என்னும் நூலின் அறிமுக உரையினை தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் அதி.வண.எஸ்.ஜெபநேசன் அடிகளார் நிகழ்த்தினார்.

தந்தை செல்வாவுடன் இணைந்து அரசியல் பணிகளில் ஈடுபட்ட 14 பேர் "தந்தை செல்வா விருது" வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இவ்விருதினை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, தென்னிநதியத் திருச்சபையின் பேராயா அதி.வண.எஸ்.ஜெபநேசன் அடிகளார் ஆகியோர் வழங்கினர்.

சச்சிதானந்தம், பண்டிதர் நாகலிங்கம், வித்துவான் வீ.கந்தையா, பூ.ம.செல்லத்துரை, அல்காஜ் எஸ்.எம்.மௌலானா, கலாபூசணம் அரசரட்ணம், மா.க.ஈழவேந்தன், கலாபூசணம் எஸ்.எவ்.எம்.லத்தீப், மு.க.தென்னரசு, ந.அருணாசலம், க.ஆனந்தகுமாரசாமி, வே.கணவதிப்பிள்ளை, க.வினாசித்தம்பி, ஜோசப் சேவியர் ஆகியோரே கௌரவிக்கப்பட்டவர்கள் ஆவர். இவர்களில் அல்காஜ், எஸ்.எம்.மௌலானா நிகழ்வில் சமுகமளிக்கவில்லை. வித்துவான் வ.கந்தையா சார்பில் அவரது மகள் நிகழ்வில் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், ந.ரவிராஜ், செ.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிகாந்தா உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, நேற்றுக்காலை 9.30 மணிக்கு யாழ்.முற்றவெளியில் அமைந்துள்ள தந்தைசெல்வா நினைவுத்தூபியில் மலரஞ்சலி இடம்பெற்றது. (ஒ-6-51-86)

# சிறையிலிருந்த இந்தியப்படகோட்டிகள் தமது தாயகம் நோக்கிப் புறப்பட்டனர்

யாழ்ப்பாணம்,ஏப்.27

இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவிய சமயம் கைது செய்யப்பட்டு பின்னர் யாழ்.மேல் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட 54 தமிழக மீனவப்படகோட்டிகளும் தமிழகத்துக்கு நேற்றுப்புறப்பட்டனர்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட இந்த மீனவப்படகோட்டிகள் 54 பேர் மீது யாழ்.மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரணை செய்த மேல் நீதிமன்றம், அவர்களுக்கு அபராதம் விதித்தது. அதேவேளை அவர்கள் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த காலத்தைக் கருத்திற்கொண்டு அவர்களை விடுவிக்க மேல நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி விடுவிக்கப்பட்ட 15 பேரும் 30 ஆம் திகதி விடுவிக்கப்பட்ட 39 பேரும் யாழ்.சிறைச்சாலையில் இருந்து நேற்றுக் காலை அழைத்துச்செல்லப்பட்டு இலங்கைக் கடற்படையினரால் இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஒ-3-7)

# குடாநாட்டில் காணாமற்போனோர் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணை

## யாழ்.மாவட்ட பொலீஸ் நிலையங்களில் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஏப்.27

குடாநாட்டில் 1996 ஆம், 1997 ஆம ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ள கீழ்க் காணும் நபர்கள் சம்பந்தமான குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த விசாரணைக்காகக் கொழும்பிலிருந்து குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் காணாமற்போனவர்கள் சம்பந்தமான விசாரணைப் பிரிவினர் இங்கு வருகை தந்துள்ளனர்.

குறிப்பிட்ட பெயரையுடைய காணாமற் போனவர்களின் பெற்றோர், பாதுகாவலர், முறைப்பாட்டுக்காரர் அல்லது இவர்களில் எவரேனும் இடம்பெயர்ந்து அல்லது வெளிநாட்டில் வசிப்பவராயின் அவர்களது உறவினர்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொலீஸ் நிலையத்திற்கு குறிப்பிட்ட திகதியில் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

### யாழ்ப்பாணம்

அன்டன் மனோகரன் ஜீவகுமார் சிறீதரன் (இல.10/4, கண்டி வீதி, குருநகர்), அருளானந்தன் சார்ல்ஸ் (இல. 50/3, இராசலிங்கம் வீதி, யாழ்ப்பாணம்), அருளாநந்தம் உதயகுமார் (இல. 34, 3 ஆம் குறுக்குத் தெரு, அராலி வீதி, யாழ்நகர்), செல்லையா கந்தசாமி (கோண்டாவில்),யேசுதாஸ் பெலண்டயின்(இல. 78/11 கடற்கரை வீதி, நாவாந்துறை), கே.நேசகுமார் (கோண்டாவில்).

மரியதாஸ் அன்டன் மார்கலன் (இல.23 புதிய பூங்கா வீதி, குருநகர்), என்.அருளம்பலம் (இல. 75 கி.எஸ். ஒழுங்கை, கண்டி வீதி, யாழ்ப்பாணம்), ரி.தங்கராஜா (கல்வியங்காடு), எஸ். சசீந்தன் (இல. 55, பாடசாலை ஒழுங்கை வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்).

### சாவகச்சேரி

அன்டன்ஜுட் சத்தியநாதன் (3 ஆம் குறுக்குத் தெரு, பாசையூர்), அப்பையா கேதாரகௌரி (கைதடி), கட்டையன் சண்முகலிங்கம் (கைதடி), கனகரத்தினம் கிரிதரன் (கந்தரோடை, கைதடி), மீனாட்சி தவராசா (முள்ளி வீதி, அரியாலை),

நவசி ஜெயசீலன் (நுணாவில் சந்தி), பாலசுப்பிரமணியம் துஷ்யந்தன் (இல. 32/1 அராலி தெற்கு, மீசாலை), ஜேசுதாசன் மரியநாயகம் (உசன்), நடராசா ஜோதிபாரதி (மட்டுவில் தெற்கு), நாகராஜா பகீரதன் (கண்ணன் கோயிலடி, மட்டுவில்), அசிதலிங்கம், அப்புக்குட்டி (தவசிகுளம், கொடிகாமம்),

கந்தையா குணநாதன் (காஞ்சனாவடி, கொக்குவில்), மார்க்கண்டு ரெங்கநாதன் (சப்பச்சிமாவடி, சாவகச்சேரி), நிக்சன் ஜராட் (பிள்ளையார் கோவிலடி, நெடுங்குளம்),

### மானிப்பாய்

அன்டன் யோசவ் (நாவற்குழி), கந்தையா தியாகராஜா (வசாவிளான்), அந்தோனிப்பிள்ளை மருசீலன் (புன்னாலைக்கட்டுவன் தெற்கு), பாலசுப்பிரமணியம் துஷ்யந்தன் (புன்னாலைக்கட்டுவன் தெற்கு), கந்தன் இந்திரன் (உயரப்புலம், இளவாலை), கே.பத்மரத்தினம் (நவாலி), கிட்னர் அமிர்தலிங்கம் (இல.24, கட்டுக்குளம் வீதி, கோப்பாய்), நல்லதம்பி விக்னேஸ்வரன் (பொலிகண்டி வீதி, கோப்பாய்), கலைராஜ் நடராசா (கொண்டலடி, சங்கானை), கல்யாணி சுந்தரம் (நீர்வேலி வடக்கு), கந்தையா சிவகுமார் (சுதுமலை தெற்கு), நடராசா ரவீந்திரன் (சேமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை), நாகமுத்து கோபிராஜ் காணாமற் போனது சம்பந்தமாக சாட்சிகள்:- கண்ணன் அவரின் மனைவி உமா (ஆனந்தன் வீதி, மானிப்பாய்),

சாவகச்சேரிப் பொலீஸ் நிலையத்தில் நாளை புதன்கிழமையும், மறுநாள் வியாழக்கிழமையும் - மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் எதிர் வரும் 30 ஆம் திகதியும் - யாழ். பொலீஸ் நிலையத்தில் எதிர் வரும் முதலாம், இரண்டாம் திகதிகளிலும் விசாரணைகள் நடைபெறவுள்ளன. (எ-10)

# உலக வங்கியின் உதவியுடன் குடாநாட்டில் வீடமைப்புத்திட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.27

உலகவங்கியின் உதவியுடன் குடாநாட்டில் ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளில் வீடுகள் அமைக்கப்படவிருக்கின்றன.

யாழ்ப்பாணம் வந்த உலக வங்கியின் வீடமைப்புத்திட்ட நிபுணரான, இந்தியாவைச்சேர்ந்த நாராயணன் வீடமைப்புத்திட்டம் தொடர்பாக கடந்த இரு தினங்கள் ஆராய்ந்தார்.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் மற்றும் பிரதேச செயலர்களுடன் ஆலோசனை நடத்திய அவர் நேற்று மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவுக்குச் சென்றார்.

வேலணை, சாவகச்சேரி, உடுவில், யாழ்நகரம், மருதங்கேணி ஆகிய பிரதேசசெயலர் பிரிவுகளில் முதலில் வீடமைப்புத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கில் 8 மாவட்டங்களிலும் 3 லட்சம் வீடுகளை 6 வருடங்களில் அமைக்கும் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக நூறு மில்லியன் டொலர் உதவியை உலக வங்கி வழங்கவிருக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் ஒருலட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவில் ஒவ்வொரு வீடுகளும் அமைக்கப்படும்.

இத்திட்டத்துடன் சிமெந்து, கல் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, தென்னைமரச் சிலாகை போன்றவை தயாரிக்கும் தொழிற்சாலை ஆகியவற்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## பிரேத பரிசோதனை

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்.நகரின் மத்தியில் வின்ஸ்ஸர் திரையரங்குக்குப் பின்புறமாகவுள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட இரண்டு சடலங்களில் இது வரை அடையாளம் காணப்படாத சடலம் நேற்றுப் பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது.

இறந்தவர் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமைக்கான அறிகுறி பிரேத பரிசோதனையில் தெரிய வந்துள்ளது என்று யாழ்.பொலீஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலீஸ இன்ஸ்பெட்டர் விக்கிரமரத்ன பண்டா தெரிவித்தார்.

இதேவேளை சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.(ஒ-7)

# தமிழக சுவாமிகள் இன்று வருகை

யாழ்ப்பாணம்,ஏப்.27

தமிழகத்தின் காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீன குருமகா சந்நிதானம் இன்று யாழ்ப்பாணம் வர உள்ளார். அவர் நல்லை ஆதனத்தில இடம்பெறும் நிகழ்விலும் பங்கேற்க உள்ளார். (ஒ-12)

# மேதின ஏற்பாடு தொடர்பான கலந்துரையாடல்

எதிர்வரும் மேதினத்தை சிறப்பாக முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் முகமாக நாளை புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் ப.நோ.கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறும் மேநாள் ஏற்பாட்டுக் கலந்துரையாடலில் அனைத்துச் தொழிற்சங்களின் நிர்வாக பிரதிநிதிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட மே நாள் ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஒ)

# அரியாலைப் பகுதியில் நேற்று இரு குழுக்களிடையே மோதல்

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்.அரியாலைப் பகுதியில் இரு குழுக்களிடையே நேற்று மீண்டும் மோதல் இடம்பெற்றது. அரியாலை மேற்குப்பகுதியில் கடந்த 10 நாள்களுக்கும் மேலாக இந்த இரு குழுக்களும் மோதல்களில் ஈடுபட்டு வந்தன. அதன் தொடர்ச்சியாகவே நேற்றும் மோதல் நடந்தது.

நேற்ற நண்பகல் இப்பகுதியில் இரு குழுக்களிடையே சண்டைகள் இடம்பெற்றன. இதனையடுத்து அப்பகுதிக்கு விடுதலைப் புலிகளின் யாழ்.நல்லூர் கோட்ட அரசியல் துறையினர் சென்று அப்பகுதி பொதுமக்களுடன் கலந்துரையாடினர். அத்துடன் மோதலில் ஈடுபட்ட இரு தரப்பினருக்கும் அறிவுரைகளை அவர்கள் வழங்கினர்.

இதேசமயம், மோதல்களில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் நல்லூர் கோட்ட அரசியல்துறையினர் ஏற்பாடு செய்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது. (ஒ-12)

# துப்பாக்கி கடத்திய மாத்தறை வாசிக்கு பிணை அனுமதி வழங்கினர் புலிகள்

## தந்தையின் மறைவுத் தகவலை அடுத்து

கிளிநொச்சி,ஏப்.27

ரி 56 ரக துப்பாக்கி ஒன்றை வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் கடத்திக்கொண்டு வருகையில் கைது செய்யப்பட்டவர் எனக் கூறப்படும் சிங்கள ஒப்பந்த வேலையாள் ஒருவரை விடுதலைப் புலிகளின காவல் பிரிவினர் பிணையில் விடுத்திருக்கின்றனர். செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

சஜித் ஹேமந்த என்ற மாத்தறையைச் சேர்ந்த நபரே 2003 ஒக்ரோபரில் பரந்தனில் வைத்துத் தமிழீழக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சியில் உள்ள தமிழீழ நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

அவரின் தந்தை இறந்து விட்டார் என்ற தகவல் கிடைத்ததை அடுத்து, அவரை மனிதாபிமான அடிப்படையில் பிணையில் விடுவிக்க புலிகள் தீர்மானித்தனர் அதையடுத்தே அவர் விடுவிக்கப்பட்டார். (க)

# ஈராக்கில் சர்ச்சைக்குரிய பலூஜாவில் தாக்குதலை தள்ளிப்போட்டது அமெரிக்கா

பக்தாத்,ஏப்.27

ஈராக்கின் சர்ச்சைக்குரிய நகரான பலூஜாவில் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போர் நடவடிக்கையை ஆரம்பிப்பதை அமெரிக்கா மேலும் இரு நாள்கள் தள்ளிப்போட்டுள்ளது.

சண்டையைத் தவிப்பதற்காக ஈராக்கிய நிர்வாகிகள் கிளர்ச்சியாளர்களுடனும் அமெரிக்கப்படையினருடனும் சமரசப் பேச்சில் ஈடுபட்டனர். அதன் மூலம் இணக்கம் ஒன்று எட்டப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அதனைச் சரிவரப் பின்பற்றுவதில்லை என்று இரு தரப்புகளும் ஒன்றையொன்று மாறி மாறிக் குற்றஞ்சாட்டி வந்தன.

இதனையடுத்து கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல்களை ஆரம்பிக்கப்போவதாக அமெரிக்கப்படையினர் கூறிவந்தனர். இதற்காக மேலதிக துருப்பினர் பலூஜா நோக்கி நகர்த்தப்பட்டனர்.

இழப்புக்கள் ஏதுமின்றி இலக்கை அடையும் நோக்குடன் சண்டையைத் தவிர்த்து கிளர்ச்சியாளர்கள் தமது ஆயுதங்களை ஒப்படைக்க வசதியாக நடவடிக்கையை மேலும் இரு நாள்கள் தள்ளிப்போட்டுள்ளது. அமெரிக்கா.

ஈராக்கிலுள்ள அமெரிக்கப்படைகளின் தளபதி ஜெனரல் ஜோன் அபிஷயிட் மற்றும் அங்குள்ள அமெரிக்கத் தலைமை நிர்வாகி போல் பிறீமர் ஆகியோர் கடந்த சனியன்று பலூஜா நகருக்கு விஜயம் செய்தனர்.

அமெரிக்க ஒப்பந்தகாரர்கள் நால்வர் பலூஜாவில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கடந்த 5ஆம் திகதி அமெரிக்கப் படையினர் அந்த நகரத்தைச் சுற்றிவளைத்தனர். (க-8)

## சீனத் தூதரகம் மீது தாக்குதல்!

பெய்ஜிங்,ஏப்.27

ஜப்பான் நாட்டு மேற்குப் பகுதியல் ஒசாகா நகரில் சீன நாட்டு தூதரகக் கட்டடத்தின் நுழைவாயிலை ஜப்பான் நாட்டு தீவிரவாதி ஒருவர் குண்டுவீசித் தாக்கினார். தூதரகத்தின் வாயிலில் நிறுத்தப்பட்டிருந்த பஸ் சேதமடைந்தது. நுழைவாயில் கட்டடத்துக்குத் தீ வைக்கப்பட்டது.

இதைப் பார்த்த பொலீஸார் அங்கு விரைந்து தீயை அணைத்தார்கள். சீனத் தூதரகத்தை தகர்க்க முயன்ற ஜப்பான் நாட்டு இளைஞரைப் பொலீஸார் கைது செய்தார்கள். இந்தச் சம்பவத்தையொட்டி சீன நாட்டு அமைச்சரவை அவசரமாகக் கூடி ஆலோசனை செய்தது. (க-8)


## வத்திக்கான் நிர்வாக உயர் பதவியில் கன்னியாஸ்திரி

ரோம்,ஏப்.27

பாப்பரசரின் வத்திக்கான் நிர்வாகத்தில் ஒரு திணைக்களத்தின் உயர் பதவியில் 3ஆவது அந்தஸ்தில் கன்னியாஸ்திரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இத்தாலியைச் சேர்ந்த சகோதரி என்ரிகா ரோசன்னாவையே பாப்பரசர் நியமித்தார்.

கடந்த மார்ச் மாதம் அமெரிக்க பெண் பேராசிரியரான மேரி ஆன் கிளெண்டன், வத்திக்கான் அக்கடமியின் தலைவராக நியமிக்கப்பட்டார். ஒரு பெண் இது போன்ற ஒரு முக்கியமான பொறுப்புக்கு கத்தோலிக்க கிறிஸ்தவ மத நிர்வாகத்தில் நியமிக்கப்பட்டது இதுவே முதன்முறை.(க-8)

# சீனாவில் மீண்டும் சார்ஸ் 5 பேரைத் தாக்கியிருப்பதாக சந்தேகம்



சீனாவில் மீண்டும் சார்ஸ் பரவுவதை அடுத்து சீனாவின் பெய்ஜிங் நகர மருத்துவமனை ஒன்றில் முகமூடியுடன் பணியாற்றும் சுகாதாராப் பணியாளர்கள்.

பீஜிங்,ஏப்.27

கடந்த ஆண்டு சீனாவை உலுக்கிய சார்ஸ் நோய் இந்த ஆண்டு மண்டும் தலைதூக்கியுள்ளது. சார்ஸ் நோய் தாக்கியதாகச் சந்தேகிக்கப்படும் 53 வயதுப் பெண் ஒருத்தி சமீபத்தில் இறந்து போனார். சார்ஸ் நோய தாக்கியதால்தான் அவர் இறந்தாரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவர் உடலில் இருந்து இரத்தம் எடுக்கப்பட்டது.

சார்ஸ் நோய் பரிசோதனைக் கூடத்தில் வேலைபார்த்த இந்தப் பெண்ணின் பெயர் சோங். மீண்டும் சார்ஸ் நோய் பரவத் தொடங்கியதில், முதலில் பலியானது இவர்தான்.

இவருடன் நெருங்கிப் பழகிய 13 பேரில் 5 பேரை இந்த நோய் தாக்கியுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது. அவர்களைத் தனி அறையில் தங்க வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

# கருக்கலைப்பை ஆதரித்து பெண்கள் பெரும் பேரணி!

வாஷிங்ரன்,ஏப்.27

கருக்கலைப்பை சட்டபூர்வமானதாகத் தொடர்ந்தும் இருக்கவேண்டும் என்று வலியுறுத்தி ஆயிரக்கணக்கான பெண்கள் வாஷிங்ரனில் பெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

ஞாயிறன்று நடந்த இந்த ஊர்வலத்தில் அமெரிக்கா மற்றும் வேறு 60 நாடுகளில் இருந்து வந்த பெண்கள் கலந்துகொண்டனர்.

பெண்கள் மீள் உற்பத்தி உரிமையை (Women's Reproductive Rights) எவரும் அச்சுறுத்த முடியாது. அது அவர்கள் உடல் சம்பந்தப்பட்ட விடயம் - என்று ஊர்வலத்தை ஒழுங்குசெய்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இவர்களின் கருத்துக்கு எதிராக, உயிர்களை ஆதரிக்கும் அமைப்பும் ஊர்வலம் ஒன்றை நடத்தியது. எனினும் அதில் பெருமளவிலானோர் கலந்துகொள்ளவில்லை.

கருக்கலைப்பும் ஒரு கொலை என்று இந்த அமைப்பு வாதிடுகின்றது. கருக்கலைப்புக்கு ஆதரவாக 1992ஆம் ஆண்டில் முதல் முதல் மிகப்பெரிய ஊர்வலம் ஒன்று அமெரிக்காவில் நடத்தப்பட்டது. அப்போது முதல் அமெரிக்க அரசியலில் இந்த விவகாரம் முக்கிய இடத்தை வகித்துவருகிறது.

தற்போதைய அதிபர் புஷ் தலைமையிலான அரசு கருக்கலைப்பை சட்டவிரோதமாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறது.

இதனைக் கண்டித்தே ஞாயிறு ஊர்வலம் நடத்தப்பட்டது. அதற்கு மாறாக ஜோன் கெரியின் ஜனநாயகக்கட்சி கருக்கலைப்பை சட்டபூர்வமானதாக ஏற்றுக்கொள்கிறது.

ஊர்வலத்தில் கலந்துகொண்ட முன்னாள் அதிபர் கிளிண்டனின் மனைவி ஹிலாரி, புஷ் நிர்வாகம் பல விடயங்களில் பின்நோக்கியே செயற்படுகிறது என்று குற்றஞ்சாட்டினார்.

அதிலும் பெண்கள் விவகாரத்தல் குறிப்பாக பின்நோக்கியே செயற்படுகின்றது என்றார் அவர். (க)

# சீனச் சுவரில் 30 ஜோடிகள் திருமணம்



சீனாவில் திருமணச்செலவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து அங்கு இப்போது கூட்டு திருமணங்கள் நடத்துவதைத்தான் மக்கள் பெரும்பாலும் விரும்புகிறார்கள். இந்த கூட்டுத் திருமணங்கள் நடத்துவதால் ஆடம்பரச் செலவுகள் குறைகின்றது. நடுத்தர மக்களும் இதையே விரும்புகின்றார்கள்.

சானிசி மாகாணத்தில் உள்ள ஜியான் நகரம் 600 ஆண்டுகள் பழைமையானது சீன பெருஞ்சுவரின் ஒரு பகுதி இந்த நகரில் உள்ளது. சரித்திர புகழ் பெற்ற இந்த 600 ஆண்டுகள் பழைமையான நகரின் சுவரின் மீது 30 ஜோடிகளுக்கு இலவச திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. திருமணம் முடித்த 30 ஜோடிகளும் ஒன்றாக நின்று போட்டோவுக்கு போஸ் கொடுத்தனர். டீன் ஆட்சிக்காலத்தில் இந்த சுவர் கட்டப்பட்டது. (8)

# ஹொங்கொங்கில் 2007இல் தேர்தல் நடத்த சீனா மறுப்பு

பெய்ஜிங்,ஏப்27

ஹொங்கொங்கில் 2007ஆம் ஆண்டு தேர்தல் மூலம் மக்கள் தமது தலைவரைத் தேர்ந்தெடுக்கும் திட்டத்தை சீனா நிராகரித்துள்ளது.

பிரிட்டிஷாரிடமிருந்து ஹொங்கொங் சீனாவிடம் மீள் கையளிக்கப்படடதன் பின் அங்கு சீனாவால் நியமிக்கப்பட்ட ஆட்சியாளரே நிர்வாகத் தலைவராக இருந்து வருகின்றார்.

ஆனால், ஹொங்கொங்கில் உள்ள ஜனநாயக ஆதரவாளர்கள் தமது அடுத்த தலைவரைத் தேர்தல் மூலமே தேர்ந்தெடுக்கவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

ஹொங்கொங்கில்எந்த அரசியல் மாற்றங்களாயினும் அவை மெல்ல மெல்லவே நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சீனாவின் அதியுயர் அரசமைப்புச்சபை முடிவுசெய்துள்ளது.

ஹொங்கொங் நாடாளுமன்றத்துக்கான நேரத் தேர்தல் 2008ஆம் ஆண்டில் நடத்தப்படுவதற்கே சாத்தியம் என்றும் சீனா தெரிவித்துள்ளது.


சீனாவின் இந்த முடிவு குறித்து ஹொங்கொங் ஜனநாயக வாதிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர். தமது மக்களின் கருத்துக்களைச் சீனா கவனத்தில் எடுக்கவில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு நாடு இரு அமைப்புக்கள் எனற சித்தாந்தத்தின்படிதான் ஹொங்கொங் சீனாவுடன் இணைக்கப்பட்டது. அதன்படி ஹொங்கொங்கில் ஜனநாயக அரசமைப்பு ஒன்று பேணப்பட வேண்டும் என்று அங்குள்ள ஜனநாயக ஆதரவாளர்கள் வலியுறுத்துகின்றனர். (8)

# உலகை சுற்றிப் பறப்பதில் புதிய சாதனை ஏற்படுத்த முயலும் பிரிட்டிஷ் விமானி

லண்டன்,ஏப்27

பிரிட்டிஷ் இராணுவ ஹெலிகொப்டர் விமானி ஒருவர் கைரோ பிளேன் என்றழைக்கப்படும் வான் ஊர்திமூலம் உலகத்தைச் சுற்றிப்பறந்து சாதனை நிலைநாட்டவிருக்கின்றார்.



இந்த வகையான விமானத்தில் உலகைச் சுற்றிப் பறக்கும் முயற்சியில் ஈடுபடும் முதலாவது விமானி இவராகவே உள்ளார்.

25ஆயிரம் மைல்களுக்கும் அதிகமான தூரத்தை மணிக்கு 80 மைல் என்ற வேகத்தில் பறந்து கடக்க அவர் திட்டமிட்டிருக்கிறார்.

பிரிட்டிஷ் இராணுவத்தில் உயர் அதிகாரியாக இருக்கும் 37 வயதான பாரிஜோன்ஸ் என்பவரே இந்த முயற்சியில் ஈடுபடவிருக்கும் விமானி. வட ஜோக்ஷயர் தளத்தைச் சேர்ந்த இவர் ஹாம்ஷியரின் பார்ன்பரோவிலிருந்து மேலேழுந்து பறக்கத் திட்டமிட்டிருக்கிறார்.

"குளோபல் ஈகிள்" எனப் பெயரிடப்பட்டுள்ள கைரோட் பிளேனில் திங்கட்கிழமை புறப்பட்டு எதிர்வரும் ஜூலை மாதம் திரும்பத்திட்டமிட்டுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் கடந்த வருடம் பெப்ரவரியில் 579 மைல்தூரத்தை ஏழுமணி 23 நிமிடநேரத்தில் பறந்து சாதனை படைத்துள்ளார்.

ஒரு சிலரால் மட்டும் பார்க்கப்படும் சில விடயங்களை நானும் பார்க்கப் போகிறேன். அத்துடன் வானில் பறந்து சிறு சாதனையையும் நிகழ்த்த விரும்புகிறேன் என்று புறப்படுவதற்கு முன்னர் அவர் கூறினார்.

கைரோப்பிளேன்(Gyroplane) என்பது ரொட்டர் என்றழைக்கப்படும் சுழலும் சக்தியால் மேல் எழுந்து பறப்பதாகும். ஹெலிகொப்டர்கள் போலன்றி வானில் மோட்டார் வாகனத்தில் பறப்பதைப் போலிருக்கும். (ப)

# வழக்கு விசாரணையை எதிர்த்து வைகோ உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

சென்னை,ஏப்.26

மதுரையை அடுத்த திருமங்கலத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளை ஆதரித்துப்பேசியதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ உட்பட 9பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. பொடா சடடத்தின் கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

19 மாத சிறைவாசத்துக்குப் பிறகு வைகோ உட்பட 9 பேரும் பிணையில் விடுதலை ஆனார்கள்.

பொடா சட்டம் பல மாநிலங்களில் தவறாகப் பயன்படுத்துவதாக எழுந்த புகாரைத் தொடர்ந்து மத்திய அரசு பொடா மறு ஆய்வுக்குழுவை அமைத்தது. நீதிபதி சகாரியா தலைமையில் 3பேர் கொண்ட கமிட்டி செயற்பட்டு வருகிறது. இது ஓர் அதிகாரம் கொண்ட அமைப்பு உயர் நீதிமன்றில் அங்கீகரித்தது.

இந்தக் குழுவிடம் வைகோ உட்பட 9 பேரும் தங்களை பொடா சட்டத்தின்கீழ் கைதுசெய்தது தவறு என்று புகார் தெரிவித்தனர்.

இந்த மனுக்களை விசாரித்த பொடா மறு ஆய்வுக்குழு கடந்த 8ஆம் திகதி பரபரப்பான தீர்ப்பை அளித்தது.

விடுதலைப் புலிகளை ஆதரித்து வைகோ பேசி இருப்பது பொடா சட்டம் 21(3) பிரிவின் அதிகார வரம்புக்குள் வராது. அவர் தீவிரவாதத்தை ஆதரித்தார் என்பதற்கான முகாந்திரம் எதுவும் இல்லை. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியது வனமுறை ஆகாது என்று நீதிபதி சகாரியா தீர்ப்பில் குறிப்பிட்டு இருந்தார்.

மேலும் இந்த வழக்கில் சட்டப்படி கோர்ட்டில் உரிய உத்தரவைப் பெற அரசு வக்கீலுக்கு தகுந்த ஆலோசனை வழங்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ளவும் நீதிபதி உத்தரவிட்டார்.

அரச சட்டத்தரணி அளித்த பேட்டியில் வழக்கை வாபஸ்பெறவில்லை என்று கருத்து தெரிவித்து இருந்தார். தமிழக அரசும் வாபஸ் பெற எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை. இதனால் பூந்தமல்லி நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணை நடந்து வருகிறது.

இதை எதிர்த்து வைகோ உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்ய உள்ளார்.

அந்த மனுவில் கூறப்பட்டிருப்பதாவது:-

பொடா மறு ஆய்வுக்குழு அதிகாரம் கொண்ட அமைப்பு என்றும் சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு அளித்து உள்ளது. விடுதலைப் புலிகளை நாங்கள் ஆதரித்துப் பேசியதால் தவறு இல்லை என்று பொடா மறு ஆய்வுக்குழு கூறியுள்ளது.

ஆனால், பொடா மறு ஆய்வின் பரிசீலனைப்படி தமிழக அரசு உத்தரவு பிறப்பிக்கவில்லை. அரசு சட்டத்தரணி வழக்கை வாபஸ் பெற அரசு உத்தரவு பிறப்பிக்கவில்லை. தினசரி சாட்சி விசாரணை நடந்து வருகிறது.

பொடா மறு ஆய்வுக்குழுவின் பரிந்துரைப்படி வழக்கை விசாரிப்பது தவறானதாகும். எனவே விசாரணை நடக்க இடைக்கால தடை விதிக்க வேண்டும்.

எங்கள் மீதான வழக்கை வாபஸ் பெறவேண்டும் என்று அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிடவேண்டும்.

- இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது. (8)

# அரசமைப்புத் திருத்தம் கனவாகவே இருக்கும்

## இப்படிச் சொல்கிறார் பேராசிரியர் பீரிஸ்

கொழும்பு,ஏப்.27

சாதாரணமான நாடாளுமன்ற விதியைக்கூட நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய பெரும்பான்மைப் பலம் ஐ.ம.சு.கூட்டமைப்பு அரசுக்கு இல்லையென்பதை கடந்த 22 ஆம் திகதிய நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சபாநாயகர் தெரிவு நன்றாகவே தெளிவுபடுத்தி விட்டது.

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இத்தகைய நிலைப்பாட்டின் மத்தியில் கூட்டமைப்பு அரசு ஓரணியில் நின்று புதிய அரசமைப்பொன்றை நிறைவேற்றிக்கொள்ள முயல்வது பெரும் நகைப்பிற்கிடமான செயலாகும் என்றும் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# பண்பாட்டின்படி ஒழுகத் தவறுவோமானால் தமிழரின் அடையாளம் இல்லாமற்போகும்

## 'வாழ்வியல் கிரியைகள்' நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம்,ஏப்.27

தமிழ்மக்கள் தமது பாரம்பரியங்களையும் பண்பாடுகளையும் ஒழுகுவதில் மாற்றங்களை ஏற்படுத்துவார்களேயானால் எதிர்காலத்தில் தமிழர்கள் என்பதற்கான அடையாளங்கள் இல்லாமற்போகும்.

- இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் தெரிவித்தார்.

'சிவநெறிச்செம்மல்' சிவஸ்ரீ சபா. வாஸுதேவக்குருக்களின் வாழ்வியல் கிரியைகள் நூல் வெளியீட்டு விழா நல்லை ஆதீனத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வெளியீட்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்மக்கள் தமது கிரியைகளை மேற்கொள்வதில் தற்காலத்தில் பல இடர்களை எதிர்கொள்கிறார்கள். உதாரணமாக கிரியை ஒன்றை மேற கொள்ளும்போது கற்பூரம் எதற்காக எரிககப்படுகின்றது, தேங்காய் எதறகு உடைக்கப்படுகின்றது என்று வினாக்கள் எழுப்பும் தமது பிள்ளைகளுக்கு உரிய விடையை அளிக்க முடியாது பெற்றோர்கள் தடுமாறுவதைக் காண முடிகிறது.

தமது பிள்ளைகளுக்கு கிரியைகள் தொடர்பாக பூரணமாக விளக்கம் அளிக்கமுடியாத பெற்றோர்களினால பிள்ளைகள், அதாவது இளைய தலைமுறையினர் சடங்குகளை அலலது கிரியைகளை வெறும் போலிகள் என்ற எண்ணத்துக்கு உட்படுகினறனர்.

பெற்றோர்கள் சமயச்சடங்குகள் தொடர்பாக அறிந்திருத்தல் அவசியமாகிறது. பொதுவாக கிரியைகள் தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களை இந்நூல் கணிசமான அளவு தீர்த்து வைக்கிறது. இந்த நூல் காலத்தின் பதிவாக தமிழ்மக்களின் கையில் கிடைத்திருக்கிறது. தமிழ்மக்கள் பின பற்றப்படவேண்டிய கிரியைகள் தொடர்பாக ஒரு வரலாற்று ஆவணமாக இந்நூல் அமைந்துள்ளது - என்று அவர் தனது உரையில் தெரிவிததார்.

இந்நிகழ்வில் அருளாசியுரை நிகழ்த்திய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் தெரிவித்ததாவது:-

நாவலர் கண்டகனவு இந்நூலின் மூலம் நிஜமாகிறது. தமிழ்ச் சமூகம் பேணவேண்டிய கலை, கலாசார விழுமியங்களை சமய ரீதியாக இந்நூல் வலியுறுத்துகிறது எனத் தெரிவித்தார்.

(ஐ-12)

# ஆசிரியர்களுக்கான கணனிப்பயிற்சியை ஆரம்பிக்கக் கல்வி அதிகாரிகள் வருகை

யாழ்ப்பாணம்,ஏப்.27

குடாநாட்டுக் கல்விச் செயற்பாடுகளைக் கணனிமயப்படுத்தி மாணவர்களுக்கு இலகுவானமுறையில் கல்வியை மேற்கொள்ளும் முதற்கட்டமாக ஆசிரியர்களுக்கான கணனிப் பயிறசியினை வடக்கு - கிழக்கு மாகாணக் கலவித்திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தரம் மற்றும் சாதாரண தரத்தில் கல்வியினை மேற்கொணடு வரும் மாணவர்களின் நன்மை கருதியே இக்கணனிக் கல்வித் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இத்திட்டம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழகம் மற்றும் கல்வி வலயங்களின் பிரதிநிதிகளுடன் ஆராய வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் வே.மகேந்திரன் உள்ளிட்ட கல்விப் பிரதிநிதிகள் சிலர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

கணனிமூலம் ஏனைய கல்வி விருத்திகள் மேற்கொள்ளப்பட்டு வரும்போதும் உயர்தர மாணவர்களின் கல்வியில் இவ்வாறு கணனி மூலம் கல்வி புகட்டுவது அவர்களுக்கு ஒரு நேரடித் தொடர்பாடலுடன் இணைந்ததாக அமையும் என மாகாணப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் வே.மகேந்திரன் தெரிவித்தார்.

இதற்காக ஒரு பாடசாலையில் 7 முதல் 15வரையிலான ஆசிரியர்கள் என்ற ரீதியில் தெரிவுசெய்யப்பட்டு யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஊடாக கணனிப்பயிற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் 10 ஆசிரியர்களையும், சாதாரணதரத்தில் 15 ஆசிரியர்களையும் கொண்டு முதற் தடவையாக கணனிப்பயிற்சி மேற் கொள்ளப்படவுள்ளது.

பதினெட்டு நாள்களைக் கொண்டதாக அமையும் ஆசிரியர்களுக்கான முதற்கட்டப்பயிற்சிக்கு தற்போது பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார். (ஐ-6)

## நீர்வேலியில் பரவலாக திருடர்களால் தொல்லை

யாழ்ப்பாணம்,ஏப்.27

நீர்வேலிப் பகுதியில் இரவுநேரங்களில் திருடர்களின் தொல்லை அதிகரித்திருப்பதாகப் பொதுமக்கள் தரப்பில் முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

இரவுவேளைகளில் மின்சாரத்தைத் துண்டித்துவிட்டு வீடுகளுக்குள நுழையும் திருடர்கள் அங்கிருக்கும் பொருள்களைச் சூறையாடிச் செல்கின்றனர்.

அத்துடன், இப்பகுதித் தோட்டங்களில் உள்ள வாழைக்குலைகள் மற்றும் மரக்கறி வகைகளையும் திருடர்கள் இரவுவேளைகளில் திருடிச்செலவதாகவும் கூறப்பட்டது. (எ-17)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஓய்வுபெற்ற பாடசாலை அதிபரும், இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் முன்னாள் துணைப் பொதுச் செயலாளரும், சுன்னாகம் ப.நோ.கூ. சங்கத்தின் முன்னாள் இயக்குநருமான தாவடியைச் சேர்ந்த

**திரு. கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்**

அவர்கள் 24.03.2004 அன்று யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி உயர்திரு. கு.பொ.சி. வரதராசா அவர்களின் முன்னிலையில் சமாதான நீதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவரது சேவை மேன்மேலும் சிறப்புற்று விளங்க இவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தாவடி மத்திய சனசமூக நிலையத்தினரும், நண்பர்களும்.

தாவடி. (31351)(34-40-16-19)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இணுவில் இந்து விளையாட்டுக்கழகத்தின் உபதலைவர்

**திரு.தம்பையா கந்தசுவாமி**

(உரிமையாளர், பெஷன் ஹவுஸ்,யாழ்ப்பாணம்)

அவர்கள் 21.04.2004அன்று யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி எஸ்.நந்தசேகரன் அவர்கள் முன் னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணஞ் செய்துகொண்டமையையிட்டு நாம்பெரிதும் உவகையடைகின்றோம். அவர் இப்பணியில் மேலும் சிறப்புற்றுத்திகழ எல்லாம்வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

திரு.செ.இலகுநாதன் (தலைவர்) அவர்களும், இணுவில் இந்து விளையாட்டுக்கழக நிர்வாகிகளும்.

(31347)(42-16-34)

## நன்றி தெரிவிக்கின்றோம்

எமது கிராம மக்களினால் நடத்தப்பட்ட, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ கி.சிவநேசன் அவர்களைப் பாராட்டிக் கௌரவித்த விழாவில் கலந்துகொள்வதற்கு எம்மால் அனுப்பிய நிறுவன ரீதியான அழைப்பையும் பத்திரிகைகள்மூலம் விடுக்கப்பட்ட அழைப்புக்களையும் ஏற்று யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தமது உறவுகளுடன் வருகை தந்து விழாவைச் சிறப்பித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

விழா ஏற்பாட்டுக்குழு சார்பாக கரவெட்டி கிழக்கு மக்கள்.

(31349)(34-16-19)

குழந்தைகளுக்கு அன்பளிப்பதற்கு

சிறந்த பரிசு




ரண் கெகுளு

பரிசு வவுச்சர்

இலங்கை வங்கி அறிமுகப்படுத்தும், "ரண் கெகுளு பரிசு வவுச்சர்" எமது குழந்தைகளின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் ஒரு முதலீடாகும்.

"ரண் கெகுளு பரிசு வவுச்சர்" எமது குழந்தைகளின் வாழ்வின் விசேட தினங்களில் அன்பளிப்பாக வழங்கக் கூடிய சிறந்த பரிசு.

- ரூபா.100/=, ரூபா.200/=, ரூபா.500/=, ரூபா.1000/= ஆகிய பெறுமதிகளில் "ரண் கெகுளு பரிசு வவுச்சர்களை" எல்லா இலங்கை வங்கி கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
- "ரண் கெகுளு பரிசு வவுச்சர்" பெற்றவர்கள் தாம் விரும்பிய இலங்கை வங்கி கிளைகளில் குறிப்பிட்ட பெறுமதிக்கு ரண் கெகுளு கணக்கை ஆரம்பிக்கலாம் அல்லது ஏற்கனவே "ரண் கெகுளு" கணக்கு உள்ளவர்கள் பணத்தை அந்தக் கணக்கில் வைப்புச் செய்யலாம்.

Twin Advertising

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

உதயன்

## தெளிவுபடுத்தப்படுமா அரசின் நிலைப்பாடு?

இரண்டு தசாப்த காலக் கொடூரப் போரினால் பேரழிவுகளைச் சந்தித்து நிற்கிறது இலங்கை. அதுவும் தமிழர் தாயகப் பூமியான வடக்கு - கிழக்குப் பிரதேசம் சந்தித்த போரழிவு வகைதொகைக்குள் அடங்கக்கூடியதல்ல.

வடக்கு - கிழக்கை மட்டுமல்லாமல் போரழிவைச் சந்தித்த முழு நாட்டையுமே மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கு உதவ முன்வந்துள்ளது உதவும் நாடுகளின் சமூகம்.

முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசும், தமிழர் தரப்பின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் அமைப்பும் தங்களுக்குள் இருந்த வேறுபாடுகளை, இனக்குரோதங்களை ஒதுக்கி வைத்துவிட்டு சமாதான முயற்சிகளை ஆரம்பித்ததை அடுத்தே இலங்கைக்கு அவசர உதவிகளை வழங்கும் சர்வதேச சமூகத்துக்கு தாராளம் - மனமாற்றம் - ஏற்பட்டது.

ஆனால், 'கைக்கெட்டியது வாய்க்கு எட்டாதது போல' இந்தப் பெருந்தொகை சர்வதேச உதவி கானல் நீராகும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அரசியல் இலக்குகளை அடையும் தமது சுய நலனுக்காகவும், அதிகாரம் மீதான அவாவினாலும் எல்லாவற்றையும் போட்டு உடைத்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

தமது அணியை ஆட்சியில் அமர்த்துவதற்காக, இதுவரை சமாதான முயற்சிகளில் - வேகமாக இல்லாவிட்டாலும் - மிதமாகவேனும் - முன்நோக்கி நகர்ந்துகொண்டிருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசை நான்கு வருடங்கள் முன்னதாக வீட்டுக்கு அனுப்பி 'வெண்ணெய் திரண்டு வரும் நேரம் தாழியை உடைத்த கதையாக' சகலதையும் 'அம்பேல்' ஆக்கினார் அவர்.

அரசுக் கலைப்பும், சமாதான விரோதிகளைப் பிரதான பங்காளிக் கட்சியாகக் கொண்ட கூட்டமைப்பின் கையில் ஆட்சி சிக்கியதும், முழு அதிகாரமும் தன் கையிலிருந்த சமயம் 'போர் வெறியராக' தன்னை இனங்காட்டிக் கொண்ட ஜனாதிபதி ஒருவரின் கையில் மீண்டும் முழு அதிகாரமும் சிக்கியிருப்பதும், சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கும் பொறுப்பும் கூட அவரது கைக்கே வந்திருப்பதும் சமாதான நடவடிக்கைகளின் எதிர்காலத்தையே கேள்விக்கு உள்ளாக்கியிருக்கின்றன.

இலங்கையில் நிரந்தர சமாதானத்துக்கான முன்நகர்வின் அடிப்படையில் உதவி என்ற நிபந்தனையோடு சர்வதேச சமூகம் வழங்க உறுதியளித்துள்ள 48 ஆயிரம் கோடி ரூபா உதவியும் சமாதான முயற்சிகள் செயலிழந்து போகும் நிலையில் கைக்கெட்டாமல் போய்விடும் என்பது உறுதி.

இதனையே, தற்போது இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் ஜெனீவாத் தலைமையகக் கண்காணிப்பாளர் நாயகம் ஜெனரல் டெனிஸ் மைக்னமாறா எச்சரிக்கையாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.

"இலங்கையில் விரைவில் சமாதான உடன்பாடு ஏற்பட வேண்டும். இல்லையேல் சர்வதேச உதவிகள் கிடைக்கும் வாய்ப்பு அற்றுப்போகும் அபாயமான நிலை ஏற்பட்டுள்ளது." - என்று அவர் எச்சரித்திருக்கின்றார்.

ஆகவே, இந்த உதவிகள் நாட்டுக்குக் கிட்டுவதற்கு - அதன்மூலம் நாடு சுபீட்சமும் விருத்தியும் அடைவதற்கு - அமைதி முயற்சிகள் விரைந்து ஆரம்பிக்கப்படவேண்டும்.

சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிக்க வருமாறு அனுசரணைப் பணியில் ஈடுபடும் நோர்வேத் தரப்புக்கு அழைப்பு விடுப்பது மட்டும் சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு வழி செய்து விடாது.

எந்த இடத்தில் முன்னைய அரசினால் சமாதான முயற்சிகள் நிறுத்தப்பட்டனவோ அங்கிருந்துதான் புதிய அரசு அதனை ஆரம்பிக்க வேண்டியிருக்கும்.

சமாதான முயற்சிகள், நடவடிக்கைகள் தொடர்பாகப் புதிய அரசின் நிலைப்பாட்டைத் தெளிவாக அறிந்த பின்னரே அதில் இறங்குவது எனத் தமிழர் தரப்புத் தீர்மானித்திருக்கின்றது.

முன்னைய அரசு சமாதான முயற்சிகளை விட்ட இடத்திலிருந்து, அதே நிலைப்பாட்டுடன் அதனைத் தொடர்வதற்குப் புதிய அரசு தயாரா என்பதைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்திக்கொள்ளவே தமிழர் தரப்பு விரும்புகின்றது.

சமாதான முயற்சிகளில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், அவரது அரசுக்கும் உண்மையில் - இதயசுத்தியுடன் கூடிய - ஆர்வம் இருக்குமானால் இது விடயத்தில் தமது பக்க நிலைப்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்துவது அத்தரப்பின் கடமையாகின்றது. செய்வாரா ஜனாதிபதி?

சமாதான முயற்சிகளை முன்னகர்த்தாமல் வெளிநாட்டு உதவி தாராளமாகக் கிடைக்காது என்பதை அவர் உணரவேண்டும். சமாதானத்தில் தமக்கு அக்கறை இருப்பதாகக் காட்டிக்கொண்டு, வெளிநாட்டு உதவியை எப்படியாவது பெற்றுவிடவேண்டும் என்ற கபடநோக்குடன் செயற்பட முனைந்து, சர்வதேசத்தை இலகுவில் ஏமாற்றிவிடமுடியாது என்பதனையும் அவர் உணரவேண்டும்.

# தொழிலுக்குச் செல்லாத எஞ்சிய மீனவர்களையும் அனுப்ப விரைந்து நடவடிக்கை எடுக்குக!

### குருநகர் படைஅதிகாரி கடற்றொழிலாளர் சங்கங்களிடம் வற்புறுத்து

குருநகர்,ஏப்.27

குருநகர் பகுதியில் இதுவரை மீன்பிடிக்கச் செல்லாமல் உள்ள மீனவர்களை தொழிலுக்குச் செல்ல ஏற்பாடு செய்யுமாறு குருநகர் இறங்குதுறையில் அமைந்துள்ள இராணுவ முகாமின் பொறுப்பாளர் கப்டன் எஸ்.சுஜித், குருநகர் மீனவர் சங்கங்களின் தலைவர்களைக் கேட்டுள்ளார்.

குருநகர் இறங்குதுறை இராணுவ முகாம் பொறுப்பாளர் கப்டன் எஸ்.சுஜித் மற்றும் குருநகர் J/68, J/70, J/72கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மக்கள் கலந்துகொண்ட சந்திப்பு ஒன்று அண்மையில் குருநகர் இறங்குதுறைப் பகுதியில் நடைபெற்றது.

குருநகர் பகுதியில் இராணுவத்தால் நிறைவேற்றப்பட வேண்டிய பல கோரிக்கைகளை இச்சந்திப்பில் கலந்துகொண்ட பொது மக்களின் பிரதிநிதிகள் பொறுப்பதிகாரியிடம் முன்வைத்தார்கள்.

★ குருநகர் கடற்கரையில் இராணுவத்தினர் தங்கியுள்ள பொதுமக்களின் குடியிருப்புக்களை அவர்களிடம் ஒப்படைப்பது.

★ குருநகர் கடற்கரைக்கு அண்மையில் இராணுவத்தினர் கம்பிபோட்டு அடைத்து வைத்துள்ள கழிவுநீர் செல்லும் வடிகால்களைத் திறந்து சுத்தஞ் செய்ய அனுமதித்தல்.

★ குருநகர் ஐந்து மாடிக்குடியிருப்பு பகுதியில், இராணுவம் முள்வேலி அமைத்து தடைசெய்துள்ள குடி தண்ணீர்க் கிணற்றைச் சூழவுள்ள தடையை பின்நகர்த்துவதன்மூலம் இக்கிணற்றை மீண்டும் மக்கள் பாவனைக்கு அனுமதிப்பதுடன் இங்கு இதுவரை மக்கள் குடியமர அனுமதி மறுக்கப்பட்டுள்ள சுமார் 20 வீடுகளில் மக்களை மீளவும் குடியமர வாய்ப்பளித்தல்.

★ குருநகர் பகுதியில் மக்கள் மீளவும் பெருமளவில் குடியேறியிருப்பதனால் குறுக்கு வீதிகள், ஒழுங்கைகள் ஆகியவற்றில் மின்விளக்குகளை அமைத்தல்.

★ குருநகர் கடற்கரை வீதிக்கும் பாங்ஷால் வீதிக்கும் இடையில் அமைந்துள்ள சேதமடைந்துள்ள நான்காம் குறுக்கு வீதியைப் புனரமைத்தல்

மக்களால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்கூறிய கோரிக்கைகள் தொடர்பாக 512ஆவது கட்டளைப்பிரிவுத் தளபதியின் கவனத்துக்குச் சமர்ப்பித்து அவரது பதிலை சம்பந்தப்பட்ட கிராம சேவகர்களிடம் தாம் தெரியப்படுத்துவதாக பொறுப்பதிகாரி வாக்குறுதி வழங்கியதாக இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். (எ-51)

## முதலாம் கந்தாயத்திற்கான மற்றொரு தொகுதி மருந்து எடுத்துவரப்படும்

### சுகாதாரப் பணிமனை வட்டாரங்கள் தகவல்

வலி.தென்மேற்கு,ஏப்.27

யாழ்.சுகாதாரத் திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியத்திற்கு இவ்வருட முதலாம் கந்தாயத்திற்கான (காலாண்டுக்கான) மருந்து வகைகளில் மற்றொரு தொகுதி மருந்து வகைகள் இவ்வாரம் கொழும்பிலுள்ள சுகாதாரத் திணைக்கள மத்திய மருந்துக்களஞ்சியத்திலிருந்து கொண்டுவரப்படவுள்ளன.

இவற்றை இங்கு எடுத்துவருவதற்காகத் திணைக்கள லொறிகள் கடந்தவாரம் கொழும்புக்கு புறப்பட்டுச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம்மருந்துகள் இங்கு வந்துசேர்ந்ததும், பிராந்தியத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்குத் தேவைக்கேற்ற விதத்தில் பங்கீடு செய்து வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## வழிச்சல் வலைகளைத் தொலைத்த மீனவர்கள் தொடர்புகொள்ளவும்

### வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கம் கோரிக்கை

வடமராட்சி,ஏப்.27

வடமராட்சி கடல் பிரதேசத்தில் தெழிலில் ஈடுபட்டிருந்த வேளை மீன்பிடி வலைகளை (வழிச்சல் வலைகள்) தொலைத்திருந்தால் சம்பந்தப்பட்டோா தமது வலைகளுக்குரிய தடயங்களைக் குறிப்பிட்டு தம்முடன் தொடர்புகொள்ளுமாறு வடமராட்சி கிழக்கு கடற்றெழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசம் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்களைக் கேட்டுள்ளது.

ஒரு தொகுதி மீன்பிடி (வழிச்சல்) வலைகள் வடமராட்சி கிழக்கு கடற்பகுதியிலிருந்து அப்பகுதி மீனவர்களால் கடந்த 2003ஆம் வருடம் மீட்கப்பட்டு வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி வடக்குப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் யாராவது கடந்த வருடம் மீன்பிடி (வழிச்சல்) வலைகளைத் தொலைத்திருந்தால் அவற்றிற்கான தடயங்களைக் குறிப்பிட்டு நாளை புதன்கிழமைக்கு முன்னர் தொடர்புகொள்ளுமாறு வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்திடம் கடித மூலம் கோரியுள்ளது.

இதனையடுத்து, கடந்த வருடம் மீன்பிடி வலைகளைத் தொலைத்த மீனவர்களை உடன் தொடர்புகொள்ளுமாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம் இப்பகுதி மீனவர்களைக் கேட்டுள்ளது. (எ-173)

## மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் டாக்டர்களுக்குப் பற்றாக்குறை

### சிகிச்சைப் பிரிவுகள் பலவும் செயலிழந்த நிலையில்

கரவெட்டி,ஏப்.27

பருதத்துறை அரசினா ஆதார வைத்தியசாலையில் வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது.

இதனால் இங்கு சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலை கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக உள்ளது என்று பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்மாவட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தையும் வரமராட்சியில் முதலாவது இடத்தையும் பெறும் இந்த வைத்தியசாலையில், கடமையாற்ற வேண்டிய வைத்தியர் எண்ணிக்கை 21ஆகும்.

ஆனால், தற்போது 4வைத்தியர்களே இங்கு கடமையாற்றி வருகின்றனர். இது விடயமாக, வைத்தியசாலை நிர்வாகத்தினர் பலதடவைகள் சுகாதாரப் பகுதிக்குத் தெரியப்படுத்தியும், இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனால், நோயாளர்கள் அதிக அளவில் பாதிக்கப்படுவதுடன், பல சிகிச்சைப்பிரிவுகள் மூடப்பட்ட நிலையில் உள்ளன என்றும் - வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(எ-70)

**நாளை**

சித்திரை 16
புதன்கிழமை
(28.04.2004)
திதி : அட்டமி
பகல் 8.18 வரை
நட்சத்திரம்: ஆயிலியம்
பிற்பகல் 2.45 வரை
சுபநேரம்: 4.28-5.58
ராகுகாலம்: 11.58-1.28
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

இரு மனங்கள் இணைவதே திருமணம்.

## தமிழ்த் தேசியத்தை வலியுறுத்துவதில் தமிழ் ஊடகங்கள் பங்காற்றியுள்ளன

### 'புலிகளின்' குரல் பொறுப்பாளர் புகழாரம்

வவுனியா,ஏப்.26

தமிழ் ஊடகங்கள் தற்போது தமிழ்த் தேசியத்தின் கருத்துக்களை வெளியுலகிற்கும் மக்களுக்கும் கொண்டுசெல்வதில் பெரும் பங்காற்றிவருகின்றன.

- இவ்வாறு புலிகளின் குரல் வானொலியின் பொறுப்பாளர் தமிழன்பன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய எமது அரசியல் வெற்றிகளுக்குக் கணிசமான ஊடகங்கள் பங்காற்றி வருகின்றன. மூலை முடுக்குகளுக்குள் வாழும் மக்களிடையே எமது ஊடகங்கள் சென்றடைவது இல்லை. ஒட்டுமொத்தமாக தமிழ் ஊடகங்களும் தமிழ்த் தேசியத்தை பிரதிபலிக்கும் ஊடகங்களும் கணிசமான அளவு செயற்பட்டு வந்ததாலேயே இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது.

சிங்களப் பேரினவாத சக்திகளால் உருவாக்கப்பட்டதும் அவர்களின் உணர்வாகச் செயற்படுகின்ற ஊடகங்களும் தமிழ்த் தேசியத்தைச் சிதைக்கின்ற வகையில் தமிழினத்தின் ஒற்றுமையைக் குலைக்கும் வகையில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

சில தமிழ் ஊடகங்கள் அவர்கள் பக்கம் சாய்ந்து நின்று செயற்படுவதை விடுத்து சிந்தித்து உண்மையான நிலையினை வெளிப்படுத்துவதுடன், ஒற்றுமையாகச் செயற்படுவதன் மூலமே இனிதியான ஒற்றுமையை உருவாக்கலாம். - என்றார். (-8-164)

## தமிழக முகாமிலிருந்து திரும்பிய இலங்கைத் தம்பதியருக்குத் திருமணப் பதிவு!

வவுனியா,ஏப்27

அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தின் வவுனியா கிளை அலுவலகத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தமிழ்நாடு அகதி முகாமில் தங்கியிருந்த போது திருமணம் செய்த 50 சோடிகளுக்குப் பதிவுத் திருமணம் நடைபெற்றது.

இந்தியாவிலிருந்து நாடுதிரும்பிய இவர்கள் திருமணப் பதிவின்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர். இதனைத் நீக்கும் பொருட்டு வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் இவர்களுக்குரிய சட்டபூர்வ திருமணம் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டப் பதிவாளர் திருமதி எஸ்.இராசரத்தினம் பதிவுகளை மேற்கொண்டார். இந்நிகழ்வில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரக சிரேஷ்ட உயரதிகாரிகள், வவுனியா மாவட்ட திட்டப் பணிப்பாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

தமிழகத்தில் பிறந்து நாடு திரும்பியுள்ள குழந்தைகளுக்கான பிறப்பு அத்தாட்சிப் பதிவுகளும் இங்கு மேற்கொள்ளப்பட்டன. (ஐ-ரி)

## மணற்காட்டில் சவுக்கு வெட்டுவோரை இனங்காணப் பொலீஸார் தீவிர ரோந்து!

வடமராட்சி,ஏப்.27

வடமராட்சி கிழக்கு மணல்காட்டுப் பகுதியில் சவுக்கு மரங்களை சட்டவிரோதமாக வெட்டி விறகுக்காகக் கடத்துவதைக் கண்காணிக்கவென அப்பகுதியில் பொலீஸ் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மணல்காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாகச் சவுக்கு மரங்கள் வெட்டிக்கடத்தப்படுவதைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதிக் கிராம அலுவலரினால் பருத்தித்துறை நீதிவானின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு சவுக்கு மரங்களை வெட்டுவோரைக் கண்டுபிடித்து உரிய நடவக்கைகளை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை நீதிமன்றம் பருத்தித்துறைப் பொலீஸாருக்கு பணித்திருந்தது.

இதனையடுத்து இந்தப் பகுதியில் ரோந்து நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பருத்தித்துறைப் பொலீஸார் அப்பகுதியில் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின் பயனாகக் கடந்த 20ஆம் திகதி சவுக்கு மரங்களை வெட்டி விறகுக்காகக் கொண்டுசென்றதாகக கூறப்படும் மூவர் சைக்கிள்களுடன் கைதுசெய்யப்பட்டனர். மற்றும் 15 பேர் சைக்கிள்களையும் அவற்றுடன் இருநத விறகுகளையும் கைவிட்டுத் தப்பிச் சென்றனர். பருத்தித்துறை நகரில் அனுமதிப் பத்திரம் எதுவுமின்றி சவுக்கு மர விறகுகளை விற்பனைக்காக வைத்திருந்த விறகுக்காலை உரிமையாளர் ஒருவரும் கைதானார்.

கைதுசெய்யப்பட்டோரும், விறகுகளுடன் சைக்கிள்களைக் கைவிட்டுச் சென்றோரும் பொலீஸாரால் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். (எ-173)

## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-222-2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-29245)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 10 | | 09 |
| 02 | | 05 |
| 1937 | | 2003 |



திருமதி **லச்சுமிதேவி சுப்பிரமணியம்**

திதி: 27.04.2004

ஆண்டொன்று மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் மட்டும்
எம் நெஞ்சங்களில் என்றுமே மறையாது.
அன்போடு பேசி பண்போடு வாழ்ந்த
உங்களது பாசமும் எப்போதும் - எங்கள்
கண்ணில் ஓவியமாய்த் தெரிகிறதே!- என்செய்வோம்
...ர் மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
நெஞ்சங்களில் நிழல்போல
...து மறையாதிருக்கும்.

அன்புக் கணவர்,
மகன், மருமகள்.

...டு. கிழக்கு,
சித்தன்கேணி.

(31189)(38-19-16-34)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 10 | | 28 |
| 10 | | 03 |
| 1950 | | 2004 |



திருமதி

**மரியறோஸ் தங்கராசா மரியமலர்**

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் எம்மை எல்லாம்
அன்போடு வளர்த்திட்ட எம அற்புத தாயே!
நேசமுடன் உம்மோடு வாழ்ந்த அப்பா, பிள்ளைகள்,
உறவுகளை
தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள் அம்மா?
உமது பிரிவைத் தாங்கமுடியாது தவிக்கின்றோம் அம்மா!
மாதமொன்று சென்றாலும் எம் உள்ளங்களில் இருந்து
உம்நினைவு மாறவில்லையே அம்மா!
ஆறுதல் அளிக்க ஆயிரம் உறவுகள் இருந்தபோதும்
அன்புடன் அரவணைக்க அன்புள்ளங்கள் இருந்தபோதும்
"அம்மா" என்றழைக்க இங்கு நீங்கள் இல்லையே அம்மா!
*உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.*

பிரிவால் துயருறும்:
கணவர்: க.ம.தங்கராசா
பிள்ளைகள்: மரிய டிலோஜினி, மரிய டினேஸ், மரிய டினோசன், மரிய சங்கீதா, மரிய டிக்கிற்.
மருமகன்: தீபன் குலச்சந்திரன்.

*புனித சூசையப்பர் ஆலய வீதி,*
*புலோலி தெற்கு, பருத்தித்துறை.*

(31327)(42-34-16-19)

## சைக்கிள் உரிமத் தகடு விநியோகம்

சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் இவ்வருடத்திற்குரிய துவிச்சக்கர வண்டி உரிமத் தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் துவிச்சக்கரவண்டி வைத்திருப்போர் தமது துவிச்சக்கர வண்டிக்கு உரிமஇலக்கத் தகடுகளைப் பெற்று இலக்கத்தகடுகள் இல்லாததால் ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு நகரசபை செயலாளர் அறிவித்துள்ளார்.(எ-117)

## மாணவர் கௌரவிப்பு

தென்மராட்சி,ஏப்.27

ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோரின் பிள்ளைகள் சங்கத்தினால் அண்மையில் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற தியாகராசா சுதர்சினி, சற்குணநாதன மேகா, சண்முகநாதன் வேணுகா, வைத்திலிங்கம் சுமேதா ஆகிய நான்கு மாணவர்களுமே கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

இதேவேளை -

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படும் சங்க அங்கத்தவர்கள, பணியாளர்கள் ஆகியோரின் பிள்ளைகளும் சங்கத்தினால் கௌரவிக்கப்படவுள்ளனர் எனச் சங்கப் பொது முகாமையாளர் வே.கிருஷ்ணன் தெரிவித்தார். (எ-117)

## அனுமதியின்றி சாராயம் விற்றவர் கைதானார்

தென்மராட்சி,ஏப்.27

கொடிகாமம், கச்சாய் வீதியில் அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த நபரைக் கொடிகாமம் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

இதே இடத்தைச் சேர்ந்த சரவணை மகாலிங்கம் என்பவர் கடந்தவாரம் கைதுசெய்யப்பட்டு, சாவகச்சேரி நதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டார். இந்த நபருக்கு சாவகச்சேரி பதில் நீதிவான் சு.கந்தசாமி 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (எ-117)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய லொறிகள் பொலீஸாரிடம் சிக்கின

தென்மராட்சி,ஏப்.27

அனுமதிப்பத்திரமின்றி மணல ஏற்றிவந்த மூன்று லொறிகளை சாவகச்சேரிப் பொலீஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

புத்தூர், சுன்னாகம், வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இந்த லொறிகளின் சாரதிகள சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த வெள்ளியன்று ஆஜர்செய்யப்பட்டனர்.

லொறியின் சாரதிகளுக்கு தலா நான்காயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன், மணலைப் பறிமுதல் செய்யுமாறு நீதிமன்ற பதில் நீதிவான் சு.கந்தசாமி உத்தரவிட்டார்.

புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபரின் அனுமதிப்பத்திரத்துடன் ஏற்றிவரப்பட்ட மணலும் பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

## பள்ளிவாசல் கட்டடத்தை கையளிக்க ஏற்பாடு

தென்மராட்சி,ஏப்.27

படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள சாவகச்சேரி மொகிதீன் ஜும்மா பள்ளிவாசல் கட்டடம் அடுத்த வாரம் அதன் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையிடம் பிரதேசச் செயலினால் கையளிக்கப்படவுள்ளது.

சாவகச்சேரிப் பகுதியில் முஸ்லிம் மக்கள மீளக்குடியமர்ந்து வருவதால் பள்ளிவாசல் கட்டடத்தினையும், காணியையும் மீளப்பெற்று வழங்குமாறு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினர் கடந்த பெப்ரவரிமாதம் தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் முறையிட்டிருந்தனர்.

இதுவிடயமாக பிரதேச செயலர் 52 ஆவது படையணித் தளபதியுடன் தொடர்பு கொண்டதையடுத்து பள்ளிவாசல் கட்டடத்தினை பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையிடம் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 52 ஆவது படையணியைச் சேர்ந்த மேஜர் ஏக்கநாயக்க தென்மராட்சிப் பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளார். (எ-117)

# அரச பாடசாலைகளில் ஆயுள்வேதப் பாடநெறி

கொழும்பு,ஏப்.27

நாட்டிலுள்ள அரச பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவரிடையே ஆயுளவேதப் பாடநெறியை அறிமுகஞ் செய்யும் பணியில் சுதேச வைத்திய முறை தொடர்பான தேசிய நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

இதற்கமைய அரச பாடசாலைகளில் சமூகக்கல்விப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு ஆயுள்வேதம் தொடர்பான பயிற்சிகளை நிறுவனம் வழங்கிவருகின்றது.

இதன்படி அம்பாறைக் கரையோரப் பிரதேச அரச பாடசாலைகளில் சமூகக்கலவி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வை இம்மாதம் 28 ஆம் திகதி அம்பாறை மாவட்ட ஆயுளவேத சுகாதார அதிகாரி அலுவலகம் நடத்தவுள்ளது. (ஐ-ரி)

## அழைப்புக் கட்டளை

இல.16 பிரிவு 55 (1)

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்
ஜெயலிங்கம் பெண் சறோஜினி
மே/பா க.மயில்வாகனம்,
கற்பக்குளை, கந்தரோடை,
சுன்னாகம்.

வழக்கு இல. மணநீக்கம்/196 எதிர் வழக்காளி
நரசிங்கம் ஜெயலிங்கம்
அருளானந்தப் பிள்ளையார் கோவிலடி,
கந்தரோடை, சுன்னாகம்.

எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி நீங்கள் இருவருக்குமிடையே 14 ஆம் திகதி பெப்ரவரி மாதம் 1995 ஆம் ஆண்டு நடைபெற்ற திருமணப்பதிவை இரத்துச்செய்து மணநீக்கம் வழங்குமாறும் வேறு நிவாரணங்களையும் கோரி இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்காக உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக்குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

ம.செல்வரத்தினம் *நீதிமன்றக் கட்டளைப்படி,*
*பதிவாளர், மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்*
*பிரதி பிஸ்கால்/சமாதான நீதிவான், மல்லாகம்.*

குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80 ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப் படுகின்றீர்

கையொப்பம் பதிவாளர்

2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் நாளாகிய இன்று.

(31175)(16-34-19)

## 11 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1941 | | 2004 |
| 06 | | 04 |
| 27 | | 16 |



திருமதி **துரைராசா இராஜேஸ்வரி**


(தவக்கிளி)

2004.04.16 இல் இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கு அமரர் இராஜேஸ்வரி (தவக்கிளி) அவர்களின் மரணச்சடங்கில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி , தந்திமூலமும், நேரிலும் அனுதாபச்செய்திகள் தெரிவித்தோருக்கும் எமது தலைவி நோயுற்ற காலத்தில் உதவிகள் புரிந்தோருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்நத நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- மகன்மார், மகள்மார்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*கொத்தியால் ஒழுங்கை,*
*வேம்படி, வல்வெட்டித்துறை.*

(31291)(38-16-19-34)



யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற சமூகக்கல்விப் பாட ஆசிரிய ஆலோசகர்கள் இருவர் அண்மையில் வலய சமூகக்கல்வி ஆசிரியர் களால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ் வரன், ஆசிரிய ஆலோசகர்களான திருமதி பாலாம்பிகை சுப்பிரமணியம், க.செல்வப்பிரகாசம் ஆகியோருக்கு முறையே நினைவுப் பரிசில்கள் வழங்குவதைப் படங்களில் காணலாம்.

## நஷ்டத்தில் இயங்கும் மின்சாரசபை

கொழும்பு,ஏப்.27

இலங்கை மின்சாரசபை வருடந்தோறும் 2ஆயிரம்கோடி ரூபா நஷ்டத்தில் இயங்கி வருவதாகப் புதிய மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

தனியார் துறையினர் அதிக நிதி செலுத்தி மின்சக்தியைப்பெற்று அதனைக் குறைந்த கட்டண அறிவீட்டில் மக்களுக்கு வழங்கிவருவதாலேயே இவ்வாறு நஷ்டத்தில் இயங்கி வருகிறது.

தற்பொழுது நிலவும் வரட்சி காரணமாக அனல் மின்சாரத்தை அதிக அளவில் பயன்படுத்த வேண்டியிருப்பதால் மின்சார சபைக்கு மேலதிக செலவீனம் ஏற்படுவதாகவும், ஆயினும் மின வெட்டு நடைமுறைப்படுத்தப்படவோ, மின் கட்டணம் அதிகரிக்கப்படவோ மாட்டாது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-10)

## சாளை மீனைச் சந்தைப்படுத்துவதில் மீனவர் சிரமம்

பாஷையூர்க் கடலில் சாளை என்ற மீன் வகை அதிகளவில் பிடிபடுவதாகவும் -

எனினும், இதனைச் சந்தைப்படுத்துவதில் தாம் பெரும் சிரமங்களை அனுபவிப்பதாகவும் மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

விற்பனை இன்றி சந்தையில் தேங்கும் இந்த வகையான மீன்களைத் தாம் மீண்டும் கடலில் கொட்டிவிடுவதாகவும் - மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-17)

## திருவூஞ்சல் நூல் விநியோகம்

கந்தர்மடம், செட்டியதாழ்வு திருஞானவைரவர் ஆலய கும்பாபிஷேகத்தின மணவாளக்கோல சங்காபிஷேகத்தினமான கடந்த சனிக்கிழமை பண்டிதர் சி.அப்புத்துரையால், வைரவர் சுவாமிமீது பாடப்பட்ட திருவூஞ்சற் பாடல் நூல் அடியார்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. (எ-10)

# ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்கள் நன்கு தயார்ப்படுத்தப்பட்டுள்ளனர்

### நூல் வெளியீட்டு விழாவில் ஹக்கீம்

ஜாதிக ஹெல உறுமய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சாதாரணமானவர்கள் அல்லர். அவர்கள் நன்கு தயார்ப்படுத்தப்பட்டுள்ளார்கள. இராணுவத்திலிருந்து வெளியேறியவர்களுக்கு வழிகாட்டுவதைத் தங்கள் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார்கள்.

- இவ்வாறு கூறினார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூ் ஹக்கீம.

மௌலவி எஸ்.ஆதம்பாவா எழுதிய 'சமாதானமும் மனித நேயமும்' என்ற நூல் வெளியீட்டுவிழா ரண்முத்து ஹோட்டலில் நடைபெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ரவூப் ஹக்கீம் உரை நிகழ்த்தினார்.

ரவூப் ஹக்கீம் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:-

தேர்தல் நிறைவடைந்த பின் எமது கட்சியின் சார்பாக நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களை அழைத்துக்கொண்டு ஜாதிக ஹெல உறுமயவினரைச் சந்திக்க அவர்களின் விகாரைக்குச் சென்றேன. அங்கு நாம் அவர்களைச சந்திக்க வருவது தொடர்பாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததால் அவர்கள் எம்மைச் சந்திப்பதற்கு மிகவும் தயார் நிலையில் இருந்தனர். தங்கள் ஆலோசகர்கள் சகிதம் எம்மைச் சந்தித்த ஹெல உறுமயவினர், மிக நேர்த்தியாகத் தங்களது அரசியல் பிரவேசம், நோக்கம், கொளகைகள் தொடர்பாகக் கருத்துக்களைப் பறிமாறினர்.

எமது கட்சியின் கொள்கைகள் தொடர்பாகவும் ஏனைய பொது விடயங்கள் தொடர்பாகவும் அவர்களுடன் கலந்துரையாடிய நாம், மீண்டும் சந்திப்போம் எனக்கூறி விடை பெற்றோம்.

நாடாளுமன்ற சபாநாயகர் தெரிவு ஒரே கலாட்டாவாக இருந்தது. எந்தவொரு காலத்திலும் எந்தவொரு நாட்டிலும் சபாநாயகர் தெரிவு இவ்வளவு கலாட்டா நிறைந்ததாக இருக்கவில்லை.

சபாநாயகர் எதிர்க்கட்சியில் இருந்து தெரிவுசெய்யப்பட்டமையை ஜனநாயகத்திற்குக் கிடைத்தவெற்றியாகக் கருதியபோதும், நாடாளுமன்றத்தில ஜே.வி.பி.உறுப்பினர்கள் உள்ளிட்ட பல உறுப்பினர்கள் நடந்துகொண்ட விதம் மிகவும் கீழ்த்தரமானது. -

வடக்கு - கிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் பேசியபோது, ஜே.வி.பி.உறுப்பினர்கள் கூச்சலிட்டு அவர்களைப் பேசவிடவில்லை. அதே போல் தெற்கில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட ஹெல உறுமயவினர் - அதுவும் மதகுருமார்கள் பேசும்போதும் மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளால் ஜேவிபியினர் அவர்களை ஏசித், திட்டி காகித குப்பைகளை வீசி அவர்களை அவமதித்தனர்.

அத்துடன், நின்று விடாமல் பிக்குமாரைக் கீழ்த்தரமான வார்த்தைகளால் ஏசினர். சபாநாயகர் தெரிவில ஏற்பட்ட கூச்சல், குழப்பங்களின மூலம எதிர்கால சமாதான முன்னெடுப்புக்கள் குறித்தும் மிகப்பெரிய சந்தேகம எழுந்துள்ளது. ஒருபுறம் ஜாதிக ஹெல உறுமய என்ற அமைப்பு குறுகிய காலத்தில் ஐந்து லட்சத்து ஐம்பதினாயிரம் வாக்குகளைப் பெற்று அரசை நிர்ணயிக்கும் முக்கிய கட்சிகளில் ஒன்றாக மாறியிருக்கின்றது.

ஹெல உறுமயவினர் மிக நன்றாகத் தயார்ப்படுத்தப்பட்டுள்ளனர். சபாநாயகர் தெரிவில்கூட தமது கட்சியின் கொளகைக்கு மாறாக அரசு பக்கம் 2 உறுப்பினர்கள் சாய்ந்ததனால் சபாநாயகர் தெரிவில் நடுநிலை வகிப்பது என்ற தமது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படாமல் இரண்டு வாக்குகளை எதிரணியினருக்கு வழங்கி விததியாசமான முறையில் நடுநிலைமையைக் காத்தனர். இதன்மூலம், அவர்களின் கொள்கைக்காக - நோக்கத்திற்காக - மிகவும் நேர்த்தியாகத் தயார்ப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெளிவானது.

- இவ்வாறு கூறினார் ஹக்கீம்.

"சமாதானமும் மனித நேயமும்" நூலின் முதற்பிரதியை எழுத்தாளர் மௌலவி ஆதம்பாவிடம் இருந்து ரவூப் ஹக்கீம் பெற்றுக்கொண்டார்.

### வடக்கு - கிழக்கிலிருந்து

# பல்கலைக்கழகத்திற்கு திறமையடிப்படையில் மாணவர்களை உருவாக்காதது வேதனையே!

### பிரதிக் கல்விப்பணிப்பாளர் கருத்து

காரைதீவு,ஏப்.27

அண்மைக்காலமாக வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு திறமை அடிப்படையில் செல்லும் மாணவர்களை நாம் உருவாக்காதது கவலைக்குரியது.

- இவ்வாறு திருகோணமலை மாகாணக் கல்வித் திணைக்களத்திலிருந்து திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்ட கல்வி அபிவிருத்திக்கான பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.வேதநாயகம் தெரிவித்தார்.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையில் வலயக்கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ், எம்.ரீ.ஏ.தௌபீக் தலைமையில் நடைபெற்ற கல்வி அதிகாரிகளுடனான விசேட கலந்துரையாடலில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்:-

திறமையடிப்படையில் கொடிகட்டிப் பறந்த வடக்கு - கிழக்கு மாகாண மாணவர்கள் இன்று மாவட்ட, கோட்டா முறைமையை நம்பிக்கொணடிருக்கிறார்கள். இதனையிட்டு கல்விச சமூகம் நன்கு சிந்திக்கவேண்டும்.

போலிச் சாதனைகளில் நாம் காலத்தைக் கழிக்காமல் திறமையான மாணவர்களை உருவாக்க எம்மை அர்ப்பணிக்கவேண்டும். குறைபாடுகளைக் கூறிக்கொண்டு நாம் வாளாதிருக்க முடியாது.

வடக்கு - கிழக்கில் வாழும் ஒவ்வொருவருக்கும் எமது கல்வித் தரத்தை உயர்த்தவேண்டிய கடமைப்பாடு உள்ளது.

மடு வலயத்திற்கு நான் விஜயம் செய்தபோது அங்கு அழகியல் கல்வி பூச்சிய நிலையில் இருந்தது கண்டு ஆச்சரியமடைந்தேன். ஆசிரியர்கள் இல்லாமையே இந்நிலைக்குக் காரணமென்று கல்வி அதிகாரிகள் நியாயம் காட்டினர். அது என்னைத் திருப்திப்படுத்தவில்லை. உடனே அதே கல்வி அதிகாரிகள் ஊடாக அப்பகுதியில் ஜி.சீ.ஈ. (சா.த.) தரத்தில் அழகியல் கல்வியில் சித்தியெய்திய 12 பேரை அழைத்து சேவைசெய்யுமாறு வேண்டினேன். அவர்களும் உடன்பட்டார்கள். அவர்களுககுத் தேவையான உதவிகளை வழங்கினோம். இடையிடையே மதிப்பீட்டைச் செய்தோம். முடிவு சாதகமாக அமைந்தது. சங்கீதத்தில் 48%, நடனத்தில் 87%, சித்திரத்தில் 45% பெறுபேறு கிட்டியது.

ஓர் அழகியல்பாட ஆசிரியரும் இல்லாத அந்த வலயத்தில் இப்படியான மாற்றத்தை ஏற்படுத்தமுடியுமென்றால் கணிசமான வளமுள்ள இப்படிப்பட்ட பிரதேசங்களில் ஏன் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தமுடியாது.

நாம் மனம்வைத்து அர்ப்பணிப்புடன் கடமையாற்றவேண்டும். இங்குள்ள வலயக் கல்விப் பணிப்பாளர் தௌபீக் அனைவருடனும் ஒத்துப் போகும் சிறந்த நிர்வாகி. எனவே, அவரது வழிகாட்டலில் சில செயற்பாடுகளை விசேடமாக மேற்கொண்டால் நிச்சயம் பலன் கிடைக்கும்.

- இவ்வாறு அவர் மேலும் கூறினார். (ஐ-க)

# விடுதலைப் புலிகள் - முஸ்லிம் பிரதிநிதிகள் உபகுழுக் கூட்டங்கள் ஆரம்பிக்கப்படுமா?

ஏறாவூர், ஏப்.27

கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுக்கும் முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான உப குழுக் கூட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படுமா என்று தமிழ் - முஸ்லிம் சமூகங்களின் புத்திஜீவிகளும் நலன் விரும்பிகளும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இரு சமூகப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கூட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதன் மூலம் இரு சமூகங்களுக்குமிடையில் பலமான புரிந்துணர்வினைக் கட்டியெழுப்பமுடியும் என்றும் அவர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மாவட்ட மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும் தமிழ் - முஸ்லிம் விவகாரங்கள் தொடர்பாக ஆராயும் உப குழுக் கூட்டங்கள் கடந்த ஆண்டு நடைபெற்று வந்தன.

இக் கூட்டங்களில் இரு சமூக மக்களினதும் காணி விவகாரங்கள் மற்றும் விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டு சுமுகமான தீர்வுகள் காணப்பட்டுவந்தன. மட்டக்களப்பு மாவட்டத்தில் உப குழுக் கூட்ட நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வந்தன. தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரி.ரமேஷ் தலைமையிலான குழுவினரும் முஸ்லிம் மக்கள் சார்பில் முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான பஸீர் சேகுதாவூத் தலைமையிலான குழுவினரும் பேச்சுகளில் ஈடுபட்டு இம்மாவட்ட தமிழ் - முஸ்லிம் மக்களின் காணிப் பிணக்குகளில் பெரும்பாலானவற்றிற்கு சுமுகமான தீர்வுகளை எட்டியுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவட்ட மட்டத்திலும் வலய மட்டத்திலும் 20இற்கும் மேற்பட்ட சந்திப்புக்களில இரு தரப்பினரும் ஈடுபட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் வாழும் தமிழ் - முஸ்லிம் மக்களின் பிணக்குகள் பலவற்றிற்கு இன்னமும் சுமுகமான தீர்வுகள் எடுக்கப்பட வேண்டியுள்ளன.

இந்நிலையில் புதிய அரசு பதவியேற்ற பின்பு படையினருக்கும் புலிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று முதல் தடவையாக மட்டகளப்பு - வவுணதீவு பிரதேச செயலக மண்டபத்தில் மிகவும் சுமுகமான அடிப்படையில் நடைபெற்று முடிந்துள்ளது.

இந்த வரிசையில் தமிழ் - முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளுக்கு இடையிலான பேச்சுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று புத்திஜீவிகள் எதிர்பார்க்கின்றனர்.

ஏற்கனவே இப்பேச்சுகளில் பங்குபற்றிய முக்கியஸ்தர்களையும், புதிய அரசியல் மாற்றங்களினால் மக்களால் அடையாளம் காணப்பட்டுள்ள பிரதிநிதிகளையும் கொண்டு உபகுழுக் கூட்டங்கள் நடத்தப்படுவதன்மூலம் தீர்மானங்களை அமுல்படுத்துவதறகு இலகுவானதாக அமையும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (க)

### இத்தாலி செல்லமுயன்றவேளை கைதான

# 50 விளக்கமறியல் கைதிகள் மேன்முறையீட்டு மனு

கொழும்பு,ஏப்.27

இத்தாலிக்குச் சட்டவிரோதமாகச செல்ல முயன்று பொலீஸாரால் கைது செய்யப்பட்ட 50 இலங்கையர்களும் தங்களைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

இவர்கள் தமது மனுவில் சட்டமா அதிபரையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரையும் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளனர். கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதியிலிருந்து தங்களை விளக்கமறியலில் வைத்திருப்பது சட்டவிரோதமானது என்று அவர்கள் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிணையில் தாங்கள் செல்வதற்கு நீர்கொழும்பு நீதிவான் அனுமதி வழங்கும் வகையிலே உத்தரவு வழங்குமாறு அவர்கள் தங்கள் மனுவில் கேட்டுள்ளார்கள். (ஐ)

# அடம்பன் திலீபன் மருத்துவமனையின் ஆண்டுவிழா சிறப்புற நடந்தது

கிளிநொச்சி,ஏப்.27

மன்னார், அடம்பனில் உள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை நிலையத்தின் 2ஆம் ஆண்டு நிறைவுவிழா ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றினார்.

மன்னார் தமிழர் புனர்வாழ்வு கழகத் தலைவர் மரியநாயகம் குரூஸ், மன்னார் கல்வி மேம்பாட்டுத் தலைவர் கி.ஜேக்கப் ஆகியோர் உட்பட பலர் உரை நிகழ்த்தினார்கள்.

சிறப்புரையினை அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நிகழ்த்தினார்.

இந்த மருத்துவமனைக்கென வெளிநாட்டு தமிழமைப்புகளின் நிதியுதவியுடன் கொள்வனவு செய்யப்பட்ட நோயாளர் காவு வண்டியினை விடுதலைப் புலிகளின் மன்னார், அடம்பன தியாகி திலீபன் மருத்துவ சேவைக் குழுவினரிடம் வழங்கினர். (ஐ-8)

# கோலாகலத் திறப்புவிழா - இன்று

## Bio Tec International Ltd,

## உயிர் நுட்பு

131/2, பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள உயிர் நுட்பு நிறுவனத்தின் புதிய வளாகத்தை சுவீடன் உப்சலாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த

- பேராசிரியர் **மாலின் ஒக்கர்புளொம்** (*Prof.* Malin Akerblom).
- பேராசிரியர் **ருனே லிமின்கா** (*Prof.* Rune Liminga)
- திருமதி **இன்கா பிறித்** லிமின்கா (*Mrs.* Inga Brith Liminga) ஆகியோர் திறந்து வைக்கின்றனர்.

காலம்: இன்று (27.04.2004) செவ்வாய்க்கிழமை காலை 10 மணி

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
*சமுகமளித்துச் சிறப்பியுங்கள்.*

இயக்குநர் சபை,
**உயிர் நுட்பு.**

---

**சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் அலுவலர்**
**(Marketing Promotion Officer)**

எமது நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் மென்பானங்களையும் ஏனைய தயாரிப்புக்களையும் சந்தைப்படுத்துவதற்கு முன் அனுபவமுள்ள அலுவலர் ஒருவர் தேவை.

தகுதியானவர்கள் 30.04.2004 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

Bio Tec. International Ltd.,
*131/2, Palaly Road,*
*Thirunelvely, Jaffna.*

(C/34665)(34-16-19)

## வெள்ளிவிழா நிகழ்வு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 25ஆவது ஆண்டுக் கொண்டாட்டமும் வெள்ளிவிழா நிகழ்வுகளும் எதிர்வரும் 2ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு சாவகச்சேரி நவீனசந்தை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

முதன்மை விருந்தினராக லயன்ஸ் கழக முன்னாள் சர்வதேச பணிப்பாளரும் தற்போது மாவட்ட ஆளுநரின் ஆலோசகருமாகிய லயன் சக் விஜேநாதனும் கௌரவ விருந்தினர்களாக லயன் கழக 306பி மாவட்ட உதவி மாவட்ட ஆளுநர் ல்யன் எஸ். சிவாணந்தனும் லயன் சீமாட்டி விஜயலட்சுமி சிவானந்தனும் கலந்துகொள்வர். (10-117)

## சான்றிதழ் வழங்கலும் கண்காட்சியும்

தென்இந்திய திருச்சபையின் யாழ். ஆதீனத்தால் நடத்தப்பட்டுவரும் தொழிற்பயிற்சி நெறிகளில் பயிற்சி பெற்று வெளியேறும் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். நாலாம் குறுக்கு வீதியில் உள்ள ஆதீன மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில், பிரதம விருந்தினராக யாழ். பரியோவான் கல்லூரி உபஅதிபர் அருட்திரு. என். ஜே.ஞானப்பொன்ராஜா அடிகளும், சிறபபுவிருந்தினர்களாக கிராம அலுவலர் எஸ்.பஞ்சலோறன்ஜஹனும் கலந்து கொளவர். கண்காட்சி நாளை தொடக்கம் அடுத்தமாதம் முதலாம் திகதி வரை நடைபெறும். (எ-30)

## BEAUTY PARK

முக ஒப்பனை, மணப்பெண் அலங்காரம், கூந்தல் அலங்காரம், Facial, கேக் ஐசிங், ஐசிங் மலர்கள், திருமண கேக் வகை தயாரிப்புப் பயிற்சி வகுப்புகள் மே மாதம் 02.05.2004 ஆரம்பமாகவுள்ளன.
மேலதிக தொடர்புகளுக்கு:

**நமிலாஸ் கொமினிக்கேசன்**
நெல்லண்டை, தும்பளை.
**T.P.NO.:021-226 3149.**

(31360)(34-16-19)

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம

## கேள்வி அறிவித்தலிற்கான காலநீடிப்பு

2004.04.17 ஆம் திகதிய பத்திரிகையின் கேள்வி அறிவித்தற் பிரசுரத்திற்கான காலம் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது.

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி:**
2004.05.06 பி.ப. 2.00 மணிவரை

**கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:**
2004.05.07 ந.ப.12.00 மணிவரை

**கேள்வி திறந்து பார்க்கும் திகதி:**
2004.05.07 பி.ப. 3.00 மணி

வலி.தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

திருமதி ச.சொக்கலிங்கம்
செயலாளர்,
வலி.தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(சி-34666)(34-16-19)

# நன்றி நவிலலும் 21 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும்



அமரர்

## இராமசாமி கோகிலம்

(கனகம்மா) அவர்கள்


07.04.2004 நிலவுலக வாழ்வை நீத்து எம்குலதெய்வம் பத்திரகாளியது பாதமலருற்ற எம் தாயாரது மறைவுக்குரிய அனுதாபத்தையும், பல வழிகளில் பங்களிப்பையும் ஆற்றிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன் இன்று (27.04.2004) செவ்வாய் எமது இல்லத்தில் நிகழும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம். (31357)

17/1, அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்



## கந்தையா சண்முகலிங்கம்

(முன்னாள் முகாமையாளர், வாழைக்குலை விற்பனைச்சங்கம், நீர்வேலி)

நர்வேலி வடக்கைச் சேர்ந்த கந்தையா சணமுகலிங்கம் நேற்று (26.04.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியினரின் கனிஷ்டபுத்திரனும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - நல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் பூபதி அம்மாவின் அன்புக் கணவரும் மகாதேவன் (கனடா), காலஞ்சென்ற சசிலேகாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் செந்தில்நாதன் (கனடா), மகிந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜயநிதா, நிஷானி, மிதுலன், மயூரதன், மாகர்ஷன், மதூஷன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் கணபதிப்பிள்ளை காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் இலட்சுமி, கந்தசாமி, தவராஜசிங்கம், விஜயரட்ணம், புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாசிவன் சந்தி,*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

தகவல்:
திருமதி ச.பூபதி அம்மா
(மனைவி)

(31364)(42-34-16-19)

# வெல்லுங்கள் !




## சென்னைக்கு 2 விமானச் சீட்டுக்கள்

## ரூபா. 5000/- பெறுமதியான 5 பரிசு வவுச்சர்கள்

## ரூபா. 2500/- பெறுமதியான 10 பரிசு வவுச்சர்கள்

விபரங்களுக்கு அண்மையிலுள்ள MMBL முகவரை தொடர்பு கொள்ளுங்கள்

**011 2372 333**

Flex Graphic

**எம்முடைய நாடளாவிய முகவர் அமைவிடங்கள்**

**வனிக் இன்கோப்பரேஷன் லிமிட்டட்** - அனுராதபுரம்-025-2223420 பதுளை-055-2223905 சிலாபம்-032-2221415 தம்முள்ள-066-2284283 தெஹியத்தகண்டிய-027-2250181 எம்பிலிபிட்டிய-047-2230932 காலி-091-5458666 கம்பஹா-033-2224903 ஹிங்குராக்கொட-065-2246030 கண்டி-081-2224912 குருநாகலை-037-2224888 மாத்தறை-041-2220117 மதுகம-034-2248796 நுவரெலியா-052-2223382 இரத்தினபுரி-045-2230677 **கோபியன் டெக்னோலஜீஸ் பிரைவெட் லிமிட்டட்** - அனுராதபுரம்-025-2235166 பதுளை-055-2224244 பண்டாரவேல-057-2223999 கொழும்பு 03 - 011-2577779 காலி-091-2225794 கண்டி-081-2202150 குருநாகலை-037-2231260 மாத்தறை-041-2231100 நீர்கொழும்பு-031-2232345 பாணந்துறை-038-2241060 இரத்தினபுரி 045-2231777 **தெகிவல அடகு நிலையம்** - அளுத்கம-034-2271966 அம்பலங்கொடை-091-2255256 அவிஸ்ஸாவலை-036-2232094 பத்தரமுல்ல-011-2862603 பேருவளை-034-2279969 கொழும்பு 12-011-2330873 011-2382112 தெஹிவளை-011-2713982 தெமட்டகொடை-011-2665618 தெரனியகலை-036-2840931 ஹேலியகொடை-036-2259023 கம்பஹா-033-2226795 ஹோமாகமை-011-2857353 ஹொரண-034-2263607 கடவத்த-011-2901526 கிரிபத்கொடை-011-2912926 மகரகம-011-2850785 011-2851511 மாளிகாவத்தை-011-2678821 மொரட்டுவை-011-2625839 மவுண்ட் லெவனியா-011-2739184 நிட்டம்புவ-033-2294674 நுகேகொட-011-2853800 பாணந்துறை-038-2232042 வத்தளை-011-2947817 யக்கலை-0333-1557 **அமான இன்வஸ்மன்ஸ் லிமிட்டட்** - கொழும்பு -03 - 011-2564090 கொழும்பு -11 - 011-2380686 கல்முனை-067-2223588 கண்டி-081-2200236 காத்தான்குடி-065-2473988 **சென்றல் ஃபினேன்ஸ் கொம்பனி லிமிட்டட்** - கொழும்பு 02 - 011-2445131 கண்டி-081-2228468 081-2230110 குருநாகலை-037-2228020 நீர்கொழும்பு-031-2235111 நுகேகொடை-011-2815800 **LB ஃபினேன்ஸ் லிமிட்டட்** - பதுளை-055-4499523 கொழும்பு -05 011-2810866 கொழும்பு -07 011-4521000 கொழும்பு -08 011-2692503 கொழும்பு -09 011-4610963 கொழும்பு -10 011-4434223 கொழும்பு -13 011-4614668 கொழும்பு -14 011-2472497 காலி-091-4381644 ஜா-எல-011-4830643 கண்டி-081-2225765 கிரிபத்கொடை-011-4818193 நீர்கொழும்பு-011-4872513 பிலியந்தலை-011-4213008 **லாஃப் சன் அப் சுப்பர் மார்கட்** - கொழும்பு -05 011-5364112 ராஜகிரிய-011-4402214 கொழும்பு -06 011-5557771 **ட்ரான்ஸ் கல்ஃப் க்ரூப்** - அனுராதபுரம்-025-2223789 பதுளை-055-2232015 கண்டி-081-2226627 குருநாகல்-037-2298011 037-2221281 மாத்தளை-066-2289606 மாத்தறை-041-5412222 கேகாலை-035-2232908 **மற்றும் வேறு இடங்கள் - இரத்மலானை** - கோல்ட் லைன் APO -011-5559678 **அக்கரைப்பற்று** - அடம்ஸ் APO-067-2277450 **அளுத்கம** - ரோயல் மணிமார்ட்-034-2275209 **அனுராதபுரம்** - ஹைடெக் APO-025-2225798 ஹை லைட் கொம்யூனிகேசன்ஸ்-025-2224124 **பதுளை** அல் சஃபா இன்ரநெஷனல்-0777-861041 **பலாங்கொடை** சமரசிங்க APO-045-2287165 **பெடபொல** - ஜயசேகர APO-091-2260060 **மட்டக்களப்பு** - ரிவோரா என்ரபிறைசஸ்-065-2223447 சஸ்வரி APO-065-2223008 ஸ்ரீதரன் கொம்யூனிகேசன்-065-2223008 **பொரலஸ்கமுவ** - நிட்டல் எடிஷன் APO-011-2519835 **சிலாபம்** - JGS APO-032-4860568 **சுன்னாகம்** - நீதினி APO-021-2226267 **கொழும்பு** - ட்ரான்ஸ்வேல்ட் பிரைவெட் லிமிட்டட்- 011-2544357 செங்கட சிட்டி-011-4793100 ஷம்ஸ் அன்ட் சன்ஸ் ட்ரவல்ஸ் லிமிட்டட்-011-2599253 MERC வங்கி-011-4523456 கொழும்பு க்ரடிட் APO-011-4515956 ஸ்ரீயாணி அடகு நிலையம்-011-2507195 காலன்ட் APO-011-5362841 இன்போடெக் நெட்கஃபே-011-2506746 EL இந்தியாஸ் ரெக்ரூட்டிங் ஓஃபிஸ்-011-2681302 வருண APO-011-2334916 கல்யாணி ஜுவலர்ஸ்-011-2422912 வெல்கம் APO-011-2449319 எட்லஸ் APO-011-2431498 எயார்கொம் ட்ரவல்ஸ்-011-4617109 டயல் கொம் ஹன்சா APO-011-2436095 டயல்கொம்-011-4617430 **தெஹிவளை** - லெபான் கல்ஃப் லங்கா இன்ரபிறைசஸ்- 011-2724024 கொண்டிநென்டல் APO-011-5559427 **திவுலபிட்டிய** - நன்ஜிதா APO-031-2246406 **கம்பஹா** - CSB APO-033-4670354 **ஹங்வெல்ல** - கோல்டலைன் APO-036-2254350 **ஹப்புத்தலை** - SS APO-057-2268233 **இனுவில்** - கணேசன் சென்டர்-021-2225708 **ஜா-எல** - மஹாரகே அடகு நிலையம்-011-5353192 **யாழ்ப்பாணம்** - எட்லஸ் இன்டெல்-021-2222990 கணேஷா ஜுவல் ஹவுஸ்-021-2225987 குகன் கொம்யூனிகேசன்-021-2222027 குமார் ஏஜன்சி-021-2222050 021-2223052 மஹாலக்ஸ்மி ஸ்டோர்ஸ்-021-2222024 ராஜு ஸ்டோர்ஸ்-021-2225224 ஸ்ரீமுருகன்-021-2225392 திருமுருகன் கொம்நெட்-021-2227310 யோகா கொம்யூனிகேசன்-021-2222106 குமார் APO- 021-2223453 ஸ்ரீமுருகன் APO-021-2222670 **கைதடி** - வசந்தா APO-021-2223850 **களுத்தறை** - மஃபூர் ஜுவலர்ஸ்-034-2222952 **கந்தானை** - சுரங்க APO-011-2236154 **கண்டி** - மங்களா ஜுவலர்ஸ்-081-2222431 நபீஸா APO-081-2233193 **கன்னத்தொட்ட** - செலான் APO-036-2267423 **கேகாலை** - ரத்னகிரி APO-011-4680374 **கொச்சிக்கடை** - சுல்தானா APO-031-4870337 **கொடிகாமன்** - எட்லஸ் இன்டெல்-021-2263400 **கொக்குவில்** - ஞானம்ஸ் APO-021-2223885 **கோப்பாய்** - இபனி APO-021-2223559 **கொட்டகலை** - லக்ஷ்மி என்ரபிறைஸ்-051-2224845 **மானிப்பாய்** - தினேஷ் பேக் ஹவுஸ்-021-2222570 **மன்னார்** - மஞ்சுளா ஸ்டோர்ஸ்-032-2232445 **மாத்தளை** - கொடிதுவக்கு அன்ட் பிரதர்ஸ்-066-2243532 ஸ்ரீ மல்லிகா ஜுவலர்ஸ்-066-2222201 AO லக்ஷ்மி ஜுவலர்ஸ்-066-2230581 **மாத்தறை** - நில்மினி APO-041-2222391 **மாவனெல்ல** - ஈஸ்டர்ன் ஜுவலர்ஸ்-035-4682209 **மிரியான** - போதிய வீதி APO-011-2278377 **மொனறாகலை** - தயாலின் APO- 055-2277102 **மொரட்டுவ** - ஆசிரி APO-011-2655749 **நல்லூர்** - சந்தியா மல்டி கோட்யாட்-021-2226960 **நாவலப்பிட்டி** - கண்டி ஸ்டோர்ஸ் கொம்யூனிகேசன்-054-2223986 **நீர்கொழும்பு** - சிவா என்ரபிறைசஸ்-031-2238745 தில்ஸா APO-031-2233494 ஜஸ்மின் APO-031-2235040 **நெல்லியடி** - அம்பிகா ஸ்டோர்ஸ்-021-2263139 **நுகேகொடை** - காமன்ஸ் APO-011-2852121 **நுவரெலியா** - அருணா ஜுவலரி-052-2222165 **பாணந்துறை** - செசத APO-038-2238493 **பேராதனை** - ஜயந்தி புத்தக சாலை-081-4474123 **பருத்தித்துறை** - கணேஷா ஏஜன்சி-021-2263928 **பொத்துவில்** - NM ட்ரேடர்ஸ்-063-2248065 **பூகொட** - ஸகீ கோல்ட் ஹவுஸ்-011-2404315 **ராகம** - ஷியான் APO-011-2958460 **இரத்தினபுரி** - ரமா APO-045-2230024 **திருகோணமலை** - லேசர் ஸ்டேஷனரீஸ்-026-2223072 026-2222038 **உக்குவெல** - கொடிதுவக்கு APO-066-2243532 **வாழைச்சேனை** - ASA இம்பெக்ஸ்-065-2257245 **வல்வெட்டித்துறை** - ஓம் சரவணபவ கொம்யூனிகேசன்-060-221616 **வவுனியா** - அம்பாள்ஸ்-024-2222421 கணேஷா ஜுவல்ஸ்-024-2222411 கோபி ஏஜன்சி-024-2222411 **வத்தளை** - துலானி APO-011-2935273 நிமல் APO-011-2935615 **வெள்ளவத்தை** - ஒன்லைன் கோல் சென்டர்-011-2361199 **வென்னப்புவ** - நிவந்தா பிரைவெட் லிமிட்டட்-031-2255830 நிவந்தா APO-031-2255475.

● நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும் ● அனேகமான இடங்கள் 365 நாட்களும் திறந்திருக்கும்

**WESTERN UNION®**
**MONEY TRANSFER**

AUTHORISED AGENT
**MMBL Money Transfer (Pvt) Ltd.**
300, Galle Road, Colombo 3.

C/30/2004

# பயன்பல தரும் எலுமிச்சையை வீடுகளில் வளர்த்துப் பயன் பெறுவோம்!


தற்போது எமது பிரதேசத்தில் எலுமிச்சம்பழங்கள் மலிவாகக் கிடைக்கும் காலமாகும். எலுமிச்சம் பழங்கள் பொதுவாகப் பெப்ரவரி தொடக்கம் ஏபரல் மாதங்களிலும் ஜூலை தொடக்கம் ஓகஸ்ட் மாதங்களிலும் அதிகமாகக் கிடைக்கின்றன.

குருநாகல், கெக்கிராவ, மாத்தளை போன்ற இடங்களிலும் வன்னிப் பிரதேசத்திலும் இருந்து கொண்டுவரப்படும் எலுமிச்சம்பழங்களைவிட எமது பிரதேசத்தில் வீட்டுத்தோட்டங்களிலும் எலுமிச்சம்பழங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன.

எலுமிச்சை விற்றமின் 'சி' சத்தை அதிகம் கொண்ட பழமாகும். 100 கிராம் எலுமிச்சம் பழச்சாற்றில் 16 தொடக்கம் 20 வரையான மில்லிகிராம் விற்றமின் 'சி' கிடைப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எலுமிச்சம் பழச்சாறு நம்மவர்களால் வெப்பத்தையும் தாகத்தையும் தணிக்கும் பானமாகப் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன், எலுமிச்சை ஊறுகாயாகவும், உணவுக்குச் சுவையூட்டும் பொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

எலுமிச்சம் பழத்தைக் கொண்டு பானம் மட்டுமல்ல, பழரசமாகவும் தொழிற்சாலைகளில் தயாரித்து



விற்பனை செய்கிறார்கள். அத்துடன், ஊறுகாயாகவும் தயாரித்து விற்பனை செய்கின்றனர்.

பானமாகவும், பழரசமாகவும் ஊறுகாயாகவும் தயாரித்து நீண்டகாலம் உபயோகிக்கக்கூடியதாக உள்ள எலுமிச்சம்பழத்தை நாம் பாதுகாக்கக்கூடிய வழிமுறைகளை இங்கே தருகின்றோம்.

**பழமாகப் பாதுகாத்தல்**

பொதுவாக எலுமிச்சம் பழங்களைத் தண்ணீரில் போட்டுவைப்பதன் மூலம் ஒரு சில நாள்களுக்குப் பாதுகாக்கலாம். 9-10 பாகை செல்சியஸ் வெப்பநிலையும் 85-90 சாரீரப்பதனும் கொண்ட குளிரூட்டப்பட்ட நிலைமையிலும் பழங்களை 6-8 கிழமைகள் வரையில் பாதுகாக்கலாம். மணலையும், பழத்தையும் குளிர்ச்சியான இடத்தில் மாறிமாறிப் பரவியும் சிலநாள்கள் பாதுகாக்கலாம்.

**நிறைமுனைவன்**

அதிகளவில் எலுமிச்சம்பழம் கிடைக்கும் காலங்களில் அவை வீணாகாமல் தடுப்பதற்குச் சிறந்த முறை அவற்றைப் பல்வேறுபட்ட பொருள்களாக மாற்றித் தயாரித்துப் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்துவதாகும்.

**பழப்பானம் தயாரித்தல்**

எலுமிச்சம் சாற்றுடன் உப்பினை அளவாக இட்டு நன்றாகக் கலக்கி அக்கலவையை அளவாகச் சூடாக்கிப் போத்தலில் இட்டுப் பாதுகாக்கலாம். இது பழைய காலந்தொட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் ஒரு நடைமுறையாகும்.

தேவைக்கேற்ப இக் கலவைக்கு சிறிதளவு மிளகாய்த்தூளும், சரக்குத்தூளும் சேர்த்துக்கொள்ளலாம். தயாரிக்கப்பட்ட இப்பானத்தைப் போத்தலில் அடைத்து மிளகு சிறிது சேர்த்துக்கொண்டால் சுவையாக இருக்கும். இவ்வாறு பாதுகாக்கப்படும் பழச்சாறு சுமார் 6மாதங்கள் வரை பழுதடையாமல் இருக்கும்.

பழப்பானத்தை போத்தல்களில் இன்னொரு முறையிலும் பாதுகாக்கலாம். போத்தல்களை சுடுநீரால் கழுவி துப்புரவாகத் துடைத்து சுத்தம் செய்தபின் எலுமிச்சம் பழங்களை வெட்டிச் சாற்றைப் பிழிந்து கொள்ளவேண்டும். இச்சாற்றினை சுத்தமான சேலைத்துண்டினால் வடிகட்டிக்கொள்ளவேண்டும். இவ்வாறு வடிகட்டி எடுத்த ஒரு கிலோகிராம் எலுமிச்சம்பழச் சாற்றிற்கு சுமார் 15 கிராம் பொட்டாசியம் மெட்டாபை சல்பேற்றைக் கலந்து நன்றாகக் குலுக்கவும்.

இக்கலவையை சுத்தப்படுத்திய போத்தலில் இட்டு சூரியஒளி படாத இடத்தில் பாதுகாப்பாக வைக்கவேண்டும். இவ்வாறு நான்கு மாதங்கள் வரை இப்பானத்தைப் பாதுகாக்கலாம். இச்சாற்றினைக் கொண்டு எலுமிச்சம்பழம் தொடர்பான பல்வேறு வகை உற்பத்திகளுக்குப் பயன்படுத்தலாம்.

**பழப்பானத்தைப் பழரசமாகப் பாதுகாத்தல்**

மேலே கூறப்பட்ட பழச்சாற்றை அல்லது புதிதாகத் தயாரிக்கப்பட்ட எலுமிச்சம் பழச்சாற்றை பழரசம் தயாரிக்கப் பயன்படுத்தலாம்.

இப்பழச்சாற்றுடன் சீனியைக் கரைத்துச் சூடாக்கி வடித்தெடுத்துக் கலக்கவும். பழக்கலவைக்குத் தேவையான இரசாயன பதார்த்தத்தையும் சேர்த்து வடித்துத் தொற்று நீக்கிய போத்தல்களில் இட்டு நன்றாக மூடி வைத்துப் பாவிக்கலாம்.

எலுமிச்சம் பழச்சாற்றுடன் அளவான சீனி, உப்பு என்பன கலந்து உடன் பானமாகவும் அருந்தலாம். உடல் வெக்கையையும் தாகத்தையும் இப்பானம் தணிக்கக்கூடியது.

**ஊறுகாய் தயாரித்தல்**

எலுமிச்சம் பழங்களைத் துண்டு துண்டுகளாக காயவைத்து மிளகாய்த்தூள், சரக்குத்தூள், உப்பு, மிளகாய் என்பவற்றைச் சேர்த்து பல முறைகளில் ஊறுகாய் தயாரித்துப் பாதுகாக்கலாம். ★

## கமமும் புலமும்

தயாரிப்பு : ஜெயஸ்ரீ

---

# வடக்கு - கிழக்கு நிர்வாகத்தைப் புலிகளிடம் புதிய அரசு விரைவாக வழங்கவேண்டும்

## புதிய ஜனநாயகக் கட்சியின் மேதினச் செய்தியில் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.27

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் கையளிக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான நகல் யோசனைகளை புதிய அரசு பேச்சுக்கு எடுக்கவேண்டும். புரிந்துணர்வுடனும் விட்டுக்கொடுப்புடனும் இருதரப்புப் பேச்சுக்களை முன்னெடுத்து வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவது அவசிய தேவையாகும்.

- இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சி மே தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதியினதும் நாடாளுமன்றத்தினதும் அதிகாரம் ஒரே தலைமைத்துவத்திடம் வந்துள்ளமை சாதகமான நிலை எனக்கொள்ளப்பட்டாலும் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. எடுக்கும் முடிவானது அரசின் ஆயுளைத் தீர்மானிக்கும் நிலையே காணப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கடந்த அரசு புலிகள் இயக்கத்துடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம், யுத்த நிறுத்தம், வடக்கு - கிழக்கு மக்களுக்கு மட்டுமன்றி முழு நாட்டிற்கும் ஆறுதல் தந்த ஒப்பந்தமாகும். ஜனாதிபதியும் இன்றுவரை ஒத்துழைப்பு வழங்கி வந்தார். ஆனால், புதிய அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் நிலைப்பாட்டிற்கு இணங்கியோ அன்றி ஹெல உறுமயவின் அழுத்தங்களுக்கு அடிபணிந்தோ புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைவிடவோ முறித்துக்கொள்ளவோ வேண்டாம் என ஜனாதிபதியையும், பிரதமரையும், அரசையும் வற்புறுத்திக்கேட்டுக் கொள்கிறோம்.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உட்பட அனைத்துப்பொருள்களின் விலைகள் நாளாந்தம் ஏற்றப்பட்டு வருகின்றன. அத்துடன், அரச பணியாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவேண்டுமெனவும், தாராள தனியார் மயமானது ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நடைமுறையாகும். இவற்றின் கீழ் உள்ளூர் உற்பத்திகள் யாவும் சாகடிக்கப்பட்டு அந்நிய பல்தேசியக் கம்பனிகளின் வேட்டைக்காடாக இந்நாடு மாற்றப்பட்டுள்ளது. அத்துடன், முன்பு என்றுமில்லாத அளவுக்கு அமெரிக்கா, ஜப்பான், இந்தியா என மேற்குலகம் தத்தமது ஆதிக்கத்தை இறுக்கிக்கொள்ளப் போட்டியிட்டு நிற்கின்றன. எனவே, புதிய அரசு அந்நியத் தலையீடுகளை முற்றாக நிராகரித்து நாட்டினதும், மக்களினதும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-12)

# ஜி.சீ.ஈ. பரீட்சை நெருங்குகிறது; ஆனால் அ.அட்டைகள் வரவில்லை

## வவுனியாவில் தேங்கியுள்ள தபால் பொதிகள் வருமா?

கைதடி,ஏப்.27

விரைவில் நடைபெறவிருக்கும் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவிருக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளில் பலர் தேசிய அடையாள அட்டை இல்லாத காரணத்தினால் பரீட்சையை எழுதமுடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பலர் தேசிய அடையாள அட்டைக்குக் கடந்தவருடம் விண்ணப்பித்திருந்தபோதும் இதுவரை அவர்களுக்குக் கிடைக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை -

தேசிய அடையாள அட்டைகள் மற்றும் முக்கிய ஆவணங்களைக் கொண்ட பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பதிவுத்தபால் பொதிகள் கடந்த சில மாதங்களாகக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துசேராமல் வவுனியாவில் தேங்கிக் கிடப்பதாகவும் அறியமுடிகின்றது.

இவற்றினை யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எதனையும் அரச அதிகாரிகள் எடுக்காமல் இருப்பது வேதனை அளிக்கின்றது எனவும் மாணவர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

பொதுமக்களினதும் மாணவர்களினதும் நன்மை கருதி இவற்றை பரீட்சை ஆரம்பமாவதற்கு முன்னர் யாழ்ப்பாணம் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டோர் மேற்கொள்ளவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-75)

### பன்னாலைப் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை

தெல்லிப்பழை, ஏப்.27

தரம் ஒன்றிலிருந்து தரம் எட்டு வரையான வகுப்புகளைக் கொண்டு இயங்கும் பன்னாலை கனகசபை வித்தியாலயம் தற்போது 3 ஆசிரியர்களை மட்டுமே கொண்டு இயங்கி வருவதாக அதன் அதிபர் நா.ஆனந்தராஜா தெரிவித்தார்.

தெல்லிப்பழை உயர் பாதுகாப்பு வலயத்தின் எல்லையோரமாக இயங்கிவரும் இப்பாடசாலை, பன்னாலை வித்தகபுரம் கிராம சிறுவர்களின் கல்விக்கான மையப்பகுதி ஆகும். இடம்பெயர்வுகளுக்கு முன்னர் இது தரம் பதினொன்று வரையிலான வகுப்புகளைக் கொண்டு இயங்கி வந்தது.

தற்போது தரம் 8வரை மட்டுமே இங்கு வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது பன்னாலையிலுள்ள நலன்புரி நிலையமொன்றில் வாழும் சிறார்கள் உட்பட 30 மாணவர்கள் தரம் ஒன்று தொடக்கம் எட்டு வரையிலான வகுப்புகளில் கல்வி கற்று வருகின்றனர். எனினும், அதிபர் உட்பட 3 ஆசிரியர்களே இங்கு கடமையில் உள்ளனர்.

(எ-150)

### சாரணர்களுக்கு வதிவிடப்பயிற்சி

வடமராட்சி,ஏப்.27

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் சாரணர் அணித் தலைவர்களுக்கான இருநாள் வதிவிடப்பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சியில் 46 சாரணர் அணித் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

மாவட்ட சாரணர் ஆணையாளர் ஏ.ஜெகநாதனின் மேற்பார்வையில் உதவி மாவட்ட ஆணையாளர், சாரணர் அணித்தலைவர்களுக்கான பயிற்சியை வழங்கினார். (எ-173)

# ஒவ்வொரு தனிமனிதனிலும் உளவியல் தாக்கம்; வன்முறைகள் அதிகரிப்பதற்கு இதுவே காரணம்

## நூல்வெளியீட்டு விழாவில் அருட்தந்தை டேமியன் உரை

யாழ்ப்பாணம்,ஏப்.27

வன்முறைகள் சமூகத்தைப் பெரும நெருக்கடிக்குள் இட்டுச்செல்கின்றன. இந்த வன்முறைகளின் பின்னணியில் ஒவ்வொரு மனிதனும் காரணமாக உள்ளான். ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஓர் உளவியல் தாக்கங்களுடன் வன்முறையில் ஈடுபடுவதைக் காணமுடிகிறது.

- இவ்வாறு தெரிவித்தார் அருட்தந்தை எஸ்.டேமியன்.

யாழ்.சென்சாள்ஸ் மகாவித்தியாலய அதிபர் திருமதி பி. சின்னத்துரையின் 'கல்வியில் முன்னேற உளவியல் சஞ்சிகை நூல்' வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு தலைமையுரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அருட்தந்தை டேமியன் மேலும் தெரிவித்ததாவது:-

எமது சமூகம் இன்று பெரும் பாதிப்புக்களை எதிர் கொண்டுள்ளது. எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் வன்முறைகள் நடப்பதைக்காண முடிகிறது.

வன்முறைகளை இல்லாதொழிக்க நாம் அனைவரும் பாடுபடவேண்டும்.

உளவியல் என்பது மனிதன் ஒருவனின் செயற்பாட்டை, நடத்தைகளை வைத்து அவதானிக்கப்படுகின்றது. இன்று எமது சூழலில் இளைஞர், யுவதிகள் மத்தியில் உளவியல் தாக்கங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இந்த உளவியல் தாக்கங்கள் வன்முறைகளைத் தோற்றுவிக்கக் காரணியாகவுள்ளன.

1995ஆம் ஆண்டு யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட போர் நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்த மக்கள் பின்பு மீளக்குடியமர்ந்த பின்னர் வன்முறைச் சமூகம் ஒன்று யாழ்.குடாநாட்டில் உருவாக்கம் பெற்றது. இந்த வன்முறைச் சமூகத்தின் தோற்றுவிப்புக்களில் தனிமனித உளவியல் தாக்கங்களும் முதன்மை பெற்றிருந்தன. இந்தநிலையில், வன்முறைகளைக் குறைக்க உளவளத்துணையாளர்களின் பணி அவசியமாகியது - என்றார்.

இந்த நிகழ்வில், உரையாற்றிய யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது:-

உளவியல் கல்வி என்பது யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை வளரும் நிலையில் உள்ளது. பட்டப்படிப்பு ஆசிரியர் பயிற்சிகளின்போது இந்தக் கல்வி கற்பிக்கப்படுகின்றது. மேற்குலக நாடுகளில் உளவியல் கல்வி கல்வித்துறையிலே முதன்மை பெறுகிறது. சிறிய வயதில் இருந்தே மாணவர்களுக்கு உளவியல் கல்வி கற்பிக்கப்படுகின்றது.

உளவியல் துறையில் எழுத்தாளர்கள் குறைந்த அளவே காணப்படுகின்றனர். அதிலும் பெண்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே உள்ளனர். இந்தவகையில், எமது கல்வி வலயத்தில் உளவியல் நூலாசிரியர் ஒருவர் நூலொன்றினை வெளியிடுவது என்பது எமது கல்வித்துறைக்குக் கிடைத்த பெரும் கௌரவமாகவே நான் கருதுகிறேன். இவரது முயற்சிகள் தொடரவேண்டும். இவரது நூல்கள் மாணவ சமூகத்திற்கு நன்மையளிக்க வேண்டும் - என்றார்.

விழாவில் உரையாற்றிய வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தெரிவித்ததாவது:-

பெண்களினால் எதையும் செய்யமுடியும் என்ற நிலைப்பாட்டினை இந்த நூலாசிரியர் தனது நூலிலே நிரூபித்துக் காட்டியுள்ளார். உளவியலை தனது எழுத்து மூலம் வெளிப்படுத்தி தான் பெற்ற அனுபவங்களை உளவியல் நூலாக வடித்துள்ளார்.

எமது கல்வித்துறையிலே ஆரம்ப கல்வி மாணவர்களுக்கு உளவியல் தொடர்பான பாடங்கள் அவசியமானது. அதுமட்டுமல்ல ஆரம்ப வகுப்புகளிலே கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு உளவியல் கல்வி முக்கியமானது. அப்போதுதான் மாணவர்களுடனான உறவையும், புரிதலுடனான கற்பித்தலையும் மேற்கொள்ள வசதியாக இருக்கும்.

எங்கள் சமூகத்தில் உளவியல் பிற்போக்கான கலாசாரத்துடன் சிக்குப்பட்டு அதனுடைய பெறுமதியை இழக்கின்ற நிலை உள்ளது. இந்த நிலை மாற்றப்படவேண்டும் - என்றார்.

வெளியீட்டு விழாவில் மற்றும் பலரும் உரையாற்றினர். (8-12)

உலகப்புகழ் பெற்ற தரமான PI, PII, PIII, Lap Top (TOSHIBA) கணனிகளை மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்!

PI-200MHz/1.6GB/32Ram - 12, 900/=
(மொத்தமாகப் பெற்றுக்கொள்பவர்களுக்கு விசேட கழிவுகள் உண்டு)
PII-366MHz/6GB/64Ram - 21, 100/=
(with Multimeedia)
PIII-550MHz/8GB/128Ram - 32, 000/=
(with Modem and Multimeedia)
Lap Top (TOSHIBA) கணனிகள்
Intel Celeron 600 MHz/128 Ram/6GB - 50, 000/=
(with 56kbps Modem)
BRAND NEW COMPUTERS
PIV 1.8GHz/128MB Ram/40GB HDD - 52, 000/=
PIV 2.8GHz/256MB Ram/40GB HDD - 62, 900/=
PIV 2.0GHz/256MB Ram/40GB HDD - 54, 000/=
AMD Ation 2.0GHz/128MB Ram/40GB HDD - 46,000/=
(15"Monitor 52xCD Rom, M/M Speakers Keyboard, Mouse and Pad)

விசேட விலை UPS-Powertree 4,200/=




NORTH EAST TECHNOLOGIES
34, Saddanathar Road, Nallur, Jaffna.
T.P.:021-2223786, 0777-708498 (hotline) (C/34670)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியை
**திருமதி கமலலோஜினி செல்வரட்ணம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திககின்றோம்.

யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை
ஆசிரியர் நல்லுறவு மன்றம்.
(31363)(40-16-14-26)

## கண்ணீர் அஞ்சலி

சங்கத்தானை வைரவசுவாமி கந்தசுவாமி
ஆலய பரிபாலன சபை முன்னாள் தலைவர்
**அமரர் கந்தையா சண்முகதாசன்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை,
சங்கத்தானை வைரவசுவாமி கந்தசுவாமி கோயில்.
(31363)(40-16-14-26)

## கனேடியப் பிரஜைகளை பதிவுசெய்துகொள்ள கோரிக்கை

கொழும்பு,ஏப்.27

கனடாப் பிரஜைகள் எவரும் இலங்கையில் தங்கியிருந்தால் அல்லது சுற்றுலா வந்திருந்தால் தங்களைப் பற்றிய விவரங்களை கொழும்பிலுள்ள கனேடியத் தூதரகத்தில் பதிவுசெய்து கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

(ப)

## சிரங்கு நோய் பற்றிய வீடியோப் படக்காட்சி

வலி. தென்மேற்கு,ஏப்.27

பண்டத்தரிப்பு சாந்தைப் பகுதியில் சிரங்குநோய் பரவிவருவதை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமையன்று முற்பகல் சாந்தை விநாயகர் சனசமூக நிலையத்தில் யாழ். சுகாதாரத் திணைக்களத்தின் நடமாடும் சுகாதாரக் கல்விப்பிரிவினால் சிரங்கு நோய் பற்றிய வீடியோப் படக்காட்சி காண்பிக்கப்பட்டது.

இதேவேளை -

அன்றைய தினம் நண்பகலில் பண்டத்தரிப்பு பற்றிமா ஆலய முன்றிலிலும் சிரங்கு மற்றும் பற்கள் தொடர்பான நோய் பற்றிய வீடியோ திரைப்படக்காட்சிகள் பொதுமக்களுக்குக் காண்பிக்கப்பட்டன.

இதற்கான ஏற்பாடுகளைப் பண்டத்தரிப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பொ.சிவரூபன் ஏற்பாடு செய்திருந்தார். (எ-135)

## கௌரவிப்பு

சாவகச்சேரி,ஏப்.27

சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்க வெள்ளிவிழாவையொட்டி அதன் ஸ்தாபகர் கௌரவிக்கப்பட்டார்.

1979 ஆம் ஆண்டு சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்த அதன் ஸ்தாபகரும், ஓய்வுபெற்ற நகரசபை முன்னாள் செயலாளருமான த.நவரத்தினராசா கடந்த புதன்கிழமை தற்போதைய நகரசபை செயலாளர் மு.க.சரவணபவ உட்படச் சங்க அங்கத்தவர்களால் கௌரவிக்கப்பட்டார்.

(ஓ-31)

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தின் உப அதிபர்
திரு.கு.திரவியநாதன்
அவர்களின் அன்புத் தாயார்
**குண்டுமணி - பூமணி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இமையாணன் அ.த.க.வித்தியாலயம், உடுப்பிட்டி.
அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்.
(C/34672)(38-14-26)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சண்முகதாசன்

(இளைப்பாறிய கணக்காய்வாளர்)

சாவகச்சேரி, பெரிய அரசடி வீதியைச் சேர்ந்த கந்தையா சண்முகதாசன் (இளைப்பாறிய கணக்காய்வாளர்) அவர்கள் நேற்று 26.04.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் வள்ளியம்மை அவர்களின் அன்புக் கணவரும் செல்வராணி, சாரதா, பற்குணம், கிருஷ்ணதாசன், கோகிலா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் அமிர்தலிங்கம், கோமதி, செந்திரு, மகாலிங்கம் ஆகியோரின் அருமை மாமனாரும் நிர்மலன், நிருபா, தாரணி, உதயன், சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரிய அரசடி,
சாவகச்சேரி.
(31368)(42-16-14-26)
தகவல்:
மக்கள், மருமக்கள்.

## தேவராசா பிலிப் டயஸ்



கோப்பாய் மத்தி, சூசையப்பர் கோவிலடியைச் சேர்ந்த தேவராசா பிலிப்டயஸ் அவர்கள் 25.04.2004 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் ஆபேல் தேவராசா மற்றும் காலஞ்சென்ற ஆரோக்கியம் ஆகியோரின் அன்பு மகனும் ஜெகன், அன்புக்கரசி, கலையரசி, ராஜ்மோகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.04.2004) செவ்வாய்க்கிழமை மாலை 2.30 மணிக்கு நல்லடக்கத்துக்காக அவரது இல்லத்திலிருந்து கோப்பாய் மத்தி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புனித சூசையப்பர் ஒழுங்கை,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
(31371)(40-16-14-26)
தகவல்:
ஆபேல் தேவராசா.

# சேவை நலன் பாராட்டு

ஆசிரிய சேவையில் 60அகவையைப் பூர்த்தி செய்து ஓய்வுபெறும் ஆசிரியை
**திருமதி யோகவதி யோகரட்ணம்** அவர்களை
யா/கொக்குவில் இந்துக்கல்லூரிச் சமூகம் பாராட்டி வாழ்த்துகிறது

## அமைதிக்கு இலக்கணமான ஆசிரியர்...

கல்விப் புலத்தில் 27 ஆண்டுகள் ஆசிரியப் பணியாற்றி இன்று ஓய்வுபெறும் திருமதி யோகவதி யோகரட்ணம் அவர்களின் சேவை நலனைப் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

புனிதமான ஆசிரியத் தொழிலில், அதற்குத் தேவையான அனைத்துப் பண்புகளுடனும் தனது பணியை மிகச் சிறப்பாக ஆற்றிய ஆசிரியை அவர்கள் எமது கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆறு ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும், திறந்த பல்கலைக்கழகத்தில் கல்விப்பட்டப்பின் படிப்பினையும் நிறைவுசெய்த அவர் அடக்கம், அமைதி, எல்லோருடனும அன்பாகப் பழகும் இயல்பு என்பவற்றை தனது அணிகலன்களாகக்கொண்டு எல்லோரினதும் அன்பையும் மதிப்பையும் பெற்றுக்கொண்டார். மாணவர்களோடு மிக அன்பாகப் பழகி அவர்களுக்கு நல்ல தாயாக இருந்து கற்பித்தல் செயற்பாட்டை மிகச் சிறப்பாக முன்னெடுத்தார்.

தனது கல்விப் பணியில் சான்றாண்மை மிக்க மாணவர்களை உருவாக்கிய ஆசிரியப் பெருந்தகை திருமதி யோகவதி யோகரட்ணம் அவர்கள் தமது ஓய்வுகாலத்தில் எல்லா நலனும பெற்று இன்புற எல்லாம்வல்ல இறைவனின் திருவருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

**பொ.கமலநாதன்,**
**அதிபர்,**
**யா/கொக்குவில் இந்துக்கல்லூரி**



**ஆசிரிய சேவையில்......**

வாண்மை விருத்தியில்
1970இல் ★கலைமாணி
(பேராதனைப் பல்கலைக்கழகம்)
★பட்டப்பின் கல்வி டிப்ளோமா
1977-03-07 இலிருந்து மன்/எருக்கலம்பிட்டி M.M.V.
1986-05-01 இலிருந்து யாழ்.வேலணை வைத்திலிங்கம் துரைசாமி மகாவித்தியாலயம்
1998-05-25 இலிருந்து யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

## கழகத்தலைவரின் உள்ளத்திலிருந்து....

திருமதி யோகவதி யோகரட்ணம் எமது பாடசாலைக்கு ஆசிரியராக வந்தமை எமது மாணவர்கள் செய்த பெரும் பாக்கியமாகும். தமிழ், சமூகக்கல்வி போன்ற பாடங்களைத் தனக்குரிய சிறப்பான பாணியில் கற்பிக்கும் அழகு தனித்துவமானது. வகுப்பறையில் ஆசிரியராக மட்டுமன்றி சிறந்த ஒரு தாயாகவும் செயற்படுவார். ஒவ்வொரு மாணவனதும் நலனிலே அக்கறைகொண்டு விசாரித்து ஆலோசனை வழங்குவார். அவரிடம் கல்வி கற்ற எந்த மாணவரும் அவரை வாழ்நாளில் மறக்கவேமாட்டார்கள்.

அதுமட்டுமல்லாமல் சகஆசிரியர்களுடனும் அவர் அன்பாகவும், பண்பாகவும் பழகுவார். ஒவ்வொரு ஆசிரியரினதும் நலனில் அக்கறைகொண்டு சுகநலம் விசாரிப்பார். நல்ல தாயாக, நல்லாசிரியராகத் திகழ்ந்தவர் திருமதி யோ.யோகரட்ணம் அவர்கள். வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி வித்தியாலயத்தில் கற்பித்தபோது இதேபோன்று மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் அன்பாக, பண்பாகப் பழகியதுண்டு. சமூகத்தோடு ஒட்டியவராக வாழ்ந்து காட்டியவர்.

அவர் ஓய்வுபெற்றாலும் தொடர்ந்தும் அவரது உதவி இப்பாடசாலைக்குக் கிடைக்கவேண்டுமெனவும் அவரது இளைப்பாறுக்காலம் மகிழ்ச்சிகரமாக அமைய வேண்டுமெனவும் இறைவனை வேண்டுகின்றேன்.

**சி.சிவகுமாரன்,**
**தலைவர், ஆசிரியர் கழகம்,**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

## உப அதிபரின் வாழ்த்துரை

மாதா,பிதா, குரு, தெய்வம் எனப் போற்றப்படுபவர்களுள் குரு முதலிடம் பெறுகின்றார். அறியாமை இருளை அகற்றி அறிவொளியைப் பரப்புபவர்கள் ஆசிரியர்களேயாவர். ஆசிரியர்கள் தமது சேவைக்காலத்தில் பொருளாதார நன்மைகளைக் காட்டிலும் பண்பு ரீதியான நலன்களையே அனுபவிக்கின்றனர். மாணவர்களின் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலுமே அவர்களின் சேவை பூரணத்துவம் அடைகின்றது. அவ்வகையில் திருமதி யோகவதி யோகரட்ணம் அவர்கள் எமது கல்லூரியில் 1998 ஆம் ஆண்டு முதல் இணைந்து சேவையாற்றி ஓய்வு பெறுகின்றார். தனது சேவைக்காலத்தில் எமது மாணவர்களின் கற்றலில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்பட்டவர். எமது கல்லூரியில் 06 ஆண்டுகள் சிறந்த ஆசிரியராகச் சேவையாற்றி இன்றுடன் ஓய்வுபெறும் அவரின் ஓய்வுக்காலத்தில் உடலாலும் உள்ளத்தாலும் மிகுந்த ஆரோக்கியத்துடன் வாழ வாழ்த்துகின்றேன்.

**இ.பாலசுப்பிரமணியம்**
**பிரதி அதிபர்,**
**யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.**

# அமைச்சுச் செயலாளர் நியமனத்தில் சிறுபான்மையோருக்குப் பாரபட்சம்!

கொழும்பு,ஏப்.27

புதிய அரசு தனது அமைச்சுகளுக்கு செயலாளர்கள் நியமனம் செய்துள்ள விதம் குறித்து சிறுபான்மை இன மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுவதாகத் தெரியவந்துள்ளது.

புதிய அரசு நியமித்துள்ள 35 அமைச்சுக்களின் செயலாளர்களில் இரண்டுபேர்தான் தமிழர்கள். அதே சமயம் முஸ்லிம் சமூகத்திலிருந்து ஒருவர்தானும் நியமிக்கப்படவில்லை.

தோட்டத்தொழில்துறை உள்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் டாக்டர் பிராமாஜனும், விவசாய சந்தை அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் மற்றும் வடக்கு தமிழ்ப் பாடசாலைகள், தொழில் பயிற்சி அமைச்சுக்கு கே.மகானந்தன் ஆகிய இருவருமே புதிதாக நியமனம் பெற்றுள்ள தமிழ் செயலாளர்கள்.

இந்த இருவரும் கூட சிறுபான்மைப் பிரச்சினைகள் தொடர்பாக மட்டுமே செயற்படுவார்கள். தேசிய ரீதியில் அல்லவென்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறு உயர்மட்ட பதவிகளுக்கு நியமனங்கள் செய்யப்படும்போது சகல இன சமநிலையைப் பேணுவது அவசியம் என்று குறிப்பிட்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், இந்நியமனங்களில் சகல இனத்தைச் சேர்ந்தவர்களையும் நியமிக்க முயற்சி எடுப்பதானது அந்தச் சமூகங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்படும் ஒரு அடையாளமாகவே கொள்ளப்படும் என்றும் கூறினார். அமைச்சுகளின் செயலாளர்கள்தான் பிரதம நிறைவேற்று அதிகாரிகளாக செயற்படுவார்கள். எனவே, சிறுபான்மை இன மக்கள் மத்தியிலிருந்தும் இந்த நியமனங்களுக்கு ஆள்களை அரசு தெரிவு செய்ய முயற்சி செய்திருக்க வேண்டும் - என்றார் ஹக்கீம்.

இதேவிதமான கருத்தையே கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனும் வெளியிட்டுள்ளார். சிறுபான்மை இன மக்கள் மத்தியிலிருந்து இப்பதவிக்கு நியமனங்கள் செய்ய அரசு முயன்றிருக்க வேண்டும் - என்றார் அவர்.

தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலரும், எம்.பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுகையில், அமைச்சுக்கு செயலாளர்களை நியமனம் செய்த பொழுது இன சமநிலையைப் பேணுவதற்கு ஜனாதிபதி கவனம் எடுத்திருக்கவேண்டும் - என்றார்.

உண்மையில் இந்த அரசில் எங்களுக்கு எதுவித நம்பிக்கையும் இல்லை. இப்படியான ஒரு அரசிடமிருந்து இதற்கு மேல் எவற்றை நாம் எதிர்பார்க்க முடியும் என்றார் கஜேந்திரகுமார்.

எங்கள் நடவடிக்கைகளை நாங்களே பார்த்துக்கொள்ளவேண்டும் என்பதில் நாங்கள் கவனமாக இருக்கின்றோம். 55ஆண்டு காலமாக சிங்கள எஜமானர்களின் கீழே இருந்து ஏமாற்றப்பட்டதுதான் மிச்சம் என்றும் அவர் மேலும் சொன்னார். (ப)

# குடாநாட்டில் துரித அபிவிருத்தித்திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமா?

## பொதுமக்கள் தரப்பில் சந்தேகம்

வலி.மேற்கு,ஏப்.27


யாழ்.மாவட்டத்தில் கடந்த அரசினால் மேற்கொள்ளப்பட்ட துரித அபிவிருத்தித்திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படுமா? என்று பொதுமக்களிடையே சந்தேகம் எழுந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் சேதமடைந்த கட்டடங்களைத் திருத்தி அமைப்பது, வீதிகளை புனரமைப்பது குடிதண்ணீர் விநியோகம் போன்ற துரித அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்வதற்கு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் யாழ் செயலகத்தினால் பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து திட்ட அறிக்கைகள், தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கைகள் என்பன பெறப்பட்டன.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி இழந்ததைத் தொடர்ந்து, அவரினால் மேற்கொள்ளப்பட்ட துரித அபிவிருத்தித் திட்டம் யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுமா? என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது.

தற்போது பதவியேற்றுள்ள புதிய அரசு இந்தத் துரித அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமெனவும் -

யாழ்.குடாநாட்டின் அபிவிருத்தியில் அக்கறை காட்டவேண்டும் எனவும் - பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (8-175)



பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கான அடிக்கல் நடும் வைபவத்தில் கொழும்பு ஸ்ரீஇராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி ஆத்மகணானந்தர் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: வடமராட்சிச் செய்தியாளர்.)*

# சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவை நாட முயலவேண்டும்

## அமைச்சர் ஜெயராஜ் அரசுக்கு யோசனை

கொழும்பு,ஏப்.27

ஹெல உறுமய பிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் தயவை நாடி நிற்பதை விடுத்து சிறுபான்மை இன மக்களின் ஆதரவையே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாட முயலவேண்டும் என்று புதிய அரசின் வர்த்தக அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே கருத்து வெளியிட்டிருக்கிறார்.

ஹெல உறுமய பிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர் தெரிவின்போது ஐ.தே.முன்னணி வேட்பாளரை ஆதரித்து வாக்களித்திருப்பதையடுத்தே அமைச்சரின் இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவைக் கைவிட்டு சிறுபான்மைத் தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு அரசில் இடம் கொடுக்கப்படுமானால் அவர்களுக்காகத் தமது பதவியையே தியாகம் செய்யத் தயாராக இருப்பதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

ஹெல உறுமய பிக்குகளின் நடவடிக்கை ஏமாற்றமளிப்பதாக இருந்தது என்று கூறியுள்ள அமைச்சர் மேலும் கூறியதாவது:-

ஐ.ம.சு முன்னணிக்கு வாக்களித்த இரு பிக்குகளும் ஆரம்பத்திலிருந்தே எம்மை ஆதரித்து வந்தவர்கள். எமது பிரசார மேடைகளிலும் ஒன்றாகத் தோன்றியிருக்கிறார்கள். அப்படியானவர்கள் சபையில் எம்மை ஆதரித்ததில் என்ன தவறு இருக்கிறது என்று கேட்டார் அவர்.

இந்த இரண்டு பிக்குகளும் எம்மை ஆதரித்ததன் காரணமாக இறுதியில் எமக்கே நஷ்டமாக முடிந்தது என்று கூறிய பெர்னாண்டோபுள்ளே, மேலும் கூறியதாவது:-

நாடாளுமன்றத்தில் பிக்குமார் நடந்துகொண்ட விதம் அவர்களின் தர்மராஜ்ய கொள்கைக்கே முரணாக இருக்கின்றது. ஏனென்றால், அரசுக்கு ஆதரவளிப்பதென ஒருபகுதி பிக்குகள் முடிவெடுத்ததால், இன்னொரு பகுதிப் பிக்குகள் அவர்கள் மீது பழி தீர்த்துக் கொண்டுள்ளனர் - இவ்வாறு அமைச்சர் கூறினார். (ப)

# மீனவரின் வாழ்க்கைத்தரம் உயர அமெரிக்க நிறுவனம் உதவி

காரைதீவு,ஏப்.27

அமெரிக்க நிறுவனமான யூ.எஸ்.எய்ட் உதவி வழங்கும் ஸ்தாபனம் அம்பாறை மாவட்ட மீனவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு உதவியளித்து வருகின்றது.

முதற்கட்டமாக காரைதீவு, கல்முனை, தம்பட்டை, தாண்டியடி ஆகிய 4 கிராமங்களிலுள்ள ஆயிரத்து 500 மீனவக் குடும்பங்கள் நன்மையடையும் வண்ணம் மீன்பிடி உபகரணங்களை வழங்கியுள்ளது.

யூ.எஸ்.எய்ட் நிறுவனம் 22 படகுகளையும், அதற்கான 22இயந்திரங்களையும், 4 வள்ளங்களையும், 40 வலைகளையும் மேற்படி மீனவருக்கு வழங்கி வருகின்றது.

இதற்கென யூ.எஸ்.எய்ட் நிறுவனம் ஒரு கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தது. அம்பாறையில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் யூ.எஸ்.எய்ட் நிறுவனம் விவசாயிகளுககும் உதவியளிக்கத் திட்டமிட்டுள்ளது. யூ.எஸ்.எய்ட் நிறுவன இணைப்பு அலுவலர் ரி.நேசய்யா இவ்வேலைத் திட்டத்தை மேற்கொண்டுவருகிறார்.(ஐ-க)

# தமிழ்ச் சைவ இளைஞர் சமுதாயத்தை நல்வழிப்படுத்த விரைந்து நடவடிக்கை தேவை!

## சதாவதானி குருபூசை தின நிகழ்வில் கலாநிதி சிவலிங்கராசா

வடமராட்சி,ஏப்.17

தமிழும் சைவமும் இன்று மிக இக்கட்டான சூழ்நிலையில் சிக்கித் தவிக்கின்றன. இதனால், தமிழ்ச் சைவ இளைஞர் சமுதாயம் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றது. தமிழையும, சைவத்தையும் வளர்க்கவும், அதன்மூலம் இளைஞர் சமுதாயம் பெரும் நன்மைகளைப் பெறவும் உரிய மாற்று நடவடிக்கைகளை தமிழ்க் கல்வியியலாளர்கள் மேற்கொள்ள வேண்டும்.

மாற்று நடவடிக்கைகள் மூலம் தமிழையும், சைவத்தையும் மேம்பாடடையச்செய்ய முடிவதுடன் எதிர்காலச் சந்ததியினரையும் மகிழ்ச்சிகரமான சமுதாயமாகக் கொண்டு வரமுடியும்.

- இவ்வாறு யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறையைச் சேர்ந்த கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா கூறினார்.

மேலைப்புலோலி சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையின் 97ஆவது ஆண்டு நினைவு விழா சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய அரங்கில் நிலையத் தலைவர் மு.தாமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் தமதுரையில் மேலும் கூறியதாவது:-

தமிழுக்கும் சைவத்துக்கும் அரும பணியாற்றிய மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை ஈழத் தமிழ் அறிஞர்களில் முதன்மையானவர். சதாவதானி ஈழத்தில் மாத்திரமன்றி தமிழ் நாட்டிலும் தமிழுக்கும் சைவத்துக்கும் அரும்பணியாற்றியவர். இவர் தமிழ் நாட்டில் இருந்தபோது தமிழ் நாட்டுக்கும் ஈழத்திற்கும் புலமைசார்ந்த தொடர்புகள் இருந்தன. இத்தொடர்பினால் தமிழ் நாட்டு மக்களும், ஈழமக்களும் தமிழ், சைவம் ஆகிய துறைகளில் பல நன்மைகளைப் பெற்றுள்ளனர். பல அரிய நூல்களை ஆக்கித்தந்த அவர், தமிழ் அகராதி என்ற அரியதொரு பொக்கிஷத்தை தமிழ் மக்களுக்குத் தந்துள்ளார்.

சதாவதானி கதிரைவேற்பிள்ளை பற்றி பலர் ஆராய்ந்துள்ளபோதிலும், இதுவரை முழுமையாக ஆராயப்படவில்லை. சதாவதானி பற்றி முழுமையாக ஆராயப்பட்டு அதன் பெறுபேறுகள் நூலுருவில் வெளியிடப்பட வேண்டும். இவர் பற்றிய ஆய்வில் ஒருவர் மட்டும் ஈடுபடமுடியாது. பல்வேறு ஆய்வாளர்கள் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். இன்றைய சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளீதரனின் சுழல் பந்து வீச்சைப் போல் அன்றைய காலகட்டங்களில் சதாவதானி தமிழையும், சைவத்தையும் வளர்க்கச் செயற்பட்டிருந்தார்.

36ஆண்டுகள் மட்டும் இவர் வாழ்ந்தாலும் இவர் அக்காலங்களில் அரும்பெரும் சாதனைகளை தமிழுக்கும் சைவத்துக்குமாக நிலைநாட்டியுள்ளார். இவர் வடமராட்சி கல்விப் பாரம்பரியத்தின் ஊற்றுக்கண்ணாகத் திகழ்ந்தவர். இவர் பற்றி இன்றைய சமூகத்தில் எழுச்சியை ஏற்படுத்துவதற்கு மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் ஆண்டுதோறும் நினைவு தின விழாவையும், மாணவர்களிடையே போட்டிகளையும் நடத்தி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவது பாராட்டப்பட வேண்டும் - என்றார்.

இவ்விழாவில் மதுரைப்பண்டிதர் எஸ்.சச்சிதானந்தத்துக்கு கலாநிதி எஸ்.சிவலிங்கராசா பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் ஆ.சிவநாதன் "சதாவதானியின் வாழ்வும் பணியும்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறைக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம், பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் திருமதி சரஸ்வதி சிவனருட்சுந்தரம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

சதாவதானியின் குருபூசை தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே 'உதயன்' அனுசரணையுடன் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கு திருமதி சரஸ்வதி சிவலிங்கராசா பரிசில்களை வழங்கினார். பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் பரா.ரதீஸை நடுவராகக் கொணடு 'குடும்ப சுமையை பெரிதும் சுமக்கக் கூடியவர்கள் ஆண்களா, பெண்களா' எனும் தலைப்பில் வழக்காடு மண்டபமும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (எ-173)

# ஜனாதிபதி நோர்வேக்கு விடுத்த அழைப்பு; எள்ளி நகையாடுகிறார் டாக்டர் ஜயலத்

கொழும்பு,ஏப்.27

அமைதிப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு நோர்வேயின் ஆதரவை நாடியிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் செயற்பாட்டை முன்னாள் அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன எள்ளி நகையாடியுள்ளார்.

ஜே.வி.பியின் கடும் எதிர்ப்பாளரான ஜயலத் ஜெயவர்த்தன நோர்வே அரசை மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க அழைத்திருப்பதை ஜே.வி.பியினரால் எதிர்க்கமுடியுமா என்றும் சவால் விட்டிருக்கின்றார்.

அமைதி முயற்சிகளை ஜே.வி.பியினர் கடுமையாக எதிர்த்து வந்துள்ளனர். அதுவும் நோர்வே இதில் பங்களிப்புச் செய்வதை அவர்கள் விரும்பவில்லை. இந்த நிலையில் ஜே.வி.பியினர் இனிமேலாவது வாயை மூடிக் கொண்டிருப்பார்களா என்று டாக்டர் ஜயலத் கேட்டார்.

நோர்வே மீண்டும் அமைதிப்பேச்சில் கலந்து கொள்வதை ஜே.வி.பி. ஏற்றுக்கொள்கிறதா? அல்லது அமைதி முயற்சியைக் குழப்புவதற்காக அவ்வாறு முன்னர் செய்ததா? என்று கேட்டார் அவர்.

நாங்கள் பதவியில் இருந்தபோது அமைதி நடவடிக்கைகளைக் குழப்புவதற்கு என்னென்ன முடியுமோ அதையெல்லாம் ஜனாதிபதி சந்திரிகா செய்தார். எது நடந்தாலும் நோர்வேயும் ஸ்கன்டிநேவிய கண்காணிப்பாளர்களும் குறை கூறப்பட்டனர். இப்பொழுது அவர்களிடம் ஜனாதிபதி பகிரங்கமாக மன்னிப்புக் கோரவேண்டும் என்று டாக்டர் ஜயலத் வற்புறுத்தினார். (ப)

## இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஏப்.27

இயங்கிக்கொண்டிருந்த மரம் அரியும் இயந்திரத்தினுள் கை அகப்பட்டதில் ஒருவர் வலது கையின் இரு விரல்கள் நெரியுண்டு படுகாயமடைந்தார்.

கடந்த சனியன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் இயந்திரத்தில் வேலை செய்து கொண்டிருந்தவரான, யாழ்ப்பாணம் கடாவிழுந்தான் ஒழுங்கையைச் சேர்ந்த ஜெயபாலன் வினோதீபன் (வயது20) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-15)

# பிரான்பற்றில் ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவ ஏற்பாடுகள்

வலி.தென்மேற்கு,ஏப்.27

பிரான்பற்று கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று விரைவில் நிறுவப்படவுள்ளது.

பிரான்பற்று மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் இந்த நிலையத்தை நிறுவுவதற்காக இரண்டு பரப்புக் காணியை யாழ்.சுகாதார திணைக்களத்திற்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தது.

இக்காணியின் உறுதி யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளருக்கு உத்தியோகபூர்வமாக எழுதி ஒப்படைக்கப்பட்டதை அடுத்து ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் பணி இன்னும் இரு வாரகாலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (எ[illegible])

## ஞானச்சுடர் வெளியீட்டுவிழா

வடமராட்சி.ஏப்.27

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆத்மீக சஞ்சிகையின் சித்திரை மாத இதழ் வெளியீட்டு விழா எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 ம[illegible] சந்நிதியான் ஆச்சிரமத்தி[illegible] வைத் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறும்.

இச்சஞ்சிகையின் வெளியீட்டுரையை லயன் த.கிருஷ்ணராஜாவும் மதிப்புரை[illegible] செஞ்சொற் செல்வ[illegible] இரா.[illegible]ம் நிகழ்த்துவர்கள். (எ-17[illegible])

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

தரமான நம்பர் - 1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் 28-04-2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி T.P.: No. 2867, 3529, P.ரவி, தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி.(31277)

நந்தாவில் அம்மன் கோயில் முன்பாக 3500 சதுர அடி கொண்ட வீடு, 4½ பரப்பு காணி, தனிமை யான கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கி.செந்தில், நந்தாவில் அம்மன் கோயிலடி முன் பாக, கொக்குவில். (31289)

ROBIN 3300 டீசல் HONDA 600 Sharp போட்டோப் பிரதி லெமி னேற்றிங் மெசின், 400 படக்கொப்பி கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: செ.நாகேந்திரன் 060 2213015.(31353)

## மணமகன் தேவை

1983ஆம் ஆண்டு பிறந்த, சதய நட்சத்திரமுடைய, படித்த, அழகிய மணமகளுக்கு அரச தொழில் பார்க் கும், நற்பண்புமிக்க, சைவ போசன மான மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல.2240, C/o: உதயன், யாழ்ப்பாணம். (31348)

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 27வயதுள்ள 5'7''உயர முள்ள அழகிய மணமகளுக்குப் பெற்றோர் டாக்டர் அல்லது Professio -nally Qualifical மணமகனை எதிர்பார்க்கின்றனர். பெண், பெற்றோ ருடன் கனடாவிலிருந்து எஞ்சினிய ராகப் பணிபுரிவதால் மணமகன் கன டாவில் வசித்தல் வேண்டும். தொடர்பு: விளம்பர இல. 2239, C/o உதயன், யாழ்ப்பாணம். (31345)

## தவறிவிட்டது

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த சி.பிரகாஸ் என்பவருடைய தேசிய அ. அட்டை (இல532235898V), வி.அ.அட்டை, இலங்கை மின்சார சபை அ. அட்டை, மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம், இன்சூரன்ஸ், ரக்ஸ் அடங் கிய சிறிய பை தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரி யில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (31346)

சரவணமுத்து தாரகர் என்பவரு டைய தே.அ.அட்டை (இல:816192080V), சாரதி அனுமதிப் பத்திரம், வாகன இன்சூரன்ஸ் பத்திரங்கள் என்பன வல்லிபுரக் கோயிலுக்கும் மந்திகைக கும் இடையில் தவறிவிட்டன. கண் டெடுத்தவர்கள் குறுத்தடிவளவு, குப்பி ளான் தெற்கு, ஏழாலை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன் மானம் வழங்கப்படும். (31343)

## மணமகள் தேவை

யாழ்றோமன் கத்தோலிக்க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 33 வயதுடைய, 5'11"உயரமுள்ள, A/L படித்த, கனடா வில் எஞ்சினியராகப் பணிபுரியும் அழ கான மணமகனுக்கு M.B.B.S. படித்த அல்லது M.B.B.S. இறுதியாண்டு படிக கும் பொருத்தமான, அழகிய மணமக ளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விளம்பர இல.2238, C/o உதயன், யாழ்ப்பாணம். (31344)

கனடாவில் வதிவுரிமைபெற்ற, இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1968 இல் பிறந்த, ஆயிலியம் 5'2" உயரமு டைய, 8 இல் செவ்வாய் உள்ள மணமக னுக்கு அழகிய, மெல்லிய, சிவந்த மண மகள் தேவை. ஜாதகம், புகைப்படத் துடன் தொடர்பு:இல.535, பருத்தித்துறை வீதி, நல்லூர். T.P:021 222 6580,3480 (மாலை5முதல்9மணிவரை). (31328)

## கோவா விலையில் பெரும் வீழ்ச்சி

அரியாலை,ஏப்.27

யாழ்.மாவட்டத்தில் பயிரிடப்பட்ட கோவா, விலை வீழ்ந்துள்ளது. சந்தைப் படுத்த முடியாத அளவுக்கு அதன் விலை பெரிதும் வீழ்ச்சியடைந்துளள தாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பெருமளவான கோவா தற்போது கால்நடைகளின் உண வுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன், தோட்டங்களில் எஞ்சியிருக் கும் கோவாக்களை அழித்து மறு பயிர்ச் செய்கையை மேற்கொள்வதி லும் விவசாயிகள் ஆர்வம் காட்டி வரு கின்றனர்.

இந்த முறை மேற்கொள்ளப்பட்ட கோவாச் செய்கையால் விவசாயிகள் பெரிதும் நஷ்டமடைந்துள்ளனர் எனத தெரிவிக்கப்படுகின்றது. (8-17)

## யாராட்டி வாழ்த்துகின்றோம்



இணுவில் கிழக்கைச் சேர்ந்த பிரபல வர்த்தகர்

### திரு. தம்பையா கந்தசுவாமி

(அகில இலங்கை சமாதான நீதிவான், உரிமையாளர், பெஷன் ஹவுஸ், யாழ்ப்பாணம்)

அவர்கள் 21.04.2004அன்று யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி எஸ்.நந்தசேகரன் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணஞ் செய்துகொண்டமையையிட்டு அவரை மானிப்பாய் மருதடி விநாயகர் திருவருளால் சகல வளமுன் வாழ வாழ்த்துகின்றோம்.

காயத்திரி பான்சி ஹவுஸ்,
யாழ்வீதி, மானிப்பாய்.

(31356)(14-18-26)

My No: GC/B/2003,
General Hospital,
24/04/2004

## DEPARTMENTAL HEALTH SERVICES - T.H. JAFFNA CALLING FOR TENDERS

The Chairman, Divisional Tender Board, T.H. Jaffna will receive sealed Tenders for the undermentioned repair work up to 10.30 a.m. on 14.05.2004.

1) Construction of Internal Access Road from Medical ward to Point Pedro Road, T.H.Jaffna.

2) Tenders should be submitted on the forms obtainable from Director, T.H. Jaffna on payment of Rs. 500/- each up to 07.05.2004. Tenders will be opened immediately after the closing date on 14.05.2004 at 10.30 a.m.

3) Tenderers or Authorised Representatives are requested to be present at the opening of Tenders. Tender forms will be issued to Contractors having valid registration in Grade M 8 and above in the field of Road Construction under the ICTAD and valid membership of NCCASL.

4) Sealed Tenders may be sent by registered post or hand delivery and deposited in the Tender Box at the above address to receive before the Closing date.

5) Tender documents may be inspected at Director's Office on free of charge. For further details, please contact A.O., G.H. Jaffna.

**Dr.S.Sathurmugam,**
Chairman,
Divisional Tender Board,
T.H. Jaffna.

(34-26-14-18) (C/34665)

# கேள்வி அறிவித்தல்

### இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் எல்லை மதில்களை நிர்மாணித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதியின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் எல்லை மதில்களை நிர்மாணிப்பதற்கு அரக்கிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கட்டடநிர்மாண வேலைகளுக்கான இக்ராட் (ICTAD) நிறுவனத்தல் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர் கேள்விப்பத்திரங்களைப் பெறத் தகுத உடையவராவர்.

கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர்/நிர்வாகம் அவர்களிடமிருந்து 2004.05.14ஆம் திகதி வரை ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தகத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீட்டுகளுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம.

*1. மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரூபா 6000/=*
*2. மீளளிக்கப்படாத வைப்புத்தொகை ரூபா 500/=*

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 2004.05.28ஆம் திகதி பிற்பகல் 2.00மணிக்கு முன்னதாக *தலைவர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்* அவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

தேவைப்படின் கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர்/நிர்வாகம் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றிப் பரிசீலிக்க முடியும்.

**பதிவாளர்,**
**யாழ் பல்கலைக்கழகம்,**
22.04.2004. (சி-34664)(26-14-18)

தபால்பெட்டி இலக்கம் 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்தம்பி தர்மலிங்கம்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் நூறம்போக், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி தர்மலிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (25.04.2004) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் செல்லத்தம்பி - கதிராசி ஆகியோரின் அன்பு மகனும் இராசரத்தினம் - மகேஸ்வரி ஆகியோரின் அருமை மருமகனும் சௌந்தலாதேவி அவர்களின் அன்புக் கணவரும் சிறிதரன் (வேணுகா தொலைத்தொடர்பகம்) அவர்களின் அன்பு மைத்துனரும் தீபாவின் அன்பு அண்ணாவும் வேணுகா, கோபிகா ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியிலுள்ள (நூறம்போர்க்) அவரது இல்லத்தில் எதிர்வரும் 05-05-2004 புதன்கிழமை நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றேன்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.சிறிதரன் (மச்சான்),
**வேணுகா தொலைத்தொடர்பகம்,**
**(நாச்சிமார் கோயிலடி).**
**தொ.பே.இல.: 2541**

*ஜேர்மனி தொ.பே.இல.: 0049 911269903.*
*இல.79, பத்திரகாளி கோயிலடி,*
*வண்ணார்பண்ணை.*

(சி-34662) (19-14-18-26)

## இளையதம்பி சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய நில அளவை மேற்பார்வையாளர்)



முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சிவசுப்பிரமணியம் அவர்கள் 24.04.2004 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சின்னதங்கத்தின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஞானக்குட்டி - காசிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் யசோதா (சுவிஸ்), கிரிஜா (ஆசிரியை, யா/கோண்டாவில் இந்துமகா வித்தியாலயம்), புவிதா (சுவிஸ்), மாலதி, காலஞ்சென்ற ரோகினி (பபி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விஜயரத்தினம் (சுவிஸ்), தயாபரன், பிரபாகரன் (சுவிஸ்), மகாதேவா ஆகியோரின் அன்பு மாமனாரும் வித்தகன், வியாபகன், மதீபன், பிரசாத், லக்ஷ்மன், கீர்த்திகன், சுவேதிகா, மதூசன், மாதவன், பிரியந்தன், கீதப்பிரியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28-04-2004) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமாயனத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.தயாபரன், க.மகாதேவா
*(மருமக்கள்)*

*புகையிரதநிலைய வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*

(31352) (26-14-18)

## திருமதி கமலலோசனி செல்வரத்தினம்

(முன்னாள் ஆசிரியை, மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, மானிப்பாய் இந்துக்கல்லூரி)



அச்சுவேலி, வளலாயைப் பிறப்பிடமாகவும், பக்கஸ ஒழுங்கை, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலலோசனி செல்வரத்தினம் அவர்கள் 24.04.2004சனிக்கிழமை அதிகாலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் இராசையா - தங்கம்மா அவர்களின் அன்பு மகளும் செல்வரத்தினம் (முன்னாள் ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, விக்ரோறியாக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் அபிராமியின் (உடுவில் மகளிர் கல்லூரி-A/L 2003) அன்புத் தாயாரும் தர்மரத்தினம் (விஸ்வமடு), அமரர் ஜெயசீவரத்தினம் (லண்டன்), சந்திரவதனா (லண்டன்), ரஞ்சிதமலர் (லண்டன்), சிறிஸ்கந்தராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசலஷ்மி, தங்கரத்தினதேவி (லண்டன்), சிவசுப்பிரமணியம், செல்வநாயகம் (லண்டன்), செல்வி வேணி (லண்டன்), நாகரத்தினம் (ஆஸ்திரேலியா), கனகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2004) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.செல்வரத்தினம் *(கணவர்),*
செ.அபிராமி *(மகள்).*

*பக்கஸ் ஒழுங்கை,*
*மானிப்பாய்.* (31359)(42-18-14-26)

## இரகுப்பிள்ளை வாமதேவன்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்)

நயினாதீவை பிறப்பிடமாகவும் இல.125, அரசடி வீதியை வசிப்பிடமாகவும்



கொண்ட இரகுப்பிள்ளை - வாமதேவன் அவர்கள் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் - நீர்ப்பாசனத திணைக்களம்) 25.04.2004 ஞாயிற்றுக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரகுப்பிள்ளை நாகம்மா ஆகியோரின் அன்பு மகனும் கரம்பனைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பித்துரை - மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் பேரின்பமணி (இன்பம்) அவர்களின் அன்புக் கணவரும் மகேந்திரகுமார் (குமார்) அவர்களின் அன்புத் தந்தையும் வாமினி அவர்களின் அன்பு மாமனாரும் Dr.காங்கேசு (U.K), பரராஜசிங்கம் (Advisor, Cottage and Textile Industry, Colombo), தியாகராஜா (Marketting Manager, Mineral Sands co-oporation), சுந்தரேஸ்வரி (வீணை ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பத்மநாயகி, சிவமணி, தியாகசொரூபினி, ஜெயக்குமாரன், பத்மநாதன் (Canada), பாலச்சந்திரன் (U.S.A), பாலகிருஷ்ணன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ராதா, ரூபா (Germany), சாந்தி (Canada) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மங்கை (Canada), சரஸ்வதி (U.S.A), ஜெயசோதி, ஜெகநாதன், ஒகஸ்ரின் (Germany), பவகரன் (Canada) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 125, அரசடி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (27.04.2004) செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பையன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல:
திருமதி வா.பேரின்பமணி (இன்பம்),
*மனைவி.*

*125, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (31354,(40-18-14-26)

# 'பாஸ்' நடைமுறையைத் தளர்த்த மனித உரிமைக் குழு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்ப்பாணம் தீவகப் பகுதியில கடற்படையினரால் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் 'பாஸ்' நடைமுறையைத் தளர்த்துவது தொடர்பாக ஆராய்வதற்குப் புங்குடுதீவு கடற்படைப் பொறுப்பதிகாரியை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ் அலுவலக அதிகாரி அடுத்த வாரம் அழைத்துள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் அண்மையில் புங்குடுதீவுப் பிரதேசத்தில் மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்குகளை நடத்தினர்.

தீவுப்பகுதியில் 'பாஸ்' நடைமுறை கடற்படையினரால் நடைமுறைப் படுத்தப்படுவதாகவும் -

இதனால், பொதுமக்கள் பல நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடுவதாகவும் -

இது அவர்களது மனித உரிமைகளை மீறும் செயல் என்றும் -

மனித உரிமை ஆணைக் குழு அதிகாரிகளிடம் இக்கருத்தரங்கில் சுட்டிக்காட்டப்பட்டன.

இதனையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி ருவான் சந்திர சேகர கடந்தவாரம் புங்குடுதீவுக் கடற்படை அதிகாரிக்கு இதுதொடர்பாகக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

மக்களின் இயல்பு வாழ்க்கையை கருத்திற் கொண்டு தீவுப் பகுதியில் 'பாஸ்' நடைமுறையைத் தளர்த்த வேண்டும் என்றும் -

இதுவிடயமாக ஆராய்வதற்கு அடுத்தவாரம் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்துக்கு வருகை தரும்படியும் அக்கடிதத்தில் கடற்படை அதிகாரிக்கு, மனித உரிமைகள் அலுவலக அதிகாரி அழைப்பு விடுத்துள்ளார். (ஒ-7)

# கண்ணிவெடி அகற்றுவது தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.27

"கண்ணிவெடி அகற்றுதலும் சமாதானமும்" என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று இன்று முற்பகல் 10 மணிக்கு நல்லூரில் உள்ள வர்த்தக மன்ற மண்டபத்தில் இடம் பெறவிருக்கின்றது.

'கண்ணி அகற்றும் நடவடிக்கைகள்' என்ற அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தக் கருத்தரங்கில் சூடானைச் சேர்ந்த முகமட் பவுஸ், லண்டனைச் சேர்ந்த நோசிக்கோ அம்மையார், நோர்வேயைச் சேர்ந்த கிறிஸ்றி யாங்கோ அம்மையார் ஆகியோர் உரையாற்றுவர்.

நாளையும் இக்கருத்தரங்கு இடம் பெறும். (ஒ-3)


## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ்.மாவட்ட சமுதாய முன்னேற்ற நிலையத்தினரால் நலிவுற்றோர் நலன் வாழ்வுத் திட்டத்திற்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்.

1 ஆம் பரிசு - 18784
2 ஆம் பரிசு - 14270
3 ஆம் பரிசு - 26015

10 ஆறுதல் பரிசுகள் : 23039, 4909, 26003, 5940, 19594, 3617, 7439, 687, 18283, 6411

பரிசிற்குரியவர்கள் 'சமுதாய முன்னேற்ற நிலையம் ஆராய்ச்சியார் வளவு, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்' என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

(31380)(40-12-17) - நிர்வாகம்.


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 10 - 10 - 1980



ஆண்டவன் அடியில் 27 - 04 - 2001

கப்டன சாந்தீபன்

கா.திருநீலகண்டன் பாலசபேசன்

பாசத்தின் இருப்பிடமே
அழகின் திருவுருவே வீரத்தின் பிறப்பிடமே
குடும்பத்திற்காக தோள் கொடுப்பாய்
என்று இங்கு நாமிருக்க
நாடுகாக்கப் புறப்பட்ட நற்றமிழனே
தாய்நாட்டிற்காக உனது இன்னுயிரை ஈந்த
எம் அன்புச் செல்வமே! பாலசபேசனே!!
ஆண்டுகள் மூன்று ஆனாலும்
ஆறாதையா எங்கள் இதயம்!
உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிராத்திக்கின்றோம்.

14,விதானையார் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

என்றும் உன் நினைவுடன்
குடும்பத்தினர்.

(31375)(43-12-17)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 - 03 - 1921



மறைவு 29 - 04 - 2001

அமரர் நாகராஜா ஸ்ரீதரன்

அன்பால் அள்ளி அணைத்து
அறிவால் உயர வைத்து
பண்புடன் வாழவைத்த எம் உத்தமரே!
ஊர் போற்றும் உயர்ந்தவரே!
எம்மைத் தவிக்கவிட்டுச் சென்று
மூன்றாண்டுகள் ஆகுதப்பா!
உங்கள் உடல் மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் நெஞ்சில் நிலைத்திருக்கும்!

புலவனார் வீதி,
கல்வியங்காடு.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(31377)(12-17)


## தவறிவிட்டது

வேலணை மேற்கு, வேலணையைச் சேர்ந்த கோ.மஞ்சுளா என்பவருடைய தே.அடையாள அட்டை (இல.765191734V), உத்தியோக அடையாள அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் நேற்று திங்கட்கிழமை யாழ். பஸ்நிலையப்பகுதியில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

T.P: 021-222-6188 (31382)(37)

## Dip. in Hardware

Period- 72 Hours/ 9 Days
Time 09.30 - 16.30 (Full time)
Batch III

28/04/2004லிருந்து 10/05/2004

மிகக் குறுகியகால, மிகப் பயன்மிக்க, யாழ் நகரில் முதன்முதலாக அறிமுகப் படுத்தப்படும் இப் பாடநெறியில் இணைந்து பயன்பெறுவதற்காக உடன் பதிவு செய்து கொள்ளுங்கள்

பதிவுகளிற்கு



STP

73, Palaly Road, Kantharmadam,
T.P:021-222-2674

கொம்பியூட்டர்
பொலிமர்
இறபர் முத்திரை

இலவசம்

ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
மேலதிக விவரங்களுக்கு:

யசோ,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(30331)(18)

## லக்சுமி இணுவில்

சிம்பு, த்ரிஷா நடித்த அலை



மே 6 முதல் இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு



சூர்யா (8 வேடங்கள்), ஜோதிகா மிகப் பிரமாண்டமான தயாரிப்பில்
பேரழகன்
தினசரி 4 காட்சிகள் (ரீல்ஸ்)
(31383)(12)

## நாகம்ஸ் சுன்னாகம்

இன்று முதல் ரஜனி, மீனா நடித்த முத்து
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 9.30 (பு.நே.)
மிகவிரைவில் அருள்
(C 34180)(12)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், சூர்யா, லைலா நடித்த பிதாமகன்



காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி சனி ஞாயிறு இரவு 8.45 இரவு (பு.நே.)
DO NOT DISTURB
(C34100)(12)

## ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
விஜய், த்ரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த



கில்லி
10.30.,2.30, 6.30, 9.30 (பு.நே.)
(ரீல்ஸ்)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்
(C/34517)(22)

## CHEMISTRY TEST 2004 A/L

முழுமையான முன்மாதிரி பயிற்சிப் பரீட்சை

DATE: 28-04-2004 WED.

TIME: 8.00 - 10.00 PART I
10.30 - 1.30 PART II

PLACES: NEW SCIENCE HALL , JAFFNA
BEACON STUDY CENTRE, VATHIRY

EXAMINER: K.SIVATHIRAN B.Sc.(HONS)

குறிப்பு: எல்லா மாணவர்களும் பங்குபற்றலாம்.
1.30 மணிக்கு MARKING SCHEME வழங்கப்படும்.

EXAM Fee 50/= (INCLUDING SCHEME)

(31384)(43-12-17)

## FREEDOM L.M.L

மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர்

மேற்குறிப்பிட்ட நிறுவன பொறியியலாளர்கள் இந்தியாவிலிருந்து 28.04.2004 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு வரவுள்ளார்கள்.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இவற்றின் பெறுபேறுகளை அறிந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்,
50, 52, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(31379)(37-12-17)

## இலங்கை வங்கி அறிவித்தல்

★ 30.04.2004 - வெள்ளிக்கிழமை - அரைநாள் விடுமுறை வங்கி அலுவல்களுக்காக காலை 9.00 -10.00 மணி வரை திறந்திருக்கும்.
★ 07.05.2004 - வெள்ளிக்கிழமை - விசேட விடுமுறை தினம்.

மேற்குறிப்பிட்ட அறிவித்தல்களை எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

உதவிப்பொது முகாமையாளர் - வடபிராந்தியம்,
இலங்கை வங்கி,
உதவிப்பொது முகாமையாளர் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
(சி-34676)(36-12-17)


## கண்ணீர் அஞ்சலி

திருமதி கமலலோஜனி செல்வரத்தினம்
(இளைப்பாறிய ஆசிரியை. மானிப்பாய் இந்துக் கல்லூரி)

எமது கல்லூரியில் சேவையாற்றி மாணவ, ஆசிரிய உள்ளங்களில் நீங்காததோர் இடத்தைப் பெற்றுக்கொண்ட திருமதி கமலலோஜனி செல்வரத்தினம் அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு துயருறுகின்ற கல்லூரிச் சமூகம் அவரது கணவர், மகள் , உற்றார், உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா இறையடி சேரப் பிரார்த்திக்கின்றது.

அதிபர், ஆசிரியர்கள்,
அலுவலர்கள், மாணவர்கள்,
மானிப்பாய் இந்துக் கல்லூரி.

(31378)(36-12-17)

## மரண அறிவித்தல்

வேலுப்பிள்ளை நடராஜா
(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்)

நெடுங்குளம் வீதி, அரியாலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நடராஜா அவர்கள் நேற்று (26.04.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி வேலுப்பிள்ளை - திருமதி இலட்சுமி அவர்களது அன்பு மகனும் திருமதி அன்னலட்சுமி அவர்களது பாசமிகு கணவரும் செல்லமகள் (அமெரிக்கா), குமுதா (திருகோணமலை), கலைமகள் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானசக்தி (அமெரிக்கா), விவேகானந்தன் (திருகோணமலை), விக்கேஸ்வரன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுஜன், துர்க்கா (அமெரிக்கா), அம்பிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.04.2004) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது சுண்டுக்குளி இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் துண்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(31374)(12-17)

# குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் சட்டப்படி வேலைப் போராட்டம்

## அதனால் விமான நிலையப் பணி பாதிப்பு

கொழும்பு,ஏப்.27

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பணியாற்றும் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் சட்டப்படி வேலைப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக கப்பட்ட இந்தப் போராட்டம் காரணமாக விமான நிலைய செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் பல்வேறு ஊழல் சம்பவங்களின் பேரில் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட அதிகாரிகள் சிலரை மீண்டும் வேலையில் இணைத்துக் கொள்ளுமாறு கோரியே இந்த சட்டப்படி வேலை என்ற போராட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக விமான நிலையத்தினூடாக இலங்கைக்கு வரும் மற்றும் இலங்கையை விட்டு வெளியே செல்லும் பயணிகள் தாங்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர்.

வழமையாக அரை மணித்தியாலத்துக்குள் நிறைவு செய்யப்படும் விமான பயணிகள் குடிவரவு, குடியகல்வுப் பதிவுகள் தற்போது நடைபெற்று வரும் சட்டப்படி வேலைப் போராட்டம் காரணமாக சுமார் 4 மணித்தியாலங்கள் வரை தாமத மாவதாக விமான நிலைய செயற்பாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, போலிக் கடவுச் சீட்டைப் பயன்படுத்தி நாட்டை விட்டு வெளியேற முடியாத அளவுக்கு கடவுச் சீட்டு தொடர்பான சகல நடவடிக்கைகளும் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளதால் எந்தவிதத்திலும் அதிகாரிகள மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் மேர்வின் விஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

அத்தகைய மோசடி நடவடிக்கைகளில ஈடுபட்டு வந்த அதிகாரிகள் சிலரே கடந்த காலங்களில் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டனர் எனவும் -

இது போன்ற மோசடியுடன் தொடர்புடைய அதிகாரிகள் சிலரே தற்போது இந்தச் சட்டப்படி வேலை என்னும் போராட்டத்தை நடத்துகின்றனர் எனவும் - அவர் மேலும் குறிப்பிட்டார். (க)

### பரீட்சை நிலையமல்லாத பாடசாலைகள் இன்று ஆரம்பம்

குருநகர்,ஏப்.27

ஜி.ச.ஈ, உயர்தரப் பரீட்சை நிலையங்களாகச் செயற்படாத அரச பாடசலைகள் இரண்டாம் தவணைக்காக இன்று மீண்டும் ஆரம்பமாகவுள்ளன. இதேவேளை கடந்த 19ஆம் திகதி ஆரம்பித்த பாடசாலைகள் ஜி.ச.ஈ. உயர்தரப்பரீட்சைக்காக எதிர்வரும் 30ஆம் திகதி மூடப்பட்டு மீண்டும ஜூன் மாதம் 2ஆம் திகதி திறக்கப் படவுள்ளன.

(ஒ-51)

### விளையாட்டு நிகழ்வுகள்

கைதடி, ஏப்.27

கைதடி மத்தி குமாரநகர் அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கல்விப் பூங்கா வளர்ச்சிக் குழுத் தலைவர் திருமதி நா.கனகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்

(எ-75)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.27

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான எவரெடி வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டி இன்று யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இதில் கண்டி லீக் அணியை எதிர்த்து யாழ் லீக் அணி மோதவுள்ளது

(ஒ-12)

# எழுதுமட்டுவாழ் பாடசாலை இவ்வாரம் மீண்டும் இயங்கும்

தென்மராட்சி,ஏப்.27

கடந்த நான்கு வருடங்களாக மூடப்பட்டிருந்த எழுதுமட்டுவாழ் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இரண்டாம் தவணைமுதல் மீண்டும் இயங்கவுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் காணப்பட்ட இப்பாடசாலையை மீண்டும் ஆரம்பிக்கக் கோரி இப பகுதி மக்கள் போராட்டங்கள் மேற்கொண்டதையடுத்து கடந்த மாதம் இப்பாடசாலை படையினரால் கையளிகப்பட்டது. இப்பாடசாலையை இவ்வாரம் மீண்டும ஆரம்பிப்பதற்காக பாடசாலை வளாகம் இன்று அப்பகுதி மக்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது. இந்நிகழ்வில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# பட்டமளிப்பு விழா முடிவடைந்தும் சான்றிதழ் வழங்குவதில் தாமதம்

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்.பல்கலைக்கழகத்தின் இவ் வருட பட்டமளிப்பு விழா முடிவடைந்த போதும் பட்டம் பெற்றவர்களுக்கு பட்டச்சான்றிதழ் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகச் சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்பல்கலைக்கழகத்தின் 23வது பட்டமளிப்பு விழா கடந்த மார்ச் 27ஆம் திகதி இடம்பெற்றது.

வழமையாக பட்டமளிப்பு விழா இடம்பெற்ற பின்னர் பட்டமளிப்பு விழாவுக்கென தாம் பெற்ற கோலவுடை போன்றவற்றை பட்டம் பெற்றவர்கள் மீள ஒப்படைக்கும் போது பட்டசசான்றிதழ்கள் வழங்கப்படும்.

ஆனால, தற்போது பட்டமளிப்பு முடிவடைந்து ஒரு மாதம் ஆகிய நிலையில் உயர்பட்டப்பீடத்தில் கற்கை முடித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு இதுவரை சான்றிதழ்கள் வழங்கபடவில்லை என்று கூறப்படுகிறது.

பட்டச்சான்றிதழ் தொடர்பாக உயர்பட்ட பீடாதிபதி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது பட்டச சான்றிதழ்களில் பெயர், விவரங்கள் எழுதும் பணி நிறைவு பெறவில்லை என்றும் -

எழுதப்பட்டவுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-185)

## மினிபஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனர். மினிபஸ்ஸின் ஜன்னலோர இருக்கையில் ஜுபிற்றா அமர்ந்திருந்தார். பருத்தித்துறை ஓடக்கரைப் பகுதியில உள்ள குறுகலான வீதி ஒன்றில் மினிபஸ் சென்று கொண்டிருந்தது அப்போது ஜுபிற்றா மினிபஸ்ஸின் ஜன்னலூடாகத் தலையைவெளியே நீட்டி வேடிக்கை பார்த்தார். அவ்வேளையில் வீதியோரம் இருந்த மின்கம்பத்தில் ஜுபிற்றாவின் தலைமோதியது இதில் அவர் படுகாயமடைந்தார்.

ஆபத்தான நிலையிலிருந்த அவரை உடனடியாக மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். அங்கு அவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம தொடர்பான விசாரணையைப் பருத்தித்துறைப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-70-173)

## குருநாகலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்பாறைப் பகுதிகளில் கருணா குழுவினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது தப்பிவந்த நபராக இவர் இருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அருகில் உள்ள வீடுகள் பொலீஸாரால் சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

குருநாகல் பகுதியில் சந்தேகத்துக்கிடமாக நடமாடும் நபர்கள் பற்றியும் பொலீஸார் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுக்காலை கொழும்பிலிருந்து சென்ற இரகசியப் பொலீஸாரும் இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (க)

## சு.கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வப் பயிற்சிபெற்ற பாதுகாவலர்களையும் கொண்ட மகாவலி அமைச்சை ஏற்கனவே இரண்டுமுறை ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பிக்கு வழங்குவதா என்ற எண்ணத்தில் அந்த அமைச்சை வழங்காமல் ஜனாதிபதி இழுத்தடித்து வந்தார் எனவும் கூறப்பட்டது. தற்போது காணப்பட்டுள்ள இணக்கத்தின்படி மகாவலி அபிவிருத்தி அமைச்சு ஸ்ரீ.ல.சு.க.அமைச்சர் ஒருவரின் பொறுப்பிலும் - மகாவலி அபிவிருத்தி வலயப்பிரதேசங்களைச் சார்ந்த விவசாய நடவடிக்கைகள் அனைத்தும் ஜே.வி.பி.அமைச்சர் பொறுப்பிலும் இருக்கும்.

இதற்காக முழுமையான அதிகாரங்களைக் கொண்ட அதிகார சபையை நிறுவுமாறு ஜனாதிபதி தெரிவித்த யோசனையை ஜே.வி.பியின் உயர் மட்ட உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## எப்படியும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருதப்படுகின்றது.

தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்குத் தெரிவான ஜனாதிபதியின் ஊடகத்துறைப் பணிப்பாளர் ஜனதாஸபீரிஸ் நாடாளுமன்றப் பதவியை விட்டுக்கொடுத்து முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க நாடாளுமன்றம் செல்ல வழிவிட்டுள்ளார். தேசியப்பட்டியல் உறுப்பினர் ஈ.ஏ.டி.சி.வீரசேகரவே ராஜினாமாச் செய்யவைத்து அந்த இடத்தில் சட்டவல்லுநர் ஒருவரை நியமிப்பதன் மூலம் அவரை அரசமைப்பு அமைச்சராக்குவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுவருகின்றார் என்றும் கூறப்படுகின்றது.

இதேசமயம் திருமதி மேரி லுசிடா தமது உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்து அந்த இடத்தை தமது கணவர் மேர்வின் சில்வாவுக்கு கொடுக்க விருக்கிறார். மேர்வின் சில்வாவுக்கு ஆசனம் ஒன்று தரப்படும் என ஜனாதிபதி ஏற்கனவே வாக்குறுதி அளித்துள்ளார்.

இதேவேளை, ஜெனரல் ரத்வத்தயின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுமானால் அரசமைப்பு பிரதி அமைச்சர் ஒருவரை நியமிக்கும் ஜனாதிபதியின் திட்டம் பாதிக்கப்படும் அதேவேளை அவரையும் ஓர் அமைச்சராக நியமித்தால் 35 பேருக்கு மேல் அமைச்சரவை உறுப்பினர்கள் இருக்கலாகாது என்ற ஜே.வி.பியுடனான ஒப்பந்தத்தை மீறுவதாகவும் இருக்கும் என்று கருதப்படுகிறது. (ப)

# மோ.சைக்கிள் - லாண்ட்மாஸ்ரர் மோதிக்கொண்டதில் ஒருவர் பலி!

## உடுப்பிட்டியில் சம்பவம்

கரவெட்டி,ஏப்.27

மோட்டார்சைக்கிளும் லாண்ட் மாஸ்ரர்வாகனமும் மோதிக் கொண்ட விபத்தில் மோட்டார் சைககிளின் பின் இருக்கையில் அமர்ந்து பயணித்தவர் உயிரிழந்தார்.

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமைக் காரியாலயத்துக்கு அருகே நேற்று முற்கல் 10 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றது.

விபத்தில் சம்பந்தப்பட்ட மோட்டா சைக்கிளைச் செலுத்திவந்தவரான கம்பர்மலையைச்சேர்ந்த எஸ்.இராமு என்பவரை பொலஸார் தடுத்து வைத்துள்ளனர்.

தன்னுடன் வந்தவர் தனக்கு அறிமுகமில்லாதவர் என்றும் - தென்மராட்சிப் பகுதியில் நின்றிருந்த அவர், வடமராட்சி வரை உடன் வருகிறேன் என்று கேட்டு மோட்டார் சைககிளில் ஏறி வந்தார் என்றும் - பொலீஸாரிடம் எஸ்.இராமு தெரிவித்துள்ளார்.

இறந்தவருக்கு சுமார் 55 வயதிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. அவரது சடலம் அடையாளம் காண்பதற்காக மந்திகை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. சடலத்தில் பச்சைக்கோடிட்ட வெள்ளைச்சாரமும், வெள்ளை மேற்சட்டையும் அதன் கையில் தானியங்கிக் கடிகாரமும் காணப்பட்டன. விபத்தில் சம்பந்தப்பட்ட லாண்ட்மாஸ்ரர் வாகனத்தின் சாரதி விபத்தையடுதது வாகனத்துடன் தலைமறைவானார். பொலீஸார் அவரைத் தேடிவருகின்றனர். (ஒ-70-173)

## மட்டு.ஆயித்தியமலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாத நிலையில் ஒரு போராளியுமாக நான்கு பேர் அந்த முகா மில் அச்சமயத்தில் இருந்தனர்.

திடீரென வெள்ளைவானில் வந்து புகுந்த நால்வர் அவர்களைச் சுட்டுக்கொன்று முகாமில் குண்டுகளை வெடிக்கவைத்து வெறியாட்டம் நடத்திவிட்டுத் தப்பி ஓடினர்.

பின்னர் வவுணதீவு இராணுவ முகாமை அண்டிய புலிகளின் முன்னரங்கக் காவல் நிலைகளை நெருங்கிய அக்குழு, அங்கு கடமையிலிருந்த மூன்று புலிகளைச் சுட்டுக்கொன்றது.

பின்னர் அக்குழு இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அந்த வெள்ளை வானிலேயே தப்பிச்சென்றது என அப பகுதிப்பொதுமக்கள் தகவல் வெளியிட்டிருக்கிறார்கள். உடல் ஊனமுற்ற விடுதலைப் புலிகள் தங்கியிருந்த முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கப்டன் சிசில்குமார் (பழுகாமம்), கப்டன் பாமகாந்த் (கிரான்), லெப்டினன்ட் விநோ (கொடுவாமடு), இரண்டாம் லெப்டினன் காரணன் (ஆயித்திய மலை - நெல்லிக்காடு) ஆகியோர் உயிரிழந்தனர்.

முன்னரங்கக் காவலரண் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் கப்டன் தியானேஸ்வரன் (நடராஜா சுரேஷ் - சவுக்கடி, மட்டக்களப்பு), லெப்டினன்ட தனுஷன் (செல்வத்துரை யசிந்தன் - வாகரை, மாங்கேணி), இரண்டாம் லெப்டினன்ட் செல்வவீரன் (சேதுநாதப் பிள்ளை பிரதீபன் - சித்தாண்டி) ஆகியோர் மரணமானார்கள்.

முள்ளாமுனையில் உடல் ஊனமுற்ற புலிகள் தங்கியிருந்த முகாம் மீது தாக்குதல் நடத்திய சமயம் அங்கு நின்ற பத்து டிராக்டர்கள், மூன்று மோட்டார் சைக்கிள்கள், அரிவு வெட்டும் கருவிகள் - நான்கு சுடுமிதிக்கும் கருவிகள் - மூன்று என்பவற்றை தாக்கி சேதப்படத்திய பின்னரே அக்குழு அங்கிருந்து தப்பிச்சென்றிருக்கின்றது.

அங்கு அக்குழுவினால் வீசப்பட்ட - வெடிக்காத - குண்டு ஒன்றும் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

தாக்குதல் நடத்தியோர் வவுண தீவு இராணுவமுகாம் அமைந்துள்ள திசையைநோக்கி வானில் தப்பிச்சென்றதைத் தாங்கள் கண்டனர் எனப் புலிகள் முகாம் பகுதிப்பொதுமக்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இ.கௌசல்யன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறையிடடதை அடுத்து, அவர்கள் சம்பவ இடத்தை நேரடியாக வந்து பார்வையிட்டனர்.

அரச படைகளுடன் சேர்ந்து இயங்கும் குழுவினரே இந்தக் கொடூரத்தைப் புரிந்துள்ளதால் இது குறித்து இராணுவத்துடன் நேரடியாகப் பேச வேண்டியுள்ளது என்றும் -

அதற்கான சந்திப்புக்கு ஏற்பாடு செய்யுமாறும் விடுதலைப் புலிகளின மட்டக்களப்பு, அம்பாறை அரசியல் துறைப் பிரிவினர் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவைக் கோரியிருக்கினறனர்.

இதேவேளை,

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து ஞாயிறு இரவு 11.30 மணியளவில் வந்த கருணா குழுவினரே ஆயித்தியமலையில் விடுதலைப் புலிகள் இயக்க போராளிகள் ஏழு பேரைப் படுகொலை செய்திருக்கிறார்கள் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்திருக்கின்றார்.

போர்நிறுத்தக் கண்காணிப்பு வட்டாரங்கள் இத்தகலை வெளியிட்டிருககின்றன.

புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் இவ்விடயம் தொடர்பாக தங்களிடம் உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்திருக்கின்றார் என்றும் -

தங்களின் கண்காணிப்பாளர்கள் நிலைமையை நேரில் கண்டறிவதற்காக சம்பவ இடத்துக் சென்றுள்ளனர் என்றும் -

கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் நேற்று பிற்பகல் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் குறித்து ஸ்ரீலங்கா இராணுவத்தின் பேச்சாளரிடம் கேட்ட போது, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசததில் நடந்த சம்பவங்கள் குறித்து தங்களுக்கு ஏதும் தெரியாது எனவும் -

ஆனால், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் குறிப்பிடத்தக்க சம்பவங்கள் ஏதும் இடம்பெறவில்லை எனவும் - அவர் கூறினார்.

(ஒ-க-9-12)

## இருவருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த இளைஞர் ஒருவரை கும்பல் ஒன்று வழிமறித்து வெட்டியது. இதில் அவர் வலது காலில் வெட்டுக் காயமடைந்தார்.

இணுவில், காரைக்காலில் நேற்றிரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற மறறொரு சம்பவத்தில் கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த முருகன் விஜி (வயது19) என்பவர் கையில வெட்டுக் காயத்துக்குள்ளானார். (ஒ-9-12)

## அரசமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட பின்னர் சிறு அரசியல் கட்சிகளைத் தனித் தனியாகச் சந்தித்துப பேச்சு நடத்தவும் ஜனாதிபதி எண்ணியுள்ளார் என்று தெரிகிறது.

புதிதாக உருவாக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள அரசமைப்பில் இரணடாயிரமாம் ஆண்டில் பொ.ஐ.முன்னணி அரசின் மூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட அரசமைப்புத் திருத்தங்களை, சிறு மாறுதல்களுடன் சேர்ததுக்கொள்ள ஜனாதிபதி எண்ணியுள்ளார் என்று கூறப்படுகிறது.


**LOGIC**

கருத்தரங்கு

By:- S.R.J.சுதன்

S.கெங்கா

இடம்: வியாப்பிஸ் கல்வி நிலையம் கிராமக்கோடு பருத்தித்துறை.

காலம்:- 28.04.04 - 2.30 p.m. (புதன்)

(31376)(36)



**புவியியல்**

பிரத்தியேக வகுப்பு

2005/2006

புதிய பிரிவு ஆரம்பம்

இடம் -விக்னேஸ்வரா ம.வி. முன்பாக, மீசாலை

காலம்-28.04.04 - 4.00 (பு.நே)

ஆசிரியர் - இ.நித்தி.

(31373)(11-13-36)



**முக்கிய அறிவித்தல்**

பிறமாவட்டங்களில் நடைபெற்ற இரசாயனவியற் கருத்தரங்கு காரணமாக தற்காலிகமாக தடைப் பட்டிருந்த வகுப்புக்கள் இன்றிலிருந்து வழமைக்கு திரும்புகின்றன.

★ Model paper

NEW SCIENCE CENTRE இல்

30.04.2004 =>9.30 a.m.

பின்வரும் நிறுவனங்களில் வழமையான நேர அட்டவணைப்படி வகுப்புகள் ஆரம்பம்

★ NEW SCIENCE CENTRE -யாழ்நகர்

★ NEW SCIENCE ACADEMY -நெல்லியடி

★ ஞானோதயா - சாவகச்சேரி

★ ஈசன் -கோண்டாவில்

★ PERSONAL CENTRE - சுண்டுக்குழி

★ CHEMISTRY CENTRE -நல்லூர்.

(34678)(36-11-13)

அன்பழகன்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.